

கல்கி
KALKI 10-1-82 ரூ
அடுத்த இதழில்:
செம்பியன்
எழுதும்
ரவிகுல
திலகன்
சரித்திரத் தொடர் கதை


புலரும் இன்றைய
என் பொழுது
மகிழ்வாய்
மலருமே
பொங்கும்
மகிழ்வைக் கூட்டுமே
மஃபத்லால்
துணிகள்
மட்டுமே
மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்
MF-123 TAM

பல்வலிக்குப் பாட்டு தலைவலிக்கு - தில்லானா!

- லலிதா செல்லையா



''சங்கீதத்தினால் நோய்களைக் குணப்படுத்த முடியும்''
-டாக்டர் பாலமுரளிகிருஷ்ணா பேட்டி
(கல்கி 20-12-81)

கண்ணன்: டாக்டர் ஏன் திடீர்னு சங்கீதம் கத்துக்கறார்?

முரளி: சங்கீதத்தினால் நோயைக் குணப்படுத்த முடியுமாமே. ஊசி போடச் சொல்லறவங்களுக்கு ஊசிபோட்டும், பாட்டுப்பாடச் சொல்லறவங்களுக்குப் பாட்டுப்பாடியும் நோயைக் குணப்படுத்தத்தான் கத்துக்கறார்.

•

பாகவதர்: என்னங்க இது? தலைவலிக்காரர்கள், முதுகு வலிக்காரர்கள் என்று நோயாளிகளாகவே கூட்டம் நிரம்பி வழியறது சபாவில்?

காரியதரிசி: என்னங்க பண்றது. சங்கீதத்தினால் நோய்களைக் குணப்படுத்த முடியும் என்ற விஷயம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டதே. கச்சேரி என்றால் நோயாளிங்கதான் வரா.

•

பாகவதர்: ஐம்பதுபேர் சீட்டு தந்திருக்கா. என்னபாட்டு பாடணுமாம்?

வயலின் வித்வான்: உங்க பாட்டைக் கேட்டதில் தலைவலி வந்து விட்டதாம். தலைவலி போக்கற ராகத்தில் பாட்டுபாடச் சொல்லித்தான் சீட்டு தந்திருக்கா!

•

கண்ணன்: டிக்கட்டில் ஸ்பெஷல் சார்ஜுன்னு போட்டிருக்கே என்ன?

முரளி: சாதாரண ரசிகர்களுக்கு ஐந்து ரூபாய். நோயாளிகளுக்கு அதே டிக்கெட் பத்து ரூபா.

•

கண்ணன்: பாகவதருக்கு இப்ப நிறைய சான்ஸ் வருது.

முரளி: எந்த சபாவில்?

கண்ணன்: சபாவிலா? ஆஸ்பத்திரியில் வந்து பாடச் சொல்லி அல்லவா கூப்பிடறா!

•

கண்ணன்: சங்கீதத்தினால் வியாதிகளைக் குணப்படுத்த முடியும் என்ற விஷயம் என் மனைவிக்குத் தெரிந்து விட்டது தப்பாப் போச்சு.

முரளி: ஏன்? என்ன ஆச்சு?


கண்ணன்: தலைவலி ஜுரம் என்றால் போதும். எதிரே அமர்ந்து பாட ஆரம்பிச்சுடறா தலைவலி போய் மண்டை இடி வந்து விடுகிறது!

•

கண்ணன்: பாடத் தெரிந்த பெண்தான் உன் மகனுக்கு மனைவியா வரணும்னு ஏன் ஆசைப்படறே?

முரளி: பாட்டினால் வியாதியைப் போக்க முடியுமாமே. டாக்டர் செலவைக் குறைக்கலாமே என்ற ஆசையில் தான்.

(டாக்டர் பாலமுரளி மன்னிப்பாராக!)



இவங்களை ஒழிச்சுக்கட்டிடுவேன்!
வி.பி.சிங்
உ.பி. கொள்ளையர்
ஆந்திர மேலவைத் தேர்தலில் இ.காங்கிரஸ் வேட்பாளர்கள் தோல்வியடையச் சதி செய்த கட்சிக்காரர்கள் பற்றி பிரதமரிடம் அஞ்சையா புகார் செய்துள்ளார்.
அதிருப்தியாளர்
அஞ்சையா
பஞ்சாயத்து தேர்தலில் போட்டி
பஞ்சாயத்து தேர்தலில் போட்டி
குஞ்சா இருந்தா என்ன.. கத்தியைப் பாருங்க!
இ. அகில காங்கிரஸ்
350 இடங்களில் போட்டி

கேலிக் கூத்து!

''மது விலக்கை ரத்து செய்யவில்லை; தளர்த்தியிருக்கிறோம். நான் பதவி துறப்பதற்கு முன் மீண்டும் தீவிரமாக மதுவிலக்கை அமல்படுத்துவேன்'' என்று எம்.ஜி.ஆர்., அரசாங்கமே ஏற்பாடு செய்த ராஜாஜி விழாவில் பேசியது அந்த மகானைக் கிண்டல் செய்து அவமதித்தது போலிருந்தது.

தெருவுக்குப் பெயர் மாற்றுவது போலவும், பாம்பு சட்டையை உறிப்பது போலவுமா அரசாங்கம் தன் கொள்கைகளை மாற்றிக் கொண்டிருப்பது? நேற்று ஒரு கொள்கை, இன்று ஒரு கொள்கை, நாளை ஒரு கொள்கையா?

வீதிக்கு இரண்டு கள்ளு, சாராயக்கடைகள், பேட்டைக்கு நாலு ஒயின் ஷாப்கள் என்று திறக்க அனுமதி அளித்து விட்டு, 'வருவாய் கருதித் தளர்த்த வில்லை; கள்ளச் சாராயத்தை ஒழிக்கத்தான்' என்பதும், மக்கள் நலனில் ஏதோ ரொம்ப அக்கறை உள்ளது போல் பேசுவதும், கேலிக் கூத்து!

தேவைப்பட்டது வெள்ளித்திரையில் தான். மேக்அப் போட்டு நடித்ததே நன்றாயிருந்ததே!

நீதிமன்ற பீஷ்மர்கள்

இந்த இதழில் ம.பொ.சி., துரியோதனன் அவையில் பீஷ்மரின் நிலையைச் சித்திரித்திருக்கிறார், பாரதி வாக்கால். தருமன் தன்னையே தோற்ற பிறகு பாஞ்சாலியைப் பணயம் வைத்தது தர்மமல்ல என்று பீஷ்ம பிதாமகருக்குப் புரிகிறது. ஆனால் சாத்திரப்படி பார்க்கையில் அவரே அதை நியாயப்படுத்தவும் வேண்டியிருக்கிறது. நமது நீதிபதிகளுக்கும் இதுபோன்ற நிலைமைகள் பல சந்தர்ப்பங்களில் ஏற்படுகிறது!

தேசிய பாதுகாப்புச் சட்டம் பற்றிய வழக்கானாலும் சரி, கறுப்புப் பணப்பத்திரம் பற்றிய வழக்கானாலும் சரி, நீதிபதிகளை மாநிலத்துக்கு மாநிலம் மாற்றுவது பற்றிய வழக்கானாலும் சரி, நீதிபதிகள் தீர்ப்பு வழங்கும் போது அவற்றையெல்லாம் சட்டப்படி நியாயப் படுத்தினாலும் கூடவே அவற்றில் உள்ள ஆபத்துக்களையும், அதர்மங்களையும் எடுத்துக்காட்டி எச்சரித்தும் இருக்கிறார்கள். எந்த விதமாக இந்தச் சட்டங்கள் துஷ்பிரயோகமாகலாம் என்பதை விரிவாகக் கூறியுள்ளார்கள்.

மெய்யான ஜனநாயகத்தில் மாற்றுக் கருத்துக்களை மதிக்கும் பண்புடைய ஆட்சியாளர்கள் இந்த எச்சரிக்கைகளை யெல்லாம் கருத்தூன்றிப் படித்துப் பார்த்தால் இவ்வளவு முன் ஜாக்கிரதைகளை மேற்கொண்டு இந்தச் சட்டங்களை நேர்மை பிறழாமல் அமல்படுத்துவது அசாத்தியம் எனக் கண்டு அவற்றை வாபஸ் பெறுவார்கள். ஆனால் இங்கு நடப்பதோ துரியோதனன் ராஜ்யமாக இருப்பதால் தீர்ப்பின் பின்னணியில் கூறப்பட்டிருப்பனவற்றை அலட்சியம் செய்து, ஆட்சியிலிருப்போருக்குச் சாதகமான தீர்ப்பு என்று கருதிக் குதூகலிக்கிறார்கள்! இல்லாதபோனால் நீதிபதிகளை டிரான்ஸ்ஃபர் செய்வது பற்றிய வழக்கில் 1500 பக்கத்தீர்ப்பைப் படித்துப் பார்க்காமலேயே, தீர்ப்பு வந்த மறுகணமே, ''இது புத்தாண்டுப் பரிசு'' என்று மத்திய சட்ட அமைச்சர் கொக்கரிப்பாரா?

ஆசார்யோத்தமர்!

மிகச்சிறந்த தேசப்பணியாற்றுகிறவர்களை வந்தடைகிறது ''தேசிகோத்தமர்'' என்ற பட்டம். தமது இசைச் செல்வத்தைத் தேச ஒருமைப்பாட்டுக்கும் இறையுணர்வை ஊட்டவுமே பயன்படுத்தி வருவதுடன் அந்தக் கலை மூலம் கிடைக்கும் திரு அனைத்தையும் நற்பணிகளுக்கே அர்ப்பணித்து வாழ்நாளையெல்லாம் பிறரை மகிழ்விக்கவே சாசனம் செய்து விட்ட ஸ்ரீமதி எம். எஸ். அவர்களை சாந்திநிகேதன் விசுவபாரதி பல்கலைக் கழகம் ''தேசிகோத்தமர்'' என்ற உன்னதமான விருதை வழங்கிக் கௌரவிக்க முன் வந்ததில் வியப்பேது

1982 ஜனவரி 10
துன்மதி மார்கழி 26
மலர் : 40 இதழ் : 24



கல்கி


தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மில்லை. ஏற்கெனவே இந்தப் பல்கலைக்கழகம் அளித்த டாக்டர் பட்டத்தையும் வேறு பல நிறுவனங்களின் விருதுகளையும் தமது எளிமை காரணமாகச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டிருக்கும் ஸ்ரீமதி எம்.எஸ்., இந்தத் தேசிகோத்தமர் என்ற பட்டத்தையும் பண்பாடு கருதித் தட்டமுடியாமல் ஏற்ற போது, ''நான் என்றும் சிஷ்யோத்தமராக இருக்க ஆசி நல்குங்கள்'' என்று கேட்டுக்கொண்டதிலும் வியப்பில்லை. அவர் அடக்கம் நாடறிந்த ஒன்று.

இவ்விதம் ஸ்ரீமதி எம்.எஸ். கூறியபோது, இந்த இசை விழா மாதங்களில் கச்சேரி செய்யும் நூற்றுக் கணக்கான இளம் இசைக் கலைஞர்களுக்குச் சிறந்த அறிவுரையை வழங்கியவராகி, ஆசார்யோத்தமராகவும் விளங்குகிறார்!

அலசல்:

10-கட்சிகள் என்ன செய்யும்?



பஞ்சாயத்துத் தேர்தலில் பத்துக்கட்சிக் கூட்டணி யாருடன் கூட்டுச் சேரும்?

''எதிர் காலத்தில் இந்திரா காங்கிரசுடன் கூட்டு இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்தாலன்றி அ. தி. மு. க.வுடன் கூட்டு என்ற பேச்சுக்கு இடமே இல்லை'' என்று கூறுகிறாராம் நெடுமாறன். ஆனால் இந்த உறுதிமொழியைக் கொடுக்க எம். ஜி. ஆர். தயாராக இல்லை.

கம்யூனிஸ்டுகளோ, தேர்தலுக்குத் தேர்தல் மாறும் கூட்டுக்கள்தானே என்றும், செல்வாக்குள்ள ஒரு கட்சியுடன் கூட்டணி வைத்துக்கொண்டு முடிந்தவரை பத்துக் கட்சிக் கூட்டணியினர் பதவியைப் பெற முயல வேண்டும் என்றும் கூறுகின்றார்களாம்.

'அ.தி.மு.க.வின் கதவுகள் திறந்தே இருக்கின்றன' என்று எம். ஜி. ஆர். அறிவித்துவிட்டார். ''இந்தத் தடவை இந்திரா காங்கிரஸ் நிச்சயமாக அ. தி. மு. க.வுடன் கூட்டுச் சேரப் போவதில்லை. அதனால் நாம் அ. தி.. மு. க.வுடன் கூட்டுச் சேருவதில் தவறில்லை என்று கா. கா. தே. காவில் ஒருசிலர் கூறுகின்றனர். ஆனால் கூட்டு சம்பந்தமாக இறுதி முடிவு செய்யும் அதிகாரம் குமரிஅனந்தனுக்குத்தான் இருக்கிறது.

இருப்பத்தூரில் கை கழுவி விடப்பட்ட பத்துக் கட்சிகளையும் எப்படியாவது பஞ்சாயத்துத் தேர்தலில் தம்மோடு சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதில் எம். ஜி. ஆர். மிகவும் தீவிரமாக இருக்கிறார் என்று கூறப்படுகிறது. அவர் Feelers (தூதர்களை) அனுப்பிப் பத்துக் கட்சித் தலைவர்களில் நான்கு முக்கியமான தலைவர்களைத் தொடர்பு கொள்ளச் சொல்லியிருக்கிறார் என்று நம்பப்படும் வட்டாரங்களிலிருந்து தகவல்.

நடக்கப்போகும் பஞ்சாயத்துத் தேர்தல்கள் கிட்டத்தட்ட ஒரு பொதுத் தேர்தல் மாதிரிதான். 375 பஞ்சாயத்து யூனியனிலும் அ. தி. மு. க. போட்டியிட்டால் பிரசாரம் செய்ய நேரமும், செலவும் அதிகமாகத் தேவைப்படும் என்றும், இருக்கும் நாட்கள் மிகவும் குறைவு என்றும், அதனால், இந்தப் பத்துக் கட்சிகளை அ.தி.மு.கவுடன் கூட்டுச்சேர வைத்து விட்டால், அ.தி.மு.க. வெற்றிபெற வாய்ப்புள்ள யூனியன்களை வைத்துக் கொண்டு மற்றதைப் பத்துக் கட்சிகளுக்கும் பிரித்துக் கொடுத்துவிடலாம் என்றும் அ.தி.மு.க.வினர் கூறுகிறார்களாம்.

தி.மு.க.வுடன் உறவு வைத்துக்கொள்வீர்களா? என்று கேட்டதற்கு, பத்துக் கட்சியைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவர் கூறியது:

''தி. மு. க.வினர் ரகசியமாக எங்களை அணுகினார்கள் என்பது உண்மை. பால் கமிஷன் சம்பந்தமாக எழுந்த விஷயங்களில் தி. மு. க.—வை ஆதரித்து நாங்கள் கருத்துக்கள் வெளியிட்டோம். அதை உறவுக்கு ஒரு படிக்கல்லாக தி. மு. க.வினர் பயன்படுத்த விரும்புகிறார்கள்.''

சந்தர்ப்ப வாத அரசியலில் ஈடுபடும் தி. மு. க. அல்லது அ. தி. மு.—க., இந்த இரு கட்சிகளில் ஏதாவது ஒன்றோடு கூட்டு வைத்துக் கொள்வதைவிட பத்துக் கட்சிக் கூட்டணி தனியாகவே போட்டியிடலாம் என்று சிலர் கூறுகின்றனர்.

இதற்கிடையில் பெண்களுக் கென்றும், தாழ்த்தப்பட்டவர்களுக்கென்றும் சில பஞ்சாயத்துக்களை ஒதுக்குகிற தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் ஏராளமான ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மறுபடியும் பஞ்சாயத்துத் தேர்தல்கள் ஒத்திப் போடப்படுமானால் வியப்பில்லை.

-நமது நிருபர்

உங்கள் குழந்தை பாரதி

மகாகவி பாரதியின் கொள்ளுப் பேத்தி, குழந்தை பூர்ணிமா தோட்டத்தில் பறித்த பூக்களுடன் வீட்டுக்குள் ஓடி வந்தாள். ''எதுக்குக் கூப்பிட்டே அப்பா?'' என்றாள் தகப்பனார் ரவிச்சந்திரனிடம்.

''முக்கியமான வேலை இருக்கும்மா, கண்ணு! கொள்ளுத் தாத்தாவை மனசிலே நினைச்சுக்கிட்டு இந்தக் கூடையிலிருந்து ஒரு சீட்டை எடு பார்க்கலாம்!'' என்றார் தகப்பனார்.

குழந்தை கண்ணை மூடிக் கொண்டு கூடைக்குள் கைவிட்டுத் துழாவி ஒரு சீட்டை எடுத்தாள். அப்பா—ரவிச்சந்திரன் பிளாஸ்டிக் கூடையை நன்றாகக் குலுக்கி வைத்தார். இன்னொரு சீட்டையும் எடுத்தாள் ஆறு வயதுச் சிறுமி பூர்ணிமா. இப்படியே தொடர்ந்து பத்துச் சீட்டுகளை செல்வி பூர்ணிமா தன் அழகிய பிஞ்சு விரல்களால் எடுத்துத் தந்தாள், கல்கி நிறுவனம் சார்பில்.

பிறகு கொள்ளுத் தாத்தாவின் கட்டளைக் கிணங்க சற்றும் ஓய்ந்திராது ஓடி விளையாடப் போய்விட்டாள்!

''எங்கள் குழந்தை பாரதி'' என்ற வாசகம் தாங்கி நமது காரியாலயத்துக்கு வந்த உறைகள் 35. அனைத்துக்கும் வரிசை எண்கள் தந்து பரிசீலித்ததில் ஐந்து முடிவு தேதிக்குப் பிறகு வந்ததால் ஏற்கப்படவில்லை. மற்ற முப்பதில் ஒரு சான்றிதழில் குழந்தை பிறந்த தேதி தவறாக இருந்ததால் அது ஒதுக்கப் பட்டது. மேலும் மூவர் குழந்தைக்குப் பாரதி என்ற பெயரோடு வேறு பெயரும் இணைத்து எழுதியிருந்தனர். எனவே இவற்றையும் தள்ளி மற்ற 26 கூப்பன்களுள் பத்து அதிர்ஷ்டக் குழந்தைகள் தேர்ந்தெடுக்கப் பட்டன. தலா ரூ. 50 பரிசு பெறும் அந்த அதிர்ஷ்டக் குழந்தைகள்:

கூப்பன் நெ.	4	பாரதி	அன்னை சீதாலக்ஷ்மி 28, பெரிய அரிசிக்காரத் தெரு, கிழவாயில், தஞ்சாவூர்
,,	5	பாரதி	அன்னை: கனிமொழி 583-3, பாரதி ரோடு, திருவல்லிக்கேணி சென்னை—5
,,	7	பாரதி	அன்னை: பொற்செல்வி திருவாசி போஸ்ட் திருச்சி ஜில்லா
,,	8	பாரதி	அன்னை: சாந்தி எரஹூர், ஏனாதி மங்கலம் போஸ்ட் விழுப்புரம் 607107
,,	14	பாரதி	அன்னை: சரஸ்வதி பிரகாஷ் டெய்லரிங் ஹவுஸ், கடம்பூர்-627714
,,	15	பாரதி	அன்னை: செல்லம்மாள் ஊர்க்காவலன், 35, திருவள்ளுவர் காலனி, வைகை ரோடு, ஆண்டிப்பட்டி, மதுரை (மா.வ.)-626512
,,	20	பாரதி	அன்னை: வள்ளி எஸ். அருணாசலம், தெற்குத் தெரு, எராவிப்புதூர் கன்னியாகுமரி மாவட்டம்
,,	21	பாரதி	அன்னை: ஜீவரேகா சுப்பிரமணியம், 13, கிழக்குத் தெரு, ஆண்டிப்பட்டி, மதுரை (மா.வ.)-626512
,,	24	பாரதி	அன்னை: ஜான்ஸிராணி எஸ். சீனிவாசன், யுனைடெட் பாங்க் ஆஃப் இந்தியா, அக்ரஹாரம், ஹைலரிவாரி வீதி, குண்டூர் 522003
,,	27	பாரதி	அன்னை: மணிமேகலை 19, கணேசன் வீதி, ரத்தினபுரி, கோவை-27

போட்டியில் கலந்துகொண்ட மற்ற குழந்தைகளின் பெற்றோருக்கு ஆறுதல் பரிசுகளாக கல்கி பொங்கல் சிறப்பிதழ் அனுப்பிவைக்கப்படும். பாரதி நூற்றாண்டில் பாரதியார் பிறந்த டிசம்பர் 11ந் தேதியே பிறந்து, பாரதியார் பெயரையே சூடியுள்ள இந்தக் குழந்தைகள் எல்லாம் பாரதி போலவே புகழ்பெற வாழ்த்துகிறோம்.


நிகழ்ச்சி ஏற்பாடு: குண்டுமணி புகைப்படம்: உத்ரா

✕ பூர்ணிமா பாரதி தேர்ந்தெடுக்க..



✕ ரவி தம்பதி பரிசிலனை..




கல்கி
ஜனவரி 17
பொங்கல்-கிரிக்கெட்
சிறப்பிதழ்
அதிக பக்கங்கள்
அதே விலை
செம்பியன் எழுதும்
ரவிகுல திலகன்
சரித்திரத் தொடர் கதை
ஜெயந்தன் எழுதும்
கிளி
சமூகத் தொடர்
லக்ஷ்மி எழுதும்
சாதாரண மனிதன்
சமூகத் தொடர்

கீரன் எழுதும்

இலக்கியத்தில் இறை உணர்வு



பாக்கியராஜ் எழுதும் முழு நீள நாவல்

கங்கையில் நெருப்பு

அகஸ்தியன் நகைச்சுவைத் தொடர்

டூ லேட்


சித்திரம்—நடனம்

அபர்ணா நாயுடு

ராமு

சித்திரத் தொடர்:

நினைவெல்லாம் நித்யா



ரஞ்சி காட்டிய பாதையும்

வெற்றி தோல்வி இன்றி முடிந்த மூன்றாவது டெஸ்டை உன்னத நிலைக்குத் தமது கலைத் திறன் மிக்க செஞ்சுரியால் உயர்த்திய பெருமை குண்டப்பா விசுவநாத்தையே சேரும். இது அவரது 13வது டெஸ்ட் செஞ்சுரி. கவாஸ்கரின் அபார சாதனை இரண்டாவது டெஸ்டின் சிறப்பு எனில் மூன்றாவது டெஸ்டில் விசுவநாத்தின் ஆட்டம் முதலிடம் பெறுகிறது.

கடந்த பல ஆண்டுகளாக இந்திய பாட்ஸ்மென்களின் ஆட்டம் இரு கிரிக்கெட் பிதாமகர்கள் காட்டிய வழிகளிலேயே அமைந்து வந்துள்ளது. விஞ்ஞான ரீதியான அணுகுமுறையுடன் உள்ளுணர்வின் உந்துதலையும் கலந்து ஆடுவது ரஞ்சி வகுத்த பாதை. உள்ளுணர்வின் உந்துதலை அடக்கி விஞ்ஞான ரீதியான அணுகுமுறைக்குமட்டுமே முக்கியத்துவம் தருவது விஜய் மர்சண்ட் வகுத்த பாதை. விசுவநாத் ரஞ்சி பாணியிலும் கவாஸ்கர் மர்சண்ட் பாணியிலும் ஆடுகிறவர்கள். இந்த இருவரும் அண்மையில் போட்ட செஞ்சுரிகள் இந்த இருவித பாணிகளையும் துல்லியமாய் இனம் பிரித்துக் காட்டின.

வெற்றி வாய்ப்போ அல்லது தோல்வியை நெருங்கும் தருணமோ ஆட்டத்தின் அப்போதைய நிலை எதுவானாலும் கவலைப்படாமல் உற்சாகத்துடன் ஆடுபவர் விசுவநாத். ஒவ்வொரு பந்தையும் அதன் சிறப்பைக் கவனித்து அடிப்பார் அல்லது தடுப்பார். பார்வையாளருக்குப் படு குஷியாக இருக்கும் இவர் ஆட்டம். இந்த டெஸ்ட்டில் வெங்சர்க்கார், கவாஸ்கர், பட்டேல் எல்லோரும் அவுட்டான பிறகு விசுவநாத்தின் 107 ரன்கள்தாம் இந்திய அணியின் பலத்தையும் கௌரவத்தையும் நிலைநாட்டின.

உலகின் எந்த மூலை முடுக்கில் இருக்கும் கிரிக்கட் ரசிகரானாலும் ஸோபர்ஸ் என்ற பெயரை மதிப்பும் வியப்பும் கலந்துதான் உச்சரிப்பார். அத்தகைய மாபெரும் ஆட்டக்காரரின் சாதனையான 8032 டெஸ்ட் ரன்களைப் பாய்காட்முறியடித்தது சாமானிய விஷயமல்ல. இதை எல்லோரும் பாராட்டி வரவேற்றனர் என்றாலும் சிறிதளவு வருத்தமும் அதில் கலந்திருந்தது! ஓர் அதி அற்புதமான கலைஞரின் ரிகார்டை ஒரு திறமையான கைவினைஞர் முறியடித்து விட்டாரே என்றுதான்! ஸோபர்ஸ் எடுத்திருந்த ஒவ்வொரு ரன்னும் ஒரு ரத்தினம்! அது அஜயாசமான சாதனை. பாய்காட் அவரது ரிகார்டை முறி

○ பாய்காட், விசுவநாத்

படங்கள் - நன்றி: இந்தியன் எக்ஸ்பிரஸ்

பி.என். சுந்தரேசன்



யடிக்கப் பட்டிருக்கும் சிரமம் கொஞ்ச நஞ்சமல்ல. இதனால் 41 வயதான பாய்காட்டின் சாதனையை நான் குறைத்து மதிப்பிடுவதாகாது. 93 டெஸ்ட்களில் ஸோபர்ஸ் உருவாக்கிய ரிக்கார்டை முறியடிக்க பாய்காட்டுக்கு 107 டெஸ்ட்கள் தேவைப் பட்டன.

அலுப்புத் தட்டுகிற டிராவில் மூன்றாவது டெஸ்ட் முடிய முக்கிய காரணம் பந்து வீச்சுக்குச் சற்றும் உதவாத பிட்ச் தான். இதில் போலர்கள் வீசிய ஒவ்வொரு பந்தும் அவர்களுடைய மனச் சோர்வை அதிகரிப்பதாய் இருந்தது. இறுதி நாளன்று ரவி சாஸ்திரியும் மதன் லாலும் சௌக்கியமாக சுரணையற்ற அந்தப் பிட்சில் பாட்டிங் செய்து கொண்டிருப்பதைப் பார்த்த யாரும் வியந்திருப்பர்.

மட்டுமல்ல — நல்ல பாட்ஸ்மனும்கூட என்ற பெருமைக்குப் புதுப் புகழ் சேர்த்தார்.

மாட்சுக்கு முன்பாகப் பரபரப்பு ஏற்படுத்திய அம்சம் சென்னையைச் சேர்ந்த முகமது கௌஸ் அம்பயராக இருப்பதற்கு இங்கிலாந்து அணி ஆட்சேபனை எழுப்ப அது ஏற்கப்பட்டதும் அவருக்குப் பதில் டில்லியைச் சேர்ந்த ஸ்வரூப் கிஷன் நியமிக்கப்பட்டதும்தான். இதையொட்டி அம்பயர்கள் சப் கமிட்டித் தலைவரும் டெஸ்ட்களுக்கான விசேஷக் கமிட்டி அங்கத்தினருமான திரு ஸ்ரீராமன் தமது ராஜினாமாவைச் சமர்ப்பித்தார். அவர் கூறிய காரணம்:

கிரிக்கெட் போர்டு காரியதரிசி கண்மதிகார் இது குறித்து என்னுடன் ஃபோன் தொடர்பு கொண்டு பேசினார். கௌஸுக்கு எதிராக ஆட்சேபணை எழுப்பியவர்கள், மோசமான அம்பயரிங்குக்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்ட சம்பவம் எதையும் சுட்டிக் காட்டவில்லையாதலால் அந்த ஆட்சேபணையை ஏற்கத் தேவையில்லை என்று பேசி முடிவு செய்தோம். ஆனால் மறுநாள் காலை நாளிதழில் கௌஸ் நீக்கப்பட்ட விவரம் படித்து அதிர்ச்சியுற்றேன். முதல் முடிவுக்கும் இரண்டாவது முடிவுக்கும் இடையில் என்னை யாரும் கலந்தாலோசிக்கவில்லை. எனவே ராஜினாமாவைச் சமர்ப்பிப்பது என் தார்மீகப் பொறுப்பு எனக் கருதினேன்.

இது ஒருபுறமிருக்க, கவுஸுக்கு ஏற்பட்ட இந்த அவமதிப்பை, அவருக்கு எதிரான இந்த அதிர்ச்சி அளிக்கும் நடத்தையைக் கண்டித்து இந்திய அம்பயர்கள் சங்கம் ஒரு வார்த்தை கூட வெளிப்படக் கூறாதது வியப்பிலும் வியப்பு!

ஆங்கிலத்திலிருந்து தமிழாக்கம்:
குட்டி கிருஷ்ணன்

மர்ச்சென்ட் வகுத்த வழியும்

இவ்வாறு பிட்ச், பந்துவீச்சாளருக்குச் சற்றும் உதவுபடியாக இல்லாத தால் ஒவ்வொரு ஒவரும் போட்டு முடிய அதிக நேரம் பிடித்தது. இப்படியே மாட்சுகள் போர் அடித்துக் கொண்டே போனால் கிரிக்கெட் பைத்தியமான இந்திய ரசிகர்கள் கூடக் கிரிக்கெட் ஸ்டேடியம் பக்கம் போகத்தயங்குவார்கள்.

பாய்காட்டின் 105 தவிர டவாரே அடித்த 149ம் எண்ணிக்கையில் உயர்ந்திருந்தாலும் ரசிகர்களின் எண்ணத்தில் நிலைத்தது போதம்மின் ஆட்டம்தான். •38 நிமிஷங்களில் அவர் 47 எடுத்தார். இதில் நாலு ஸிக்ஸர்கள் இரண்டு பவுண்டரிகள். மூன்றாம் நாள் காலை மேலும் ஒரு ஸிக்ஸர் உள்பட பல ரன்கள் எடுத்துத் தமது எண்ணிக்கையை 66 ஆக உயர்த்திய பிறகு விடைபெற்றார்.

மதன் லாலின் 85 ரன்களுக்கு ஐந்து விக்கெட்டுகள் இந்த மாட்சின் தலைசிறந்த போலிங் முயற்சி.

ஃபாலோ ஆன் தவிர்க்கஇந்தியா இன்னும் 40ரன்கள்எடுத்தாகவேண்டுமே என்ற கவலை மிக்க கட்டத்திலிருந்து நிலைமை மாறி, இங்கிலாந்தின் எண்ணிக்கையை விட இந்தியா அதிகமாக எடுத்தது என்றால் அதற்கு கிர்மானியின் 67 முக்கிய காரணம். ரவி சாஸ்திரிக்கு அவரது முதல் டெஸ்ட் செஞ்சுரி கிட்டாமல் போனாலும் தாம் போலர்

○ டவாரே





ELEGANT

இனியது இனியது தைப்பொங்கல்
புதியது புதியது கோ-ஆப்டெக்ஸ் ஆடைகள்





குழப்பத்தின் மறு பெயர் இந்தியா! என்ற தலையங்கம் (கல்கி 20–12–81) படித்தேன். டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்கள் 1949ம் ஆண்டு கூறிய வார்த்தைகள் நினைவுக்கு வந்தன: ''நமக்கு நாமே தந்து கொண்ட நமது அரசியல் சாசனம் எதிர் காலத்தில் சரியாக இயங்கவில்லை எனில் அது தோல்வி கண்டது என்று நாம் கூற முடியாது. மனிதன் படுமோசமானவன் என்றுதான் கூற வேண்டியிருக்கு.''
ஹூப்ளி என். மணி

ராஜேஷ் குமாரின் கதாநாயகன் 27–12–81 இதழில் இந்தியப் பெண்களைப் பற்றி ஓகோ என்று பெருமையாகக் கூறப் போக, கடைசியில் கதாசிரியர் மட்டமாக இந்தியப் பெண்ணைச் சித்திரித்துக் கதையை முடித்துவிட்டது அந்தோபரிதாபம்!
உடுமலை செம்பகா அருணாசலம்

வையவன் எழுதிய கதையில் அளவுக் கதிகமாக ஆங்கில வார்த்தைகள். பேராசிரியர் கல்கி அவர்கள் கன்னித் தமிழை வளர்த்தார்கள். அவர் பத்திரிகையில் இப்படி ஒரு ஆங்கில மோகமா?
சென்னை-45 கணபதி சுப்பிரமணியம்

திரு பொன்னித் துறைவனின் போட்டிக் கதை 'கர்மா', கல்கி இதழின் தரத்தை நிர்ணயிப்பது போல் அமைந்திருந்தது. 'உறவுக்குஒருவிலையை நிர்ணயித்துக்கொண்டு அந்த விலை கொடுக்கப்படாவிட்டால் உறவில்லை' என்ற வரிகள் இன்றைய சமுதாய சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது.
செய்யார் பனிபிக் பிரம்மா

எட்டயபுரம் பாரதி விழாவில் இரண்டாம் நாள் சுரதா தலைமையில் நடந்த அருமையான கவியரங்கம் பற்றி ஒரு வரி கூட எழுதாதது ஏன்? குறைகள் இருந்தாலும் அரசாங்கத்தின் அற்புதமான ஏற்பாடுகளுக்காகவாவது ஒரு நாலு பக்கம் விமர்சனம் செய்யக் கூடாதா? அக்கறை போதாது.
திருநெல்வேலி ச. வீரபத்திரன்

மகா மட்டமான படத்தில் நடித்த கமலை விதம் விதமாகப் பாராட்டி எழுதியிருக்கிறீர்கள்! இனி ஒரு முறை இம்மாதிரியான தவறைச் செய்து அவரை மோசமான படங்களில் நடிக்க ஊக்கப்படுத்தி விடாதீர்கள் என உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.
600035 சி. பூபால் சிங்

வேளாங்கன்னி மாதா கோவிலைப் பற்றிய கட்டுரை நன்கு உள்ளது. மேலட்டையில் அதே மாதா கோயிலில் வழிபாடு செய்யும் மக்களுடன், சிலுவையைப் போட்டுக் 'கிறிஸ்துமஸ் வாழ்த்து' நாகுக்காகச் சொல்லி விட்டீர்.
உடுமலைப்பேட்டை ஏ. சாகுல் அமீது

மாண்புமிகு காளிமுத்துவும் திண்டிவனம் ராமமூர்த்தியும் திருப்பத்தூர் வெற்றிக்கு யார் காரணம் என்று சண்டைப் பிய்த்துக் கொள்ளும் இந்த நேரத்தில் வெற்றிக்குக் காரணம் அதிகப்படியான எம். ஜி. ஆர். பிரசாரம் என்ற அனந்தின் நடுப் பக்கக் குறும்பு எரியும் நெருப்பில் எண்ணெய்!
விழுப்புரம் கே. எஸ். குமார்

விசிட்டர் அனந்தின் விளம்பர அரசியல் ஜோக்கில் அந்துலேயின் விவகாரமும், ஆர். வி.யின் பட்ஜெட்டும் ரசிக்கும்படி இருந்தன.
சிந்தாதிரிப்பேட்டை பா. உதயா

நடுப்பக்க விளம்பர அரசியலில் ''சோ'' மிக்ஸியும் ராஜீவ் பிஸ்கட்டும் ரொம்ப ஜோர்!
கடியாபட்டி மீனலோசனி நித்தியானந்தன்

தாங்கள் தீட்டிய தலையங்கத்தின் ஏவுகணைகள் உறங்கும் இதயங்களை விழிப்படையச் செய்யட்டும். இளைய தலைமுறையை நல்வழி நடத்திச் செல்ல ராஜாஜி போன்ற வழி காட்டிகளைப் பாரதம் எதிர்பார்க்கிறது. அடிப்படை உரிமைகளை அழித்துவிட்டு, ஆதாயம் தேடிக்கொள்ளும் சந்தர்ப்பவாதிகளை நினைத்துப் பார்க்கும்போது இதயத்தின் ஆழத்தில் எரிமலைகள் குமுறுகின்றன.
செங்கவல்லி எஸ். சச்சிதானந்தன்

அபூர்வமான படத்தை வெளியிட்டு கல்கியையும் ஓர் அபூர்வப் பத்திரிகை என மற்றொரு முறை நிலை நிறுத்தியதற்குப் பாராட்டுகள். தொடர்க தங்கள் முயற்சிகள்.
தக்கலை உ. சங்கரசுப்பு

காரோட்டும். மனைவி: வரவர நாட்டிலே ஜனதொகை அதிகமா யிடிச்சி இல்லே! பாருங்க நடு ரோட்லேயே எவ்வளவு ஜன நெரிசல்!

கணவன்: மண்ணுங்கட்டி! நீ இப்ப வண்டி ஓட்டறது பிளாட்பாரத்து மேலே. முதல்ல ரோட்டுக்கு இறங்கு!

-வெ. சீதாராமன்

- ஒன்றரை ஆண்டு காலம் கோமாவில் இருந்த சாவித்திரியின் உடல் மரணமடைந்த பிறகு ஜெமினி கணேசன் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. இறக்கும்போது அவர் குடியிருந்தது அண்ணாநகரில் உள்ள ஒரு வாடகை வீட்டில்தான்.

- அந்த அறையின் வாசலில் 'Do not disturb' என்ற ஸ்டிக்கர் ஒட்டியிருந்தது. மீளாத் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த சாவித்திரியின் உடல் அறையின் உள்ளே இருக்க சுற்றிலும், 'ஓ' என்று அழுதபடி இருந்தது கூட்டம்.

- Mrs. Savithiri expired at 10 pm. - ஜெமினியின் 26ந் தேதி நாட் குறிப்பில் எழுதி வைக்கப்பட்டிருந்த வாசகங்கள். 'சென்னை ரேஸ் கிளப்பில் எட்டு மணிக்கு டின்னர்' என்ற நிகழ்ச்சி அடிக்கப்பட்டு -'ரத்து' என்று எழுதப்பட்டிருந்தது.

- கண்களில் கண்ணீரும், நெஞ்சில் வேதனையும் சுமந்தவாறு இருந்த ஜெமினி மிகவும் நெருங்கியவர்கள் வந்தபோது கட்டிப்பிடித்து அழுதுவிட்டார். முதல்வர் தமது மனைவியோடு வந்து அஞ்சலி செலுத்தினர்.

- சாவித்திரியின் உடல் அவரது சகோதரியின் கணவர் வருகைக்காகக் காத்திருந்தது. ஜெமினி அடிக்கடி மேஜையிலிருந்த Air timing அட்டவணையில் ஹைதராபாத் விமானம் எப்போது சென்னை வருகிறது என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

- மனோரமா சாவித்திரியின் உடலைப் பார்த்துக் கதறிவிட்டார். சாவித்திரியின் முகத்தைக் கைகளால் வாஞ்சையுடன் தடவிக்கொடுத்து அவர் கண்ணீர் சொரிந்தது பார்ப்பவர்களை மேலும் துக்கத்துக்குள்ளாக்கியது.

- கோமாவில் இருந்ததால் முகம் அடியோடு மாறிவிட்டிருந்தது. உடலைப் பார்க்க வந்த பெண்கள், 'இது சாவித்திரிதானா?' என்று பல தடவை கேட்டுக் கொண்டார்கள்.

- எக்கச்சக்கமான பெண்கள் கூட்டம். சரியானபடி ஒழுங்கு படுத்தப் போலீஸாரால் முடியவில்லை. சில பெண்கள் லேசான தடியடிக்கு உள்ளானார்கள்.

- மகன் சதீஷ் உடல் பக்கத்திலேயே உட்கார்ந்திருந்தான். ஒன்றரை வருடமாகத் தாயாரின் சுய உணர்வு இல்லாத உடலைப் பார்த்துப் பார்த்து, அவனுக்கு மரணம் கூட, தாயார் 'கோமா'வில்தான் இருக்கிறார் என்ற நினைப்பை ஏற்படுத்தியது போல் இருந்தது. நெஞ்சில் அழுத்தி வைக்கப்பட்டிருந்த சோகம் கண்ணீராக வெளிவரவில்லை. பார்வையோடு கலந்திருந்தது.

சாவித்திரி சாவித்திரி

சாவித்திரி



● அறையிலிருந்து சாவித்திரியின் உடல் மயானத்துக்குக் கொண்டு செல்வதற்காக வெளியே எடுத்து வரப்பட்டது. நான்கு பேராகச் சேர்ந்து தூக்கிக் கொண்டு வந்தாலும், உடல், ரப்பர் மாதிரி வளைந்தது.

● இன்றைய இளைய தலைமுறை நடிகர்கள் ஒருவரையும் அந்த இடத்தில் காண முடியவில்லை. ஒரு சிறந்த அனுபவமுள்ள நடிகைக்கு, மரியாதை செலுத்தக்கூட நேரமில்லாமல் அவ்வளவு பிஸியாகவா ஆகி விட்டார்கள்?

● எந்த நடிகரோ அல்லது நடிகையோ சவ ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை. ஆனால் ஆயிரக் கணக்கான மக்கள் உடலைத் தொடர்ந்து மயானத்துக்கு வந்தார்கள்.

● மயானத்தில் ஒரு மரத்தின் அருகில் நாகேஸ்வர ராவ். 'தேவதாஸ்' ஞாபகம் எல்லோரையும் ஓர் உலுக்கு உலுக்க நாகேஸ்வர ராவ் மற்றவர்களுக்கு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார். சிதைக்கு சதீஷ் தீமூட்டும் வரை இருந்த ஒரே நடிகர் நாகேஸ்வர ராவ் தான். ஆந்திராவில் பிறந்து தமிழகத்தில் பிரபலமடைந்த சாவித்திரிக்குத் தமிழ்ப் பட உலகம் சரியாக அஞ்சலி செலுத்தவில்லையோ என்று மனத்துக்குப் பட்டது. அதற்குக் காரணம், ஒன்றரை வருட காலமாக அவர் கோமாவில் இருந்ததும், அவர் இறப்பு என்பது என்றோ நிச்சயமாகிவிட்ட ஒன்று என்பதாலும்தானோ? ஒன்றரை ஆண்டு காலம் அந்த உடல் உணர்வின்றி இருந்தாலும் எத்தனை ஆண்டு காலம் உயிரைக் கொடுத்துத் திரை உலகுக்கு ஜீவனளித்து வந்தது என்பதை மறக்கலாமோ?

-கௌசல்யா

◆◆

கண்ணியமானவர் கக்கன்...

''நீண்ட காலமாகக் காங்கிரஸ் கட்சியில் பணியாற்றியவர் திரு கக்கன். அவர் ஒரு ஹரிஜன். ஆனால் தாம் ஹரிஜன் என்று சொல்லி, தனியாகச் சலுகை எதுவும் கேட்டதேயில்லை. மதுரையில் சிறப்பாகக் கட்சிப் பணியாற்றியவர் என்று மதுரை வைத்தியநாதய்யர்தான் அவரைப் பாராட்டி உற்சாகமும் ஊக்கமும் கொடுத்தார். 1937லேயே கான்ஸ்டிட்யுவன்ட் அசெம்பிளியில் மெம்பரானார். அதற்குக் காரணம் காமராஜ் அவர்கள். பிறகு நாடாளு மன்றத்திலும் பணியாற்றினார்.

''கக்கன் அமைதியாக வேலை செய்யக் கூடியவர். பதவியைத் தம் மேம்பாட்டுக்கு ஒருநாளும் பயன்படுத்திக் கொண்டதில்லை. தமக்கு என்று எதுவுமே இவர் செய்து கொள்ளவில்லை என்பதை இப்போது நினைவுபடுத்திக் கொள்வது நல்லது.

''கக்கனுக்கு மதுவிலக்கில் உண்மையான நம்பிக்கை இருந்தது. அவர் உள்துறை அமைச்சராக இருந்தபோது, குடிப்பதற்கான 'பெர்மிட்' கோரிவரும் ஃபைல்களில் கையெழுத்துப் போடவே மனம் வராது அவருக்கு. நாட் கணக்கில் வைத்துக் கொண்டிருப்பார். அப்புறம்தான் நான் சொன்னேன், 'அவர்கள் கோர்ட்டுக்குப் போனால் நம் பக்கம் ஜெயிக்காது; 'பெர்மிட்' கொடுக்க நாம் மறுக்க முடியாது, போதிய காரணமில்லாமல்' — என்று எடுத்துக் கூறுவேன்.... கக்கன் தமது கொள்கையில் அவ்வளவு திடமாக இருந்தார்.

''மந்திரியாக இருந்தபோதும் அடக்கத்துடன் இருந்தார். காலில் சிறிது வீக்கம் இருந்தது அப்போது. ரத்த ஓட்டக்குறைவு காரணம் என்பார். அப்படியும் அவர் தமது பணிகளைக் குறைத்துக் கொண்டதில்லை. தாட்சண்யம் உண்டு. காங்கிரஸ்காரர் என்றால் அபிமானம் அதிகம். கட்சியில் ஒரு கோஷ்டி வந்து ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்யச் சொல்லிக் கோரினால் அதற்கு உத்தரவிட்டுவிடுவார். பிறகு இன்னொரு குரூப் வந்து 'அது தவறு மாற்ற வேண்டும்' என்று வந்து சொன்னால் உடனே மாற்றி உத்தரவு போட்டு விடுவார். அத்தனை தாட்சண்யம். ஆனால் அன்பு காரணமாக, பரிவு காரணமாக உண்டாகும் தாட்சண்யம். ஒரு தலைவனுக்கு அப்படி அதீத தாட்சண்யம் இருக்கக் கூடாது.

''கடினமாக, அதிர்ந்து எதையும் பேச மாட்டார். பதற்றப்பட மாட்டார். பிறரிடத்தில் எப்போதும் மரியாதை கொண்டவர். தம்மைப் பற்றித் தம்பட்டம் அடித்துக்கொள்ளாதவர். உடல் நோய்வாய்ப் படாமல் இருந்திருந்தால் இன்னும் அதிகமாகப் பணியாற்றியிருப்பார். கல்லூரிப் படிப்பு இல்லாதவராயினும் நிர்வாகத்தின் தன்மையையும் தேவையையும் உணர்ந்து செயல்பட்டவர் கக்கன்.''

-எம். பக்தவச்சலம்

பேட்டி : சாருகேசி



போட்டோ : 'சுபா'

இசை விழாத் துக்கடா





✖ மணிகிருஷ்ணசாமி



✖ லால்குடி ஜெயராமன்



✖ மகாராஜபுரம் சந்தானம்

இன்றைய கர்நாடக சங்கீதத்தின் தரம் குறைந்துவிட்டது என்று பலர் புலம்புவதைக் கேட்கிறோம். ஆனால் கொஞ்சம் யோசித்தால் தரம் குறையாமல் இருந்து நமது மானத்தைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும் துறை இது ஒன்றுதான் என்பது புரிந்து போகும். அரசியல், தொழில், வர்த்தகம், கல்வி போன்ற எந்தத் துறையை எடுத்துக் கொண்டாலும் நாளுக்கு நாள் தரம் குறைந்து போய் உலக அரங்கிலே நமக்கு இருந்த மதிப்பையெல்லாம் இழந்து வருகிறோம். ஆனால் கர்நாடக இசைத் துறையை அதன் தரம் குன்றாமல் நமது கலைஞர்கள் பலர் காப்பாற்றி வருகிறார்கள். அதற்கு அயல் நாடுகளிலும் வரவேற்பையும் மதிப்பையும் புதிதாக ஏற்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

நமது நன்றிக்குரிய அத்தகைய கலைஞர்களுள் ஒருவர் திரு டி. வி. சங்கர நாராயணன். அன்று அகாடமியில் நான் நுழைந்த போது தர்பார் நடந்து கொண்டிருந்தது. தர்பார் கீர்த்தனையைப் பாடும் போது மட்டுமின்றி அதன் பின் அவர் ஒவ்வொரு ராகத்தையும் கீர்த்தனையையும் வழங்கும் போதும் தர்பார் நடப்பது போலத்தான் இருந்தது! சப்த ஸ்வரங்களின் அமைச்சரவையோடு, இசைத் தேவதையின் நல்லாட்சியாகவும் அது திகழ்ந்தது!

டி. வி.எஸ். சமீபத்தில்தான் அமெரிக்காவிலிருந்து திரும்பி வந்திருக்கிறார். அவருக்கென்ன, ஒரு கார்வையைப் பிடித்துக் கொண்டால், அமெரிக்கா, ஆஸ்திரேலியா என்று போய் வந்து விடலாம்! அவரை மட்டுமென்ன, 'ஜிவ்'வென்று நம்மையும் கூடத் தூக்கிக் கொண்டு போகும் அருமையான குரல் வளம். பந்துவராளி, கரகரப் பிரியா, லதாங்கி எல்லாமே ஜோர்தான். பாடகரையே கூச்சத்தில் ஆழ்த்தும் அளவு கரகோஷம்! எப்போ வருவாரோ, கலியுக வரதன், சீனிவாசா ஆகிய எல்லாம் நிறைவு என்றாலும் ஒரு குறை: பாரதி நூற்றாண்டில் எல்லாரும் தப்பாமல் ஒரு பாரதி பாட்டாவது பாடிக் கொண்டிருக்கும்போது டி.வி. எஸ். வெள்ளைத் தாமரை பாடாமல் இருக்கலாமோ?

டி. வி. எஸ்.ஸின் ஐந்து மணி ஸ்டேட்டஸ்ஸை இன்னும் தாமதித்தால் அகாடமி ஸ்டேட்டஸ் என்னாவது?

● கிருஷ்ண கான சபையில் லால்குடி வயலின் கச்சேரி ஆரம்பித்தபோது ராக்கெட் பரிபாஷையில் கூறுவதென்றால் கவுண்ட் டவுன் தொடங்கியது. மத்தியமாவதியில் டேக் ஆஃப் ஸ்டேஜ்! பின்னர் மோகனத்தின்போது விண்வெளி சஞ்சாரம்தான்.

தமது குடும்பச்சொத்தைக் குடும்பத்துடன் வைத்துக் கொள்ளாமல் பிறருக்கும் பகிர்ந்து தந்து அவர்களையும் இசைச் செல்வந்தர்களாக்கும் தர்மகர்த்தாவாகி வருகிறார் ஜெயராமன். அன்று அவருடன் வாசித்தவர் குமாரி அகிலா நடராஜன். கச்சிதப்படுத்தப் பட்ட வாசிப்பு. அகர சாதகத்தின் பயனை சுகவர இசை. ''அகிலம் போற்ற வளரட்டும் அகிலாவின் கலை'' என வாழ்த்துவோமே!

● கேட்டவற்றுள் மெய் சிலிர்ப்பை ஏற்படுத்திய கச்சேரி என்றால் அகாடமியில் டி.கே. ஜயராமன் பாட்டுத்தான். சாகித்தியத்தின் பொருளுணர்ந்து பாவ பூர்வமாக மட்டுமின்றி, பக்தியோடும் உருக்கமாகப் பாடுவதை நம் மனம் ஒவ்வொரு கணமும் உணர்கிறது. விருட்டப் போது நமது சிந்தனை அந்தண்டை இந்தண்டை சிதறாமல் கட்டிப் போடுகிற ஆற்றல் டி.கே. ஜெ.க்கு இருக்கிறது. இத்தனைக்கும் மேல் உச்சரிப்புக்காகவே ஒரு ஸ்பெஷல் பாராட்டுத் தரலாம் அவருக்கு. பாட்டிலும் சரி, ஸ்வரப் பிரஸ்தாரங்களிலும் சரி, ஒரு அட்சரத்தைக்கூட விழுங்கிவிடாமல் ஸ்பஷ்டமாக உச்சரிக்கிறார். லலிதாவில் லட்சுமி கடாட்சத்தையும் கல்யாணியில் அம்பாள் தரிசனத்தையும் பெற்றுத் தந்தார். ரீதிகௌளையில் கல்யாணராமனை பட்டாபி ராமன் மனமகிழ்ந்து இந்த ஜெய ஜெயராமனை அனுக்கிரகித்திருப்பார்!

சிவராமனும், வி.வி. எஸ்.ஸும் அன்று அவருக்குப் பக்க வாத்தியமாக அமைந்தது

வேறென்ன, ரசிகர்களின் பேரதிர்ஷ்டம்தான். யாரிடமிருந்து யார் ஊக்கமும் உற்சாகமும் பெற்றார்கள் என்று சொல்ல முடியாத பரவசம் கச்சேரி முழுவதும் நிலவியது.

● அகாடமி என்றாலே சில பேருக்கு ஒரு 'நெர்வஸ்னெஸ்' அல்லது 'காம்ப்ளெக்ஸ்' ஏற்பட்டுப் போகிறது. இந்த இனத்தில் மணி கிருஷ்ணசாமி சேர்ந்துவிடக் கூடாதே என்று கவலையாக இருக்கிறது. இல்லாத போனால் கிருஷ்ணகான சபாவில் 'ஆஹா! ஓஹோ!' என்று புகழப்பட்ட அவர் ஆற்றல் அகாடமியில் எங்கே ஒளிந்து கொண்டது? ஒருவேளை சுப்புடு விமர்சனம் காரணமாகத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டாரோ? பக்கவாத்தியக்காரருக்காக பிரதான பாடகர் தம்மைக் குறைத்துக் கொள்வது என்று ஆரம்பித்தால் கதி மோட்சமே இல்லை! இந்த ஆண்டு கிருஷ்ணகான சபாவில் சோபித்த அவர் அடுத்த ஆண்டு அனைத்து அரங்குகளிலும் பாராட்டுப் பெற வேண்டும்.

● சந்தானமும் அண்மையில்தான் திரும்பினார் அமெரிக்காவிலிருந்து. அகாடமி அரங்கில் அவர் கம்பீரமாக அமர்ந்து வழங்கிய சௌக்கிய சங்கீதத்தைக் கேட்டுவிட்டு வீடு திரும்பியவர்கள் ''மகராஜனா இரு'' என்று வாழ்த்தி விருப்பார்கள்!

சத்திய சாயி பாபா விபூதி வரவழைப்பது போல, சந்தானம் கையை நீட்டி ஒரு நொடிப்புத் தருகிறார்; உள்ளங்கை நிறைய பிர்க்காக்கள் குவிகின்றன! அடுத்து அவற்றை அள்ளித் தெளிக்கிறார்; அரங்கம் முழுவதும் இசை மணம் கமழ்கிறது. இங்கே முடுக்குகிறார்; அங்கே அலைகிறார் — அற்புத இசை வடிவங்களைச் சிருஷ்டிக்கிறார்!

கல்யாணி, தோடிக்குப் பிறகு ஸிம்மேந்திர மத்திமத்துக்கு வந்தார். ரசிகர்கள் தங்கள் வசமிழந்து விட்டனர். எல்லாரும் நூற்றாண்டை யொட்டி பாரதி பாடலைப் பாட, இவரோ, ''பாமாலைக்கிணையுண்டோ பாரதி, நீ பக்தியுடன் தொடுத்த...'' என்று ஒரு பல்லவி ஆரம்பித்தார் பாருங்கள்! பிரமாத ஸர்ப்ரைஸ்! பெருமை தாங்கவில்லை நமக்கு. இல்லாத புஸ்தி மீசையை நீவி விட்டுக்கொள்ளு மளவுக்கு நெஞ்சு நிமிர்ந்தது. நேரமாகி விட்டது என்று வயலின் ஜயராமன் ஞாபகப்படுத்த வேண்டிய அளவுக்கு லயிப்பு இருந்தது சந்தானத்துக்கு என்றாலும் அந்த லயிப்பு உருவாக உதவியது ஜெயராமனின் பக்க வாத்தியம், மறுக்க முடியுமோ?

வெல்லா வேங்கடேசவர ராவ் தனியின் போது மிருதங்கத்தைத் தட்டி மைக் எதிரே உருட்டி அசைத்து ஓம்கார நாதத்தை எழுப்பினார். அது தேவையா இல்லையா என்பது ஒருபுறமிருக்க அந்தச் சமயம் மைக் வேலை செய்யாமல் செய்யப்பட்டது தேவையே இல்லாத ஒன்று. எதேச்சையாக நடந்த காரியம்தான் என்று தெரிய வந்தால் ஆறுதலாய் இருக்கும்.

● முன்னளவுக்குச் சாரீர ஒத்துழைப்பு இன்று இல்லையோ என்று நேதுநூரி கிருஷ்ணகான சபையில் பாடியபோது தோன்றத்தான் செய்தது. அது ஒருபுறமிருக்க பாடலின் கருத்து கேட்பவர் மனதில் பதியும்படி அவர் பாடிய அளவில் வாரியார் உபந்நியாசத்துடன் ஒப்பிடுவதுகூட அவருக்குப் பெருமையே. உதாரணமாய் ஆபோகியில் மநஸ * நில்ப: ''மனத்தை அடக்கச் சக்தி யில்லாமல் போனால் இனிய மணியோசையுடன் கூடிய மலர்ப் பூசையினால் என்ன பயன்?'' என்று கேட்கிறார் தியாகையர். இதனை எத்தனை பாவ பூர்வமாகப் பாடினார், நேதுநூரி!

''மேடை ஏறி முதல் தர வித்வானுக்கு பக்க வாத்தியம் வாசிக்க ஜி. ஜே. ஆர். கிருஷ்ணனுக்கு என்ன அவசரம்?'' என்றும் ஒரு கேள்வி! ''கிருஷ்ணன் இன்று வாசிக்கும் போது நீங்கள் இளைஞராய் இருந்தபோது வாசித்ததெல்லாம் நினைவு வருகிறதா?'' என்று ரசிகர்களில் ஒருவராய் அமர்ந்திருந்த லால்குடியைக் கேட்டேன். ''ஆமாம் ஸார்! அப்போ எனக்கு வயது 12! சரியா நாற்பது வருஷமாச்சு!'' என்று கூறி அரங்கிலேயே இருந்த தம் தகப்பனார் படத்தை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்தார் அவர். இதுவே, ''அவசரம் என்ன?'' என்ற கேள்விக்குப் பதிலாகவும் அமைகிறதல்லவா?

-குட்டிகிருஷ்ணன்

⌘ உமையாள்புரம் சிவராமன்




⌘ அகிலா நடராஜன்



⌘ வெல்லா வேங்கடேசவரராவ்



⌘ ஜி. ஜே. ஆர். கிருஷ்ணன்



⌘ டி. கே. ஜெயராமன்




⌘ நேதுநூரி கிருஷ்ணமூர்த்தி



⌘ டி. வி. சங்கரநாராயணன்



⌘ வி. வி. சுப்பிரமணியம்




ஆரோக்கியம், ஆனந்தம், ஒன்றுக்கொன்று ஆதாரம்!
Bournvita
Bournvita
போர்ன்விடா பருகுங்கள்.
உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின்நற்பண்புகள் நிறைந்துள்ளன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உணவுப்பான நிபுணர்கள்-காட்பரி தயாரித்து அளிப்பது.
காட்பரிஸ் போர்ன்விடா
உங்களோடு வளரும் நன்மை
Bournvita
Bournvita

கதவு தட்டப்பட்ட சத்தம் கேட்டுப் போய்த் திறந்தாள் சிவகாமி.

பரமசிவம் தள்ளாடியவாறே உள்ளே நுழைந்தார்.

கணவனைத் தாங்கிப் பிடித்தாள் சிவகாமி. விஸ்கியின் வாடை குப்பென்று முகத்தில் அடித்தது.

துடித்துப் போனாள். தன் கணவரா குடித்துவிட்டு வந்திருக்கிறார்? மெதுவாகப் படுக்கைக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்தாள்.

ஒழிந்த நாராகக் கிடந்த கணவனைப் பார்த்தாள்.

முப்பது வருட தாம்பத்திய வாழ்க்கையில் மதுவின் வாடையையே அறியாதவரா குடித்துவிட்டு வந்திருக்கிறார்?

இத்தனை வருடகாலத்தில் ஒரு வெற்றிலைப் பாக்கு, பீடி, சிகரெட் என்று எந்தவிதமான கெட்ட பழக்கமும் இல்லாதவரா குடித்துவிட்டு வந்திருக்கிறார்?

சிவகாமியால் நம்பவே முடியவில்லை.

''என்னங்க? உங்களுக்கு என்ன ஆச்சு?''

பரமசிவம் கண்களை விரித்துத் தம் மனைவியைப் பார்த்தார்.

''சிவகாமி! ஒரு வாரத்துக்கு முன்னால் நம்ம சுந்தரத்தைச் சந்திச்சேன். அவன் சொன்னான்... பரமசிவம்... உங்க மாப்பிள்ளை இப்ப ரொம்ப மாறிப் போயிட்டார். முன்னைப் போல இல்லை. இப்ப சீட்டாடறார், ரேஸுக்குப் போறார்... தினமும் குடிச்சுட்டு வந்து உங்கமகளைப்போட்டு அடிக்கிறார்ன்னு. ஆனா நான் அதை நம்பலே. இன்னைக்கு நம்ம ஜெயாவை ஆபீஸ் பக்கம் பார்த்தேன். எப்படி இருக்கா தெரியுமா சிவகாமி? காஞ்ச சருகா.. இளைச்சு எலும்பும் தோலுமா இருக்கா..... என்னைப் பார்த்துட்டுக் ''கோ''ன்னு அழுதுட்டா. இருபது வருஷமா வளர்த்தேன். என் உயிரையே அவள் மேலே வெச்சிருந்தேனே.. அவ வாழ்க்கை நல்லா இருக்க வேணும்னுதானே நம்ம தகுதிக்கு மீறி பாங்குலே உதவி மானேஜரா இருக்கிற அந்தப் பையனுக்கு அவ்வளவு ஆசையோடு கல்யாணத்தைப் பண்ணிவைச்சேன். ஆனா அவன் இப்படி மாறுவான்னு நெனைக்கல்லே சிவகாமி. அவளை ஒரு எறும்பு கடிச்சாலே எப்படித் துடிச்சுப் போவா... அப்படிப்பட்ட என் மகள் இன்னிக்கு அடியும் உதையும் வாங்கிட்டு... அதை என்

என்னாலே தாங்கிக்க முடியலே..

விஜயாலயன்

அடுத்த வினாடி சட்டென்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதார்.

''என்னாலே தாங்க முடியலே சிவகாமி... தாங்க முடியலே!''

சிவகாமி பதறினாள்.

''என்னங்க ஆச்சு? குடிக்கற அளவுக்கு அப்படிப் பெரிசா என்னங்க வந்தது?''

கல்லாவில் இருப்பவர்: என்னப்பா விஷயம்?
சர்வர்: பில்லுக்குப் பணம் இல்லாததால் மாவாட்டி முடித்த ஆசாமி ஒருத்தன் மறுபடி நாற்காலியில் உட்கார்ந்துகிட்டு இரண்டு மசாலா தோசைக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறான்... என்ன செய்யட்டும்?!

-உ. ராஜாஜி



னாலே தாங்கிக்க முடியலே... சிவகாமி... அதனாலே...''

பரமசிவம் ஒரு குழந்தையைப் போல் அழுதார்.

என்னாலே இதைத் தாங்கிக்க முடியலையே! எவ்வளவு பாசத்தோடும் பிரியத்தோடும் தன் தோள் மேலேயே போட்டு வளர்த்தார் என் கணவர். அவரால் இதை எப்படித் தாங்கிக்க முடியும்?

சிவகாமியும் அவரோடு சேர்ந்து விசித்து அழுதாள்.

வீட்டுக்குள் நுழைந்த மகளைப்பார்த்துப் பரமசிவம் திகைத்துப் போனார்.

''சிவகாமி! இங்கே வந்து பாரு... யாரு வந்திருக்காங்கன்னு....!''

உள்ளேயிருந்து வந்த சிவகாமி முகம் மலர்ந்தாள்.

''வாம்மா... ஜெயா...''

ஜெயா இருவரையும் பார்த்துத் தளர்ந்த குரலில் பேச ஆரம்பித்தாள்.

''அம்மா... நான் இருந்துட்டுப் போக வரலேம்மா... என் கணவர் சீட்டாடறார் ரேஸுக்குப் போறார் குடிக்கிறார்....

''முன்பெல்லாம் அவர் குடிச்சுட்டு வந்து காரணமில்லாமல் என்னைத் திட்டி அடிக்கிற போது... குடிச்சுட்டு வந்து ஏன் இப்படி யெல்லாம் நடந்துக்கிறீங்கன்னு கேட்பேன். அதுக்கு அவர் உங்கப்பன் வீட்டிலிருந்து கொண்டு வந்ததிலிருந்து ஒண்ணும் குடிக்க லேடி. நான் சம்பாதிச்சுக் குடிக்கிறேன்னு சொல்லுவார். இப்போ குடிச்சுட்டு வந்து அடிக்கிறபோது...குடிச்சுட்டுவந்து ஏன் இப்படி அட்டூழியம் பண்றீங்கன்னு கேட்டா... அதுக்கு அவர் என்ன சொல்றார் தெரியுமா? நிறுத்துடி....உங்கப்பன் என்ன யோக்கியனா? அவருந்தானே குடிக்கிறாரு... ஒரு குடிகாரன் பெத்தபொண்ணுதானேடி நீன்னு கேக்கறாரு அப்பா... அவரு குடிக்கிறாரு... அதை என்னால தாங்கிக்க முடியுது. குடிச்சுட்டு வந்து காரணமில்லாமல் அடிக்கிறாரு. அதையும் என்னால தாங்கிக்க முடியுது. உங்கப்பனும் ஒரு குடிகாரன்தான்டீன்னு சொல்றதை என்னால தாங்கிக்க முடியாதுப்பா...அதுவும் அவர் வாயாலே சொல்றதை என்னால ரொம்பத் தாங்கிக்க முடியலேப்பா. அப்பா உங்களைக் கையெடுத்துக் கும்பிடறேன்... இனிமேல் குடிக்காதீங்கப்பா... உங்க மகளுக்காக இதைச் செய்யுங்கப்பா...''

ஜெயா கதறலுடன் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டுப் படி இறங்கி ஓடினாள்.

பரமசிவம் அதிர்ந்து போய் அப்படியே நின்றார்.



சென்னைக்கு மாதம் இரு முறைகள் விஜயம்!



Dr. S. K.

வாலிப வயோதிக அன்பர்களே!

திருப்பூரில் 26-9-81ந் தேதி சித்த வைத்தியர்கள் சிறப்பு மாநாட்டைத் திறந்து வைத்து பெருமையுடன், வைத்திய அன்பர்களின் முன்னிலையில் மதுரை ஆதீனகர்த்தர் 292 வது குரு மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளால் பழனி டாக்டர் **எஸ். காளிமுத்து** அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியும், ''**வைத்தியபதி**'' என்ற பட்டமும் அளித்து கௌரவிக்கப்பட்டது என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல சித்த வைத்திய மகாநாட்டில் சிறப்பிக்கப்பட்டு ஏராளமான பட்டங்கள் பெற்ற பழனி **சித்த வைத்தியபதி, வைத்திய திலகம், வைத்தியராஜ் Dr. S. காளிமுத்து** R.M.P. (IND.) V.V.C. A.M.I.H., R.A.M.P., R.H.M.P., அவர்களின் உலகப் புகழ் பெற்ற மருந்துகளால் சுக வாழ்வு வாழுங்கள். அவரின் சுற்றுப் பயணத்தில் — பழனியில் கடிதம் மூலம் ஆலோசனையுடன் சிகிச்சை பெறலாம்.

கீழ்க்கண்ட தொந்திரவுகள் இருந்தால் அலட்சியம் செய்யாதீர்கள். நீங்கள் கவலைப்படும் பிரச்னையான தாம்பத்திய வாழ்வில் குறைபாடு — ஆண்மை குறைவு, சோர்வு, வீரியக் குறைவு, குடும்ப உறவில் முன்மாதிரி செயல்படுத்த முடியாமை, நரம்பு துவளல், தேக உறுப்புகள் மெலிவு, ஆஸ்துமா, இருமல், கபம், சளி, இளைப்பு, தும்மல், வாத நோய், தூக்கமின்மை, ஊரல், அரிப்பு, கருப்பு-சிவப்பு-வெளுப்பு படைகள், சரும நோய்கள், குழந்தைச் செல்வம் இல்லாமை, அணுக்கள் குறைவு, வெட்கம், நடுக்கம், தோல்வி, உள்-வெளி ரத்த நவமூல வியாதிகள், குடல் புண், வாய்வு, வயிற்று வலி, வாந்தி, எடை குறைவு மற்றும் இதில் குறிப்பிடாத வியாதிகளுக்கும் சிலரிடம் வருடக் கணக்காக மருந்து தொடர்ந்து சாப்பிட்டு நம்பிக்கை இழந்த நோயாளிகளும் எமது 85 வருட பரம்பரை அனுபவ மருந்துகளால் சுக வாழ்வும், மறுமலர்ச்சியும் புத்துணர்ச்சியும் பெறலாம்.

பழனி சித்தர் மருந்துகளே பாரில் சிறந்தவை என்பது உலகம் அறிந்ததே! கேம்புகளில் மருந்து பெறலாம். சந்திக்க முடியாதவர்கள் தபால் மூலம் வி.பி.பி.யில் பெறலாம். தபால் செலவு இலவசம். தாமதியாமல் சிகிச்சை பெறுவது உங்களுக்கு நன்மை தரும்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள்

தங்க பஸ்பம்	தங்க பஸ்பம் சிட்டுக் குருவி லேகியம்	மிக உயர் தரம்	ஆஸ்துமா செட்
மிக உயர் தரம் ரூ. 330	90 வேளை ரூ. 180	செட் ரூ. 90	ரூ. 124 — 226
சூபர் செட் ரூ. 600	60 வேளை ரூ. 120	சரும நோய் செட்	வயிற்று வலி செட்
சூபர் செட் A. ரூ. 900	30 வேளை ரூ. 60	ரூ. 140 — 260	ரூ. 140 — 260

சென்னை விஜயம்: தங்கும் தேதிகள்: பிரதி இங்கிலீஷ் மாதம் 10, 11 & 17, 18, 19, 20, 21 தேதிகள்

சென்னையில் தங்கும் விலாசம்: **நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல்**
எட்வர்ட் எலியட்ஸ் ரோடு, சென்னை-600 004 போன்: 83111

பார்க்கும் நேரம்:
காலை 10 மணி முதல் 12 மணி வரை மாலை 3 மணி முதல் 5 மணி வரை

மற்ற ஊர் கேம்புகள் பத்திரிகைகளில் வெளி வந்து கொண்டிருக்கின்றன

GOVT. REGD. T.M. No. 204811 REGD. 15443. MFG. Lic. No. 5

வைத்திய திலகம் வைத்தியராஜ் டாக்டர் **S. காளிமுத்து,**

R.M.P. (IND.) V.V.C., A.M.I.H. R.H.M.P., R.A.M.P.

பழனி சித்தர் வைத்தியசாலை (Regd.) பழனி S.I.

போன்: 316, 316-A. வீடு: 420 பிரஸ்: 361 தந்தி: சித்தர்

பழனியில் பிரதி மாதம் 5ந்தேதி முதல் 8ந்தேதி வரையும், 14ந்தேதியும் 23ந்தேதி முதல் 30ந்தேதி வரை டாக்டரை நேரில் சந்தித்து ஆலோசனை மற்றும் மருந்துகள் பெறலாம்.

திருத்தலம் கண்டேன்

ஹரித்வார்

ஜனார்த்தனன்

இமயமலைச் சாரலின் அடித்தளமாக அமைந்துள்ள ஷிவாலிக் குன்றுகளின் அடிவாரத்தில் டில்லிக்கு வடக்கே 120 மைல் தூரத்தில் அமைந்துள்ள ஒரு சிறிய தலம் ஹரித்வாரம். இப்புனிதத்தலத்தை சிவபக்தர்கள் ஹரத்வாரம் என்று அழைப்பதுண்டு.

அயோத்தி, மதுர, மாயா, காசி, காஞ்சி, அவந்தி, துவாரகா என்ற ஏழு மோட்ச புரிகளில் மாயாபுரி என்ற பெயரையும் தாங்கி நிற்கும் புனித க்ஷேத்திரம் இது.

அயோத்தி நகர் மன்னன் சகரனது அசுவமேத யாகக் குதிரையை, பொறாமையினால் அமரேசன் என்ற அரசன் பிடித்து பாதாளத்தில் தவக் கோலத்திலிருந்த கபில முனிவர் முன் கட்டிச் சென்றான். குதிரையைப் பிடிக்க வந்த சகரனது அறுபதினாயிரம் புத்திரர்களும் தவம் கலைந்த கபில முனிவரது கோபக் கனலுக்கு இரையாகி எரிந்து சாம்பலாயினர். எரிந்த தன் மூதாதையர்கள் மோட்ச கதி அடைவதற்கென, பகீரதன் ஈசனைக் குறித்து தவம் புரிந்து கங்கையை இப் பூவுலகுக்குக் கொணர்ந்தது புராணக் கதை. இவ்வாறு சிவபிரானின் ஜடாமுடியிலிருந்து கங்கை ஆரவாரத்துடன் இப்பூவுலகில் பாய்ந்தது இந்த ஹரித்வார க்ஷேத்திரத்தில்தான் என்று கூறப்படுகிறது. இத்தலத்தில்தான் சந்தனு கங்கையை மணந்தாராம்.

கடந்த 1973ம் ஆண்டு பாத யாத்திரையாக வடநாட்டுக்கு வந்த ஸ்ரீ-காஞ்சி காமகோடி புதுப் பெரியவர்கள் சன்னிதானம் ஹரித்வாரத் தலத்தில் கங்காதேவிக்குக் கோயில் இல்லாதிருப்பதைக் கண்டு கோயில் எழுந்தருள அருளாசி கூறினார்கள். தொடர்ந்து புனித கங்காதேவிக்கு கங்கைக் கரையோரமாக, ''ஹரி-கீ-பௌடி'' என்ற நீராடும் துறையை அடுத்து சிறிது தூரத்தில் தமிழகத்துப் பாணியில் அழகிய சிறிய தொரு கோயில் கட்டப்பட்டது. 1978ம் ஆண்டு அஷ்ட பந்தன கும்பாபிஷேகம் நடைபெற்ற இக்கோயிலில் கங்கா தேவி, ''மகர வாஹினி'' என்ற பெயரில் கொலுவீற்றிருக்கிறார்.

காஞ்சி காமகோடி மடத்தின் ஆதரவுடன், பெருமக்களின் ஆதரவும் சேர்ந்து டில்லி காஞ்சி காமகோடி ஸேவா சமிதியினரால் இக்கோயில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஹரித்வாரத்தில் முக்கிய ஸ்நானக் கட்டம், மகாவிஷ்ணுவின் பாதச்சுவடு படிந்த இடமாகக் கருதப்படும், ''ஹரி-கீ-பௌடி'' என்ற துறையாகும். பல ஆண்டுகள் பிரும்மாவைக் குறித்துத் தவம் புரிந்த ஸ்வேத ராஜன் என்ற மன்னனுக்கு, இந்த ஸ்நான கட்டத்தில் எல்லா தேவதைகளும் நின்று சிவ, விஷ்ணுவின் ஆசியுடன், நீராடுபவர்களின் பாவம் நீங்கி அவர்கள் மோட்ச கதி அடையும் வரத்தை ஈந்ததன் காரணமாக இந்நீராடும் துறைக்கு பிரும்ம குண்டம் என்றும் பெயர் வந்ததாம்.

இங்கு ஆவேசத்துடன் அலை பாய்ந்து உருண்டு ஓடும் கங்கை நதியில் பக்தர்கள் பயமின்றிப் பிடித்துக் கொண்டு நீராடுவதற்கெனப் படிக்கட்டுக்களில் சங்கிலிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இக் கட்டத்தில் சிறிதும் பெரிதுமான கோயில்கள் பல உள்ளன. ஆதி சங்கரர் தன் நான்கு சீடர்களுக்கு உபதேசம் செய்யும் காட்சி ஒன்றும் கோயில் ஒன்றில் உள்ளது. பிரதி தினமும் அந்திப் பொழுதில் அக் கோயில்களைச் சேர்ந்த பூசாரிகள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, சங்க வாத்தியங்களும், மணிகளும், ஷெனாய் வாத்தியமும் பக்தி கீதங்களும் முழங்க, மாபெரும் அடுக்குத் தட்டுகளில் நீர் ரூபத்தில் உள்ள அன்னை கங்கைக்குக் கற்பூர ஆரத்தி எடுத்து பூஜித்து வணங்குகின்றனர். அழகான இச்சடங்கைக் காண வரும் மக்களும் தம் பொருளாதார நிலைக்கேற்ப பூக்கள் நிறைந்த சிறியதும் பெரியதுமான இலைகளினாலான கூடைகளில் நெய் அகல் விளக்குகளை ஏற்றிக் கங்கை நீரில் மிதக்க விட்டுத் தாமும் பூஜிக்கின்றனர். இந்த விளக்கு பூஜை காட்சியைக் காணக்

⌘ மகரவாஹினி



⌘ மகரவாஹினி கோயில்



கண் கோடி வேண்டும். அத்தனை அற்புதமாக இருக்கும்!

தவக் கோலத்தில் உள்ள ஸப்த ரிஷிகளைச் சுற்றி ஏழு பிரிவாக கங்கை செல்லும் ஸப்தரிஷி ஆசிரமமும் ஹரித்வாரத்தில் பார்க்க வேண்டிய ஓர் இடமாகும். சிவபிரானுக்கு அழைப்பு விடுக்காமல் தட்சன் நடத்திய யக்ஞத்துக்கு, பரமேச்வரன் தடுத்தும் கேளாமல் வந்த பார்வதி, தன் தந்தை வரவேற்காமல் நிற்பதைக் கண்டு மனம் நொந்து யாக குண்டத்திற்குள் குதித்து மாயமாக மறைந்தாள். இதன் காரணமாகவே ஹரித்வாரத்துக்கு மாயாபுரி என்ற பெயர் வந்ததாகக் கூறப்படுகிறது. தட்சன் அன்று யாகம் செய்த இடம் இன்றைக்கும் ஹரித்வாரத்தின் அருகே கங்கல் என்ற இடத்தில் கோயில் கட்டப்பட்டு விளங்கி வருகிறது.

புகைப்படம்: கட்டுரை ஆசிரியர்



எவ்வளவு தெரியும்-
காதலைப் பற்றி?

1. உலகில் முதல் காதல் அரும்பிய இடத்தின் பெயரில் ஒரு கிரிக்கெட் மைதானம் எங்கு உள்ளது?
(அ) அடிலெய்ட் (ஆ) பம்பாய் (இ) கல்கத்தா (ஈ) லண்டன்.

2. காதலுக்கு உரிய தேவதை யார்?
(அ) வீனஸ் (ஆ) ஈராஸ் (இ) மினர்வா (ஈ) மெர்க்குரி.

3. சம்ஸ்கிருத இலக்கியமான கீதகோவிந்தம் யார் எழுதிய நூல்?
(அ) காளிதாசர் (ஆ) பாணினி (இ) பாணபட்டர் (ஈ) ஜயதேவர்.

4. மன்மத பாணம் என்பது ஐந்து மலர்களால் ஆனது என்பார்கள். தாமரை, அசோக மலர், முல்லை, நீலோத்பலம்—தவிர ஐந்தாவது மலர் எது?
(அ) மாம்பூ (ஆ) மகிழம்பூ (இ) பவழ மல்லிகை (ஈ) நந்தியாவட்டை.

5. பறவைகளையும் விலங்குகளையும் காதலுக்காகத் தூது விட்டது போல் விஞ்ஞானக் கண்டு பிடிப்பு ஒன்றையும் தூது விடுவதாய் ஒரு கவிஞர் பாடினார். அது எது?
(அ) ராக்கெட் (ஆ) ஆகாய விமானம் (இ) ரேடியோ (ஈ) மின்சாரத் தந்தி.

6. காதல் சிற்பங்களுக்கு மிகவும் புகழ் பெற்ற இடம் எது?
(அ) ஹம்பி (ஆ) ஹளபேடு (இ) கஜுராஹோ (ஈ) அமராவதி.

7. தேனீரைப் பருகுவதை முக்கியமான திருமணச் சடங்காகக் கொண்டுள்ளவர் யார்?
(அ) ஜப்பானியர் (ஆ) சீனர்கள் (இ) சிங்களவர்கள் (ஈ) தாய்லாந்தியர்

8. திருக்குறள் இன்பத்துப் பாலில் இடம் பெற்றுள்ள குறட் பாக்களின் எண்ணிக்கை?
(அ) 110 (ஆ) 550 (இ) 250 (ஈ) 310.

9. இன்ப வாழ்க்கையைப் பெற முடிந்த காதல் ஜோடி எது?
(அ) லைலா மஜ்னு (ஆ) சகுந்தலை துஷ்யந்தன் (இ) ஹெலன் பாரிஸ் (ஈ) ரோமியோ ஜூலியட்.

10. தன்னுடைய துணையை இழந்தால் உயிர் வாழாது என்று கருதப்பட்ட பறவை எது?
(அ) புறா (ஆ) மயில் (இ) கிளி (ஈ) அன்றில்.

அமைப்பு: 'யெஸ்பால்'

விடைகள் :

1. (இ) கல்கத்தா ஈடன் கார்டன்
2. (ஆ) ஈராஸ்
3. (ஈ) ஜயதேவர்
4. (அ) மாம்பூ.
5. (ஈ) மின்சாரத் தந்தி விடு தூது என்ற பெயரில் ஒரு நூல் 1900 இல் வெளி வந்தது. ஏகாட்டூர் சிவசண்முகம் பிள்ளை எழுதியது.
6. (இ) கஜுராஹோ.
7. (அ) ஜப்பானியர்கள்.
8. (இ) 250
9. (ஆ) சகுந்தலை-துஷ்யந்தன்.
10. (ஈ) அன்றில்.

பத்தும் சரியானால் அற்புதம். 6 முதல் 9 — அருமை; 3 முதல் 5 — மகிழ்ச்சி. அதற்கும் கீழே — சோகம்.

புத்தாண்டு வெகுமதிகளை நரசுஸ் காபியுடன் அளிக்கிறோம்!

- 12 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டபரா செட்.
- 6 கிலோ நரசுஸ் காபிக்கு எவர்சில்வர் காபி டம்ளர்.
- 2 கிலோ நரசுஸ் காபிக்கு வண்ணத் துணிப்பை.
- 750 கிராம் நரசுஸ் காபிக்கு பெரிய எவர்சில்வர் ஸ்பூன்.
- 500 கிராம் நரசுஸ் காபிக்கு சிறிய எவர்சில்வர் ஸ்பூன்.


மொத்தமாகவோ, சில்லரையாகவோ வாங்கும் நரசுஸ் காபியுடன் கிடைக்கும் வெகுமதிக் கூப்பன்களைப் பெற்று வெகுமதிகளைப் பெறுங்கள்.

1982 ஜனவரி மாதம் முழுவதும் உள்ள விற்பனைக்கே வெகுமதிகள் உரியவை.

ஜீவனுள்ள ஒரே காபி!

நரசுஸ்

"தெர்மலோ" காபி!





நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.

ADWAVE/NCC/1917

ராஜ்குமாரின் ராஜினாமா



ஜீஞ

வேலைவெட்டி எதுவுமில்லாமல்ஆளுக்கு ஆள் போட்டி போட்டு ஈயோட்டிக் கொண்டிருந்தபோதுதான் 'படக்'கென்று பிரேமின் மூளையில் உதித்தது அந்த ஐடியா.

''ஒரு புதுக்கட்சி ஆரம்பித்தால் என்ன?''

கடகடவென்று சிரித்தான் ராஜ்குமார்.

''நாட்டில் இருக்கிற பிரச்னைகள் என்னென்னங்கிறதே நமக்குத் தெரியாது. நாம போய் ஒரு புதுக் கட்சியை ஆரம்பிச்சு... அது உருப்பட்டு...''

''போடா ஃபூல். ஒண்ணும் புரியாமப் பேசறியே. நாட்டில இருக்கிற பிரச்னைகளையெல்லாம் புரிஞ்சுக்கிட்டா அப்புறம் எவனுக்குக் கட்சி ஆரம்பிக்க 'தில்' வரும்?ஒண்ணும் புரியாம இருக்கிறதுதான், தி வெரி பெஸ்ட் க்வாலிஃபிகேஷன் ஆஃப் பாலிடிக்ஸ்'' என்று ஒரு பெரிய அரசியல் தத்துவத்தை உதிர்த்தான் பிரேம்.

''பணம்?'' என்றான் ராஜ்குமார்.

''நத்திங்... இப்ப நமக்கு வேண்டியதெல்லாம் சீண்டுவாரில்லாமல் அனாதையாகக் கிடக்கிற ஓர் அரசியல் கட்சிதான்.''

''எதற்கு?'' என்று விழித்தான் ராஜ்குமார்.

''அங்கேதான் உள்ளே நுழையும்போதே நமக்குப் பலமான வரவேற்புக் கிடைக்கும். அப்புறம்? அந்தக் கட்சியில் சேர்ந்த பத்தாவது நாள் அதை விட்டு விலகி ஒரு புதுக் கட்சி ஆரம்பிக்கிறோம்'' என்றான் பிரேம்.

''ஏன்?'' – விழியோ விழி என்று விழித்தான் ராஜ்குமார்.

''கொள்கைப் பிரச்னை. அந்தக் கட்சியின் கொள்கை நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரும் முட்டுக்கட்டை என்று அறிக்கை விட்டுவிட்டு வெளியேறுகிறோம்.''

''கட்சி எதுன்னே இன்னும் தெரியலே. அதுக்குள்ளே கொள்கையைப் பத்தி எப்படிச் சொல்ல முடியும்?''என்று குழம்பினான் ராஜ்குமார்.

''பைத்தியக்காரா, எந்தக் கட்சியானால் என்ன? கொள்கையாவது? மண்ணாவது?'' என்று சிரித்தான் பிரேம்.

''அது சரி. புதுக்கட்சி ஆரம்பிக்கிறது அத்தனை லேசுப்பட்ட காரியமா?''

''எவன் ஆரம்பிக்கிறான் சும்மா ஒரு அறிக்கைதான். நம் கட்சியைப் பிடிக்காத கட்சிக்காரன் பத்திரிகையில் வரும்படி செய்து விட்லாம். அப்புறம் கொஞ்சம் வசதியான ஏதோ ஒரு கட்சிக்காரனின் பார்வை நம்மேல் படாமலா போகும்? அந்தக் கட்சியை விட்டால் நாட்டுக்கு வேறு நாதியே கிடையாது என்று இன்னொரு அறிக்கை...''

''உடனே நமக்கு ஒரு அரியாசனம் கிடைத்து விடுமாக்கும்?'' என்றான் ராஜ்குமார்.

''அரியாசனம் வேண்டாம். அட்லீஸ்ட் ஒட்டிக்கிறதுக்கு ஒரு அரை ஆசனமோ கால் ஆசனமோ கிடைக்காமலா போய்விடும்? அப்புறம் சிரசாசனம் போட்டாவது முன்னுக்கு வந்துடணும்கிற ஆவேசம் வந்துவிடும். ஆவேசம் வந்துவிட்டால் அதுதான் அரசியல்....''

திறந்த வாய்க்குள் புகுந்து ஒரு ரவுண்டு அடித்துவிட்டுப் போன ஈயைக்கூட உணராமல் அவன் பேசுவதையே ஆச்சர்யத்துடன் கேட்டுக் கொண்டிருந்தான் ராஜ்குமார்.

அலையோ அலை என்று அலைந்து, நுழையாத சந்தெல்லாம் நுழைந்து கடைசியில் அந்தக் கட்சியின் அலுவலகம்(?) இருக்குமிடத்தைக் கண்டு பிடித்தே விட்டார்கள். பிரேமும் ராஜ்குமாரும் வீர கொலம்பஸ்களாக மூக்கைப் பிடித்துக்கொண்டு முன்னேறினார்கள் அந்த இடத்தை நோக்கி.

கதவைத் திறந்து ஒரு வயதான பெரியவர் மூக்குக் கண்ணாடியை (மூக்குக் கண்ணாடியா அது? ஒரு கம்பியில் இரண்டு கோலிக் குண்டுகளை மாட்டி விட்டது போல) காதுகளில் செருகிக் கொண்டு அவர்களை உள்ளே வரச் சொல்லாமல் ஒரு கணம் உற்றுப்பார்த்தார்.

''ராஜினாமாக் கொடுக்கத்தானே வந்திருக்கிறீர்கள்? உங்களை உள்ளே அழைத்து, காப்பி கொடுத்து அதை நான் வாங்க வேண்டுமா?'' என்றார் எரிச்சலெடுத்த குரலில்.

அவர் குரலில் தெரிந்த எரிச்சலை விடப் பரிதாபம்தான் அவர்களைக் கலக்கியது. ராஜினாமாக்களை வாங்குவதுதான் அவருடைய தினசரி வாடிக்கையாக இருந்து வருகிறது என்பதை எண்ணும்போது அவருக்காக ஒரு தரம் வாய் விட்டு அழவேண்டும் போலிருந்தது.

''நாங்கள் இன்னும் உங்கள் கட்சியில் உறுப்பினராகவே சேரவில்லை'' என்றான் பிரேம்.

''அப்படியென்றால் ராஜினாமாச் செய்ய உங்களுக்கு உரிமையில்லை'' என்று சொல்லி விட்டு இருமஆரம்பித்தார் அவர்.

அவர் இருமி முடித்ததும் பிரேம், ராஜ்குமாருக்கு ஜாடை காட்ட ''உங்கள்

கட்சியின் இணையற்ற கொள்கையின்பால் ஈர்க்கப்பட்டு அதில் எங்களை இணைத்துக் கொள்வதற்காக வந்திருக்கிறோம்'' என்று உருப்போட்டு வைத்த வசனத்தை ஒப்பித்தான்.

''இந்தக் கட்சிக்கென்று சொத்தெல்லாம் எதுவும் கிடையாதென்று தெரியுமில்லையா உங்களுக்கு '' என்று கேட்டார்.

'வேணும். நல்லா வேணும்' என்று தலையில் அடித்துக் கொண்டான் ராஜ்குமார். 'சந்து பொந்தெல்லாம் நுழைந்து கடைசியில் இப்படி ஒரு வார்த்தையைக் கேட்க வேண்டியிருக்கு. எல்லாம் உன்னால்தானே' என்பதைப் போலப் பிரேமை முறைத்துப் பார்த்தான். அரசியலில் இதெல்லாம் சகஜம் என்பதைப் போல அவனைப் பார்வையால் சமாதானப்படுத்தினான் பிரேம்.

''காசுக்காக இல்லை சார். கண்கண்ட கொள்கைக்காகத்தான் உங்கள் கட்சியில் சேர வந்திருக்கிறோம். வேண்டுமானால் உங்கள் தலையில் அடித்துச் சத்தியம் பண்ணட்டுமா?'' என்று கையை உயர்த்தினான் பிரேம்.

'லபக்'கென்று அவன் கையைப் பிடித்து அமுக்கினான் ராஜ்குமார். ''பிரேம், நீ ரொம்ப உணர்ச்சி வசப்படறே. இந்த ஆள் ஏற்கனவே ஒரு மாதிரியாக இருக்கிறார். தலையிலே கிலையிலே அடித்து அப்புறம் பொட்டுனு போயிட்டார்னு பெரிய வம்பிலே மாட்டிக்குவோம்'' என்று கிசுகிசுத்தான்.

முதன் முறையாக அவர்களைப் பெருமையோடு பார்த்தார் அவர். ''வாங்க உள்ளே'' என்று அன்பு பொங்க அழைத்தார்.

ஒருவாறு இரண்டாவது ரவுண்டு இருமலை முடித்துக் கொண்டு 'இருமல்' என்று அவர்களுக்கு விளக்கியவர், சுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஒரு பழுப்பான பெரிய புத்தகத்தை முக்கி முனகி எடுத்து 'இது தான் நம் தலைவரின் கொள்கைகள்' என்று மேஜையின் மீது தூக்கிப் போட்டதும் இருமோ இருமு என்று இரும ஆரம்பித்து விட்டார்கள் பிரேமும் ராஜ்குமாரும். ''கொள்கையிலே இத்தனை தூசிகளா?'' என்று சலித்துக் கொண்டான் பிரேம்.

ஒரு வழியாக அந்தக் கட்சியிலே உறுப்பினராகி வெளியே வரும்போது ஒருத்தரையொருத்தர் கட்டிக் கொண்டு அழாத குறைதான்.

"நாம் அந்தக் கட்சியில் சேர்ந்து இன்றோடு பத்து நாள் ஆச்சு'' என்றான் பிரேம்.

''எந்தக் கட்சியில்?'' என்றான் ராஜ்குமார்.

''விளையாடறியா?''

''நெஜமாத்தான்டா சொல்றேன். அன்னைக்கும் சரி, இன்னைக்கும் சரி எனக்கு அந்தக் கட்சியோட பெயரே தெரியாது. அந்த ஆளோட இருமலைத் தவிர வேறெதுவும் ஞாபகத்துக்கு வரவில்லை'' என்றான் ராஜ்குமார்.

''சரி, சரி. அதை விடு. இனி நம் திட்டப்படி நாளைக்குக் காலையிலே அங்கே போய் ராஜினாமாக் கடிதத்தைக் கொடுக்கப் போகிறோம்.''





ஆன்றோர் வாக்கு

தொழிலாளியின் கை, தொழில் செய்யும் போது பரிசுத்தமாகிறது. சோம்பேறியின் மன விருப்பம் அவனையே கொல்கிறது. தொழில் எத்தனை அசுசியாக இருந்தாலும் அதைச் செய்வதில் அவமானமில்லை. சோம்பலொன்றுதான் அவமானம். சோம்பல் ஒரு குற்றம். —பாரதியார்

மாயையை எப்படி உடைப்பது என்றால் ஆசைகளை அடக்குவதுதான் வழி. மனம் இருக்கும்வரை ஆசைகள் இருக்கத்தான் செய்யும். அதனால் மனத்தை அடக்கிவிட வேண்டும். மனம் அடங்கிவிட்டால் மரண நிலையில் இருப்பது போல் ஒரு சக்தியுமின்றி ஜடம் மாதிரி ஆவோம் என்று எண்ணக் கூடாது. மாறாக இதுதான் சகல சக்திகளுக்கும் ஆதாரமான நிலை. சாதாரணமாக ஏதாவது ஓர் அங்கத்தில் ஊனம் உள்ளவர்களுக்கு இன்னோர் அங்கத்தில் அதிக தீட்சண்யம் இருக்கும். பல வாய்க்கால்களில் ஒன்றில் ஜலத்தை அடைத்துத் திருப்பினால் இன்னொன்றில் அதிகம் நீர் பெருகுவது போல் ஓர் அங்கத்தில் ஊனம் இருப்பதே இன்னொன்றில் தீக்ஷண்யத்தைத் தருகிறது. ஆத்ம சக்தியைப் பலவாறாகச் சிதறச் செய்யும் எல்லா இந்திரியங்களையும் அடைத்துக் கொண்டு விட்டால் அப்போது சகல சக்திகளும் ஒரே இடத்தில் அமைதியாக ஆனந்தமாகக் கூடி நிற்கும். மிகுந்த சக்தியுடன் உலகுக்கு நல்லது செய்யலாம்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

ரசம் முழுமையாகப் போய்விட்டால் கண்ணாடியால் பிரதிபலிக்க முடியாது. கடவுளும் மதமும் போய்விடுகிறபோது ஒழுக்கம் என்பது ரசம் பூசாத கண்ணாடியாகிவிடுகிறது. —ராஜாஜி

விவாதத்தில் ஒரு முட்டாளைத் தோல்வி அடைய வைப்பது இயலாது.

—வில்லியம் ஜி. மெக்ஆடே.

ஒரு மனிதனை ஒரு பெண்மணியோ வளர்த்துக்கொண்டுள்ள பண்பாட்டை அவர்கள் ஒரு விவாதச் சண்டையின்போது நடந்து கொள்ளும் விதத்திலிருந்து எடை போடலாம். —பெர்னார்ட் ஷா

''மறுபடியும் அங்கேயா?நோ...நெவர்... இம்பாஸிபிள்'' என்று மூக்கைப் பிடித்துக் கொண்டு அலறினான் ராஜ்குமார்.

''பார்த்தியா பார்த்தியா? மத்தியிலே கைகழுவப் பார்க்கிறாயே! நம்ம ப்ளானெல்லாம் என்னாவது?''

''பெரிய்ய்ய்ய ப்ளான். என்னமோ நாம செய்யப்போற ராஜினாமாவை ஏழு கால் நியூஸ்ல சொல்லப் போற மாதிரி. இந்த ராஜினாமாவைப் பத்தி அங்கே இருக்கிற கொசுக்களைத் தவிர வேறு யாருக்குத் தெரியப் போகுது?'' என்று சலித்துக்கொண்டான் ராஜ்குமார்.

''நம்மவேலுமணிக்கு நேத்தைக்கு டிஃபன் வாங்கிக்கொடுத்தேனே எதற்குத் தெரியுமா? இப்ப அவன் 'நெருப்பு' பத்திரிகையில்வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். அவனை வச்சு நம்ம ராஜினாமாச் செய்தியை அட்லீஸ்ட் ஒரு பத்தி நியூஸாக எப்படியாவது போட வைக்கப் போறேன். அப்புறமா அதே சூட்டோடு....''

''ப்ளீஸ்! பிரேம். என்னை விட்டுடுடா. இதைவிட சயோட்டறதே புத்திசாலித்தனமான காரியமாப் படுது!''

''இந்த ஒரே ஒரு தடவை என்னோடுவா. அப்புறம் உன்னை நான் கூப்பிடவே மாட்டேன். ப்ளீஸ்டா'' என்று பதிலுக்கு ராஜ்குமாரின் முகவாயைப் பிடித்துக் கெஞ்சினான் பிரேம்.

''சார்'' என்ற கோரஸான குரலைக் கேட்டு நிமிர்ந்தவர் ''ஓ நீங்களா?'' என்று விட்டு உட்காரச் சொல்லாமல் அந்தப் பெரிய லெட்ஜருக்குள் தலையை நுழைத்துக் கொண்டார். ஒரு முறை தொண்டையைக் கனைத்து விறைப்பை வரவழைத்துக்கொண்டு சொன்னான் பிரேம்: ''நாங்க கட்சியிலிருந்து ராஜினாமாச் செய்ய முடிவெடுத்திருக்கிறோம்!''

லெட்ஜரிலிருந்து மறுபடியும் தலையை வெளியே எடுத்தவர், ''வாசலில் போர்டைக் கவனிக்கலில்லையா?'' என்றார்.

வாசலில் நிற்கிற ஆடு, மாடு, எருமை, சாணி இதுகளைக் கவனித்து வர்றதே பெரியவிஷயம். இதுல இவரோட போர்டைக் கவனிக்காததுதான் பெரிய குறைச்சல் என்று நினைத்துக்கொண்டான் ராஜ்குமார்.

''உங்கள் ராஜினாமாவை ஏற்றுக் கொள்ளும் உரிமை எனக்கில்லை'' என்றார் இருமியபடி.

பிரேமும், ராஜ்குமாரும் விழித்தனர்.

''ஆமாம். அந்தக் கட்சியின் கொள்கைகள் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரும் தடை என்பதை உணர்ந்து அங்கிருந்து ராஜினாமாச் செய்துவிட்டு இப்போது நாட்டின் சுபிட்சத்துக்காகப் புதியதோர் கட்சியை ஆரம்பித்துள்ளேன். கொள்கைகளை வகுத்துக் கொண்டிருக்கிறேன். உங்களுடைய இணையற்ற ஆதரவினை என் கட்சிக்குத்தரவேண்டுமாய்ப் பண்போடும் பாசத்தோடும்....''

விழுந்து விடாமல் இருக்க ஆளுக்கொரு தூணைப் பிடித்துக்கொண்டார்கள் பிரேமும் ராஜ்குமாரும்.




குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

முலைப்பால் குழந்தைக்கு மிகவும் சிறந்தது—ஏன்?

தூய்மையானது, கிருமிகளற்றது, குழந்தையின் ஜீரண முறைக்கு நூற்றுக்கு நூறு உகந்தது—தாய்ப்பால். பலவித நோய்களையும் எதிர்க்கும் சக்தியை அளிக்கிறது தாய்ப்பால். குழந்தைக்கு அன்பான உணர்வும் பாதுகாப்பும் கிடைக்க உதவுகிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு வாய்வு நோய்கள், சரும நோய்கள் ஏற்படுவது மிகவும் அரிது.

3 மாதம் ஆனபின், டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபாரிசு செய்கிறார்கள்

குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப்பட்டது—ஃபாரெக்ஸ். இதில் புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஷியம், பாஸ்பரஸ் வைட்டமின்கள் உள்ளன. இரும்புச் சத்தும் ஏராளம் அடங்கியது—ஃபாரெக்ஸ். ஆகவே, குழந்தையின் முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு—ஃபாரெக்ஸ்.



டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்

குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

6

வில்லிவாக்கத்தின் உட்பகுதியில் ஒரு சிறியவீட்டில் தனியாகவே இருந்தான் தாடி. முன் பின் தெரியாத இருவரின் திடீர்ப் பிரவேசம் அவனுக்குத் திகைப்பை உண்டாக்கிற்று. கணத்தில் சமாளித்துக் கொண்டு கைத் துப்பாக்கியை எடுத்து விட்டான்.

ஒரு திடீர் பல்டி அடித்து அவனது நீட்டிய கையை விவேக் உதைத்ததில் துப்பாக்கி ஒரு புறமும் தாடி ஆசாமி வேறொரு புறமுமாக விழுந்தார்கள்.

தாடிக்காரன் எழுந்திருக்கக் கைலாகு கொடுத்தான் முகேஷ்.

''உண்மையைச்சொல்லிவிட்டால் தப்பிப்பாய்! இல்லையேல் இன்னும் உபசாரம்நடக்கும்'' என்றான் அதட்டலான குரலில் முகேஷ்.

எதிரே விவேக் - கீழே கிடந்த துப்பாக்கியைப் பிடித்த கையோடு!

''எதைப் பற்றிக் கேட்கிறீர்கள்?'' என்றான் தாடி.

''பிரபுவை அடிக்கடி எதற்காகப் பார்க்கிறாய்?''

தயக்கம்.

''உம்!'' துப்பாக்கியை அவன் மார்பில் அழுத்தினான் விவேக்.

''பணம் பெறுவதற்காக!''

''எதற்காகப் பணம் பெறுகிறாய்?''

''நீங்கள் இருவரும் யார்? பிரபுவின் ஆட்களா? இந்த மாதிரி அவன் என்றைக்காவது ஒரு நாள் என்னிடம் நடந்துகொள்ளத்தான் போகிறான் என்று எனக்கு ஏற்கெனவே தெரியும்...''

''கேட்டதற்குப் பதில் சொல்! நாங்கள் பிரபுவின் ஆட்கள் அல்ல. நம்பு!''

''நான் தனபால். உறவினர் யாருமில்லாத தனி ஆள். தேடித் தேடியும் வேலை ஒன்றும் கிடைக்காதவன். அதனால் எரிச்சல். வெறுப்பு. எதைக் கண்டாலும், யாரைக் கண்டாலும். என்னுடைய உயிரை மாய்த்துக்கொள்ள அன்றைய நடு நிசியையும், கடலையும் தேர்ந்தெடுத்தேன். நட்ட நடு நிசியில் சென்னையே காலை மடக்கிச் சுருண்டு தூக்கத்தில் ஆழ்ந்திருந்தபோது கடலை நெருங்கிக் கொண்டிருந்தேன். அப்போது தான் ஒரு கார் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. பதுங்கினேன். தூங்கிக்கொண்டிருந்த ஒரு விளக்கின் கீழே நின்ற அந்தக் காரிலிருந்து ஒருவர் இறங்கி உள்ளிருந்து ஒரு சாக்கு மூட்டையை எடுத்தார். அதைத் தூக்க அவர் ரொம்பச் சிரமப்படுவது அவரது திணறலிலிருந்தும் முனகலிலிருந்தும் தெரிந்தது. ஒரு வழியாய்த் தூக்கி வயிறு அளவு கடலுக்குள் நடந்து சென்று மூட்டையைக் கடலில் வீசி எறிந்தார். திரும்பி அவர் வந்த போது,—காரின் அருகில் நான் நின்றிருந்தேன்,

அவர் வெளிறிவிட்டார். பீதி. குப்பென வேர்வையில் குளித்து விட்டார். ''நீ...நீ... பார்த்துவிட்டாயா?'' என்று கேட்டார்.

''ஆமாம்.''

''மறந்துவிடு. பணம் தருகிறேன்.''

''எவ்வளவு?''

''ஆயிரம்!''

''போதாது. அதற்கும் மேலே!''

''தருகிறேன்!''

பிரபு காரிலேயே போய்விட்டார். எனக்கு வாழும் ஆசை வந்து விட்டது. வேண்டும் போதெல்லாம் பணம் கொடுக்க ஒரு காமதேனு கிடைத்திருக்கிறாரே!... நான் இது வரை மூன்று முறை அவரிடம் பயமுறுத்திப் பணம் பெற்றிருக்கிறேன்...''

''ஒவ்வொரு தடவையும் எவ்வளவு?'' முகேஷ் கேட்டான்.

''கணக்கு இல்லை. நான் அவரிடம் செல்லும் சமயம், அவரிடம் எவ்வளவு இருக்குமோ அவ்வளவையும் வாங்கிவிடுவேன். இன்னும் நிறைய அவரிடமிருந்து பிடுங்கத்தான் திட்டம். என்ன செய்வது? நான் வாழ வேண்டுமே!''

''சரி! அந்த மூட்டையில் என்ன இருந்தது சொல்!''



''இந்த நிமிஷம் வரை அது பற்றிச் சத்திய மாய் எனக்குத் தெரியாது சார்! என்னைக் கண்டு பிரபு பயந்தார். அவரது பயத் தையே என் பலமாக்கிக் கொண்டு, அவரிட மிருந்து பணம் கறந்து கொண்டிருக் கிறேன்!''

அவனை அழைத்துக் கொண்டு போய் போலீஸில் ஒப்படைத்தார்கள். அறைக்குத் திரும்பியவுடன் விவேக் சுவாரஸ்யமாகக் கேட்டான்:

''ரூபா எங்கே இருக்கிறாள்?''

''அவள் இறந்து விட்டாள். சாகடிக்கப் பட்டாள். எல்லாவற்றையும் தொகுத்துச் சொல்கிறேன். கேள். ரூபா இளைய மகள். மீனா மூத்த மகள். மீனாவை மணந்து கொண்ட பிரபுவுக்கு ரூபா மேல் ஒரு கண்.



அவளை இரண்டாந் தாரமாகவே மணந்து கொள்ள முடிவெடுத்தான் பிரபு. இந்தத் தடவை இரண்டு மாத லீவில் வந்தாள். வருவதற்கு முதல் நாள், நண்பன் மதன் தன்னிடம் தவறுதலாக நடந்துகொண்டது அவளது மனத்துக்கு வேதனை அளித்துள்ளது.

....சென்னையில் பிரபுவின் வீட்டில் தங்கி யிருந்த அவளை எல்லா இடங்களுக்கும் கூட்டிச் சென்று அவள் மனம் கோணாதபடி நடந்து அவளது அன்பை அதிகமாக்கிக் கொள்ள முயன்றிருக்கிறான் பிரபு. இன்னும் ஒரு வாரத்தில் அவள் பெங்களூர்போய் விடு வாளே என்ற எண்ணத்திலும் ஏக்கத்திலும் அவளையே வளைய வளைய வந்திருக்கிறான்!''

''மனைவி மீனுவுக்கு இவையெல்லாம் தெரி யாதா? அவள் ஒன்றும் கேட்கவில்லையா பிரபுவை?''

''விவேக்! பிறப்பு விசித்திரமானது. இளையவள் ரூபாவுக்குநேர் எதிர் மீனு! கட்டுப் பெட்டி. படித்தவள்தான். ஆனாலும் கல் லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்ற கொள்கைவாதி. தன் கணவன், தன் தங்கைதானே என்றுஇருந்துவிட்டாள். மேலும் கணவனுடன் பெரும்பாலான விஷ யங்களில் ஒத்துப் போகிறவள் கூட! ஒரே நாள் அவர்கள் வீட்டில் நான் தங்கியதில் இதைத் தெரிந்து கொண்டேன்...

...பெங்களூருக்கு ரூபா புறப்படுவதற்கு முதல் நாள் அதாவது 26–11–77. 'மயிலே மயிலே இறகு போடு' என்றால் போடாது என்று தெரிந்து கொண்ட பிரபு ரூபாவிடம் தவறுதலாக நடக்க முடிவுசெய் தான். அப் படி நடந்து விட்டால் வேறு வழியின்றி ரூபா அவனையே மணந்து கொண்டாக வேண்டும் என்ற குருட்டு எண்ணம். அதன் படி இரவில் ரூபாவின் அறைக்குள் வெறி யோடு சென்றான். ரூபா அப்போதுதான் பீதாம்பரத்துக்கு ஒரு இன்லேண்டு கடிதம் எழுதி முடித்திருக்கிறாள். பிரபுவைப் பார்த்து விட்டுப் பதறிப்போன ரூபா கடிதத்தைக் கீழே போட்டுவிட்டு அவனிடமிருந்து தப் பிக்க முயற்சி செய்திருக்கிறாள். அவனோ அவளைப்பலாத்காரமாகக்கெட்டியாக பிடிக்க அவள் அவனிடமிருந்து திமிற, அவன் மறுபடியும் அவளை நெருங்க... இப்படியாக ஒரு போராட்டம். முன்னதாகவே அவன் அறைக் கதவை உட்புறமாகப் பூட்டியிருந்த தால், வெளியே ஓடமுடியாமல் திணறினாள் ரூபா. இந்த மிருகத்தனமான முயற்சியில் ரூபாவுக்கு மரணம் சம்பவித்திருக்கிறது. ஒன்று பிரபு அவளைப் பயங்கரமாகத் தாக்கி யிருக்கலாம். அல்லது அவளை அவன் மூர்க் கத்தனமாக அணைத்தபோது கழுத்து நெருக்கி.....''

''சே! பரிதாபம்!'' விவேக் சூள் கொட்டினான்.

''அறைக் கதவைத் திறக்க முடியாததால் ஜன்னல் வழியாக இக் காட்சியைக் கண் டிருக்கிறாள் மீனு. அவள் கண் முன்னே ரூபாவின் துர் மரணம் நடந்திருக்கிறது. அப்போது சரியாக மணி எட்டு இருக்கும் என்று ஊகிக்கிறேன். அந்த அதிர்ச்சியில் தான் எட்டு மணிக்கெல்லாம் மீனு அலறு வதும், மயக்கமாகி விழுவதும்.

''ரூபா இறந்து விட்டதும்தான், தன் தவறு பிரபுவுக்குத் தெளிவாகியிருக்கிறது. தப்பிக்க வேண்டுமே? மனைவியின் ஒத் துழைப்புக்காகக் கெஞ்சியிருக்கிறான். அவள் ஒத்துழைக்காவிட்டால், தான் தூக்குமேடை ஏறுவது உறுதி என்றெல்லாம் பயம் காட்டி யிருக்கிறான். வேறு வழி? கணவனைக் காட் டிக் கொடுக்க மீனு எப்படிச் சம்மதிப்பாள்? ஒத்துழைத்தாள். அன்றையநடுநிசியில் ஊரே தூங்கும்போது பிணத்தை மறைக்க பிரபு தீர்மானித்திருக்கிறான். நண்பனின் காரை வாங்கிக் கொண்டு பிணத்தோடு கடலுக்கு நள்ளிரவில் விரைந்து விட்டான். அப்போது தான் தற்கொலை செய்துகொள்ள வந்த தனபால் அவனைப் பார்த்து விட்டான்!''

''எல்லாம் சரி! ஆனால்...'' என்று இழுத் தான் விவேக்.

''சந்தேகப்படுவதைக் கேள்!''

''ரிசர்வ் செய்திருந்தபடி ரூபா பெங்க ளூருக்கு அந்தத் தினத்தில் பயணமானதாக ரயில்வே புக்கிங் ஆபீஸிலும் பதிவாகி யுள்ளதே! அது எப்படி?''

''ரூபா பயணமாகவில்லை. பிரபு, தன் மீது யாருக்கும் சந்தேகம் ஏற்படக் கூடாது என்பதற்காக ரூபாவின் பெயரில் மீனுவைப் பயணமாகச் சொல்லி யிருக்கிறான். இரு வரும் உடன் பிறந்தவர்களாதலாலும் வய திலும் சற்று முன் பின் இருந்தபடியாலும் இது சாத்தியமாக இருக்கலாம் அல்லவா? அப்போதெல்லாம் மீனு நல்ல உடம்போடு தானே இருந்திருக்கிறாள்?''


''மற்றொன்று. ஒவ்வொரு மாதமும் 25 முதல் 28ம் தேதிக்குள் ரூபாவிடமிருந்து பீதாம்பரத்துக்குக் கடிதம் வரும். இல்லையா? நவம்பர் 26ல் கொல்லப்பட்ட ரூபாவிட மிருந்து எப்படி டிசம்பர் 26ல் எழுதப்பட்ட தாய்ச் சொல்லப்படும் கடிதம் பீதாம்பரத் துக்குக் கிடைத்தது?''

''அக்கடிதம் நவம்பர் 26 அன்று இரவு பிரபு பலாத்காரம் செய்ய முயல்வதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பு ரூபா எழுதியது தான். கடிதத்தில் தன் கையெழுத்துக்குக் கீழே அவள் 26–11–77 என்று எழுதி யிருந்ததில் மாதத்தை மட்டும் எவ்வித அழித் தல் இல்லாமல் சாமர்த்தியமாக 12 என்று மாற்றியிருக்கிறான் பிரபு. கடிதத்தை உற் றுக் கவனித்தால்தான் இவ்வாறு மாற்றப் பட்டிருப்பது தெரியும். இதற்காக மெனக் கெட்டு பெங்களூர் வரை தானே சென்று அக்கடிதத்தைப் போஸ்ட் செய்திருக்கிறான் அவன். டிசம்பர் 25, 26, 27 மூன்று தினங் களும் பிரபு தனது பர்னிச்சர் மார்ட்டுக்கு வரவேயில்லை என்றும் அதனால் அந்த மூன்று தினங்களிலும் தனது முழு நிர்வாகம்தான் என்றும் குருசாமி தன் டைரியில் எழுதியிருக் கிறானே! நினைவுபடுத்திப் பார்!''

''உங்கள் தகவல்படி இன்ஸ்பெக்டர்நடந் திருப்பார் அல்லவா?'' விவேக் கேட்டான்.

''நிச்சயம்! இந்நேரம் பிரபுவைப் பிடித்து உள்ளே தள்ளியிருப்பார். வா, தபாலாபீ சுக்கு. பீதாம்பரத்துக்குத் தகவல் தெரி விக்க வேண்டியது அவசியம் மட்டுமில்லை– நமது கடமையும் கூட!'' என்று நடந்தான் முகேஷ்.

(முற்றும்)


கிரிக்கெட் கலாட்டா!
அப்பா! அந்தக் கறுப்பு கோட் போட்டவர், அவசரமா போணும்னு ஒரு விரலைக் காமிக்கிறாரு - ஆனா எல்லோரும்.... ஓ... அவுட்.... அவுட்....ன்னு கத்தறாங்க ஏம்பபா...?



கருத்து: எல்.ஆர்.ராஜ பால்கர்
சித்திரம்: செல்லம்



Dr. S. R. சிவராஜ்

வாலிபர்கள் ! **மணமானவர்கள் !!**

வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பலஹீனங்களை நீக்கி,
தாம்பத்திய வாழ்வை இன்பமுடன் அனுபவித்து மகிழ,
இன்றே புகழ் பெற்ற 'ரகசிய வியாதி நிபுணர்'
ஆண்மைக் குறைவு நீக்கும் 'ஆரிய வைத்திய மேதை'

'கவிராஜ்' டாக்டர் S. R. சிவராஜ், R.I.M.P.

அவர்களிடம் சிறந்த முறையில் சிகிச்சை பெற, அவர் சுற்றுப்பயண முகாம்களில் நேரில் சந்தித்து வாழ்வில் மகிழ்ச்சி காணுங்கள். நேரில் சந்திக்க முடியாதவர்கள், குறைகளை விபரமாகத் தலைமை அலுவலகத்துக்கு எழுதவும். (கடிதங்கள் ரகசியமாகப் பாதுகாக்கப்படும்.) மருந்துகள் விரிவான விளக்கங்களுடன் வி.பி.பி. மூலம் அனுப்பி வைக்கப்படும்.

✵ குழந்தை பாக்கியம் (கர்ப்ப அணுக்கள்) இல்லாதவர்கள்
✵ கல்யாணமாகி பல ஆண்டுகளாகக் குழந்தை பாக்கியமே இல்லாதவர்கள்

சிறந்த முறையில் சிகிச்சை பெற்று, கர்ப்ப அணுக்கள் தேவையான அளவு உற்பத்தியாகி குழந்தை பாக்கியம் பெற்று மகிழ்ச்சியடையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். 35 வருட சுற்றுப் பயணத்தில், அவரிடம் சிகிச்சை பெற்றுப் பலன் அடைந்தவர்கள் பல்லாயிரம் பேர்கள். அவர்களைப் போல் நீங்களும் பலன் அடைய வேண்டுமல்லவா?

ஆலோசனைக் கட்டணம் ரூ. 10-00 ✵ சிகிச்சைக் கட்டணம் தனி

எமது கேட்லாக் வேண்டுவோர் ரூ. 1-00 ஸ்டாம்ப் அனுப்பியோ, M.O. செய்தோ பெறலாம்

எமது உயர்ந்த — விசேஷ — ஸ்பெஷல் மருந்துகள் கிடைக்கும்

உயர்ந்த ரக சிகிச்சை 1 மாதம் ★ விசேஷ சிகிச்சை 1 மாதம் ★ ஸ்பெஷல் சிகிச்சை 1 மாதம்

A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	A வகுப்பு	B வகுப்பு	C வகுப்பு	மீடியம்	ஸ்பெஷல்	1 நெம்பர்
1500-00	750-00	500-00	400-00	300-00	200-00	175-00	150-00	115-00

ஹெட்டாபீசுக்கு லெட்டர் எழுதி V.P.P. மூலமும் பெறலாம். தேவையான சிகிச்சைக்கு டிராப்ட் மூலம் (பேங்க் ஆப் இந்தியா) வாங்கி அனுப்பினால் ரிஜிஸ்டர் பார்சல் மூலம் பெறலாம்.

மாதாந்திர சுற்றுப் பயண விவரம்: ஒவ்வொரு ஆங்கில தேதிகளிலும்

பிரதம வைத்தியர் தங்குமிடங்கள்

சென்னை-600 001. பிரதி மாதம் 3-ந் தேதி ஹோட்டல் ரோலக்ஸ். போன்: 24236. 190, NSC போஸ் ரோடு, பூக்கடை எதிரில். காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை.

சென்னை-600 002, 4 முதல் 8ந் தேதி வரை. ராமச்சந்திரா லாட்ஜ். போன்: 846526 6, அத்திப்பட்டன் தெரு, அண்ணாசாலை சமீபம். காலை 7 முதல் இரவு 7 மணி வரை.

சேலம் தலைமை அலுவலகம்: 11, 16, 17, 18, 19, 20, 27, 28, 29, 30 தேதிகள்.

திருச்சி: 9, 10 தேதி. அசோக் பவன், ஜங்ஷன் ரோடு. போன்: 25763. காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

கோவை: 12, 13ந் தேதி. ஸ்ரீ லக்ஷ்மி லாட்ஜ், ராஜ வீதி. போன்: 33330.

பொள்ளாச்சி: 14ந் தேதி. மாடர்ன் லாட்ஜ். தாஜுகா ஆபீஸ் எதிர் சந்து. காலை 8 மணி முதல் 12 மணி வரை.

திருப்பூர்: 14ந் தேதி. ராமகிருஷ்ண லாட்ஜ். ஈஸ்வரன் கோவில் வீதி. மாலை 3 மணி முதல் 5 மணி வரை.

ஈரோடு: 15ந் தேதி. ஆனந்த் லாட்ஜ். ஈஸ்வரன் கோவில் வீதி. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

மதுரை: 21, 22ந் தேதி: மணீஸ் கேப் (டவுன் ஹால் ரோடு) போன்: 22019. காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை.

தூத்துக்குடி: 23ந் தேதி: ராதா லாட்ஜ். ஜி.சி. ரோடு. காலை 9 முதல் பகல் 12 மணி வரை.

திருநெல்வேலி: 23ந் தேதி. நெல்லை லாட்ஜ் மாலை 3 மணி முதல் இரவு 8 மணி வரை.

உதவி வைத்தியர் தங்குமிடங்கள்:

விழுப்புரம்: 3ந் தேதி. வாசவி விஹார் ஹோட்டல், எம். ஜி. ரோடு. காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

கடலூர் என்.டி. 3ந் தேதி. ஹோட்டல் பிருந்தாவன். மாலை 3 முதல் இரவு 8 மணி வரை.

சிதம்பரம்: 4ந் தேதி. ஜெயராம் லாட்ஜ். (மேல வீதி) காலை 7 முதல் பகல் 3 மணி வரை.

கும்பகோணம்: 5ந் தேதி. தாஜ்மஹால் லாட்ஜ் பொற்றாமரைக் குளம் (போன்: 1423) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

தஞ்சாவூர்: 6ந் தேதி. அசோகா லாட்ஜ். (ராஜா கலை அரங்கம்) காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை.

திண்டுக்கல்: 22ந் தேதி. ஆரிய பவான் லாட்ஜ் பழனி ரோடு. காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை.

விருதுநகர்: 23ந் தேதி. ஹோட்டல் அஜந்தா. காலை 7 மணி முதல் 12 மணி வரை.

இராஜபாளையம்: 23ந் தேதி. அசோகா லாட்ஜ். மாலை 3 மணி முதல் 6 மணி வரை.

நாகர்கோவில்: 24ந் தேதி. உடுப்பி ஸ்ரீ கிருஷ்ண பவன், போஸ்டாபீஸ் ஜங்ஷன் ரோடு. காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை.

தென்காசி: 25ந் தேதி. பார்வதி லாட்ஜ் காலை 7 மணி முதல் பகல் 12 மணி வரை.

தலைமை அலுவலகம்:

சிவராஜ் சித்த வைத்தியசாலை

(சென்ட்ரல் டாக்கீஸ் வடபுறமுள்ள ஏரியின் முன் பக்கம்)

காந்தி ஸ்டேடியம் - சேலம்-636007

அணைகள் உடைகின்றன

சப்தமானத்வனியுடனும், மிக சுத்தமான உச்சரிப்புடன் செய்யும் தொழிலே வணங்க வேண்டிய வகையில் பவ்யமாகப் பணிவுடன் அமர்ந்து, ஈடுபாட்டினால் மெய் மறந்து சம்ஸ்கிருதத்தில் மந்திரங்களை முழுங்கிக் கொண்டிருந்தார் சிவராம சாஸ்திரிகள். தூரத்தே ஹாலின் சோபாவின் நுனியில் ஒரு வித லஜ்ஜையுடன் அமர்ந்திருந்த அவரது மகன் சேதுராமனை, தந்தையை இமைகொட்டாது பிரமிப்புடன் பார்த்திருந்தான்.

வீட்டுப் பெரியவர் மறைந்து விடவே, அந்த ஆத்மன் இன்னொரு லோகத்திலோ, அல்லது மறு பிறவி எடுத்திருக்கும் பட்சத்தில் இந்தப் பூமியிலோ அன்னத்துக்காக அலையாமல் இருக்க பித்ரு சௌபாக்கியத்துக்காக அந்தப் பெரியவர் பெற்ற புத்திரர்களால் நடத்தப்படும் வருடாந்தர சடங்கு அது. வீட்டுக்குரியவர்கள் அலட்சியமாக சிவராம சாஸ்திரிகளுக்கு எதிரே அமர்ந்திருந்தார்கள்.

பக்கத்தில் டிரான்ஸிஸ்டர். அதிலே மெல்போர்னில் நடக்கும் டெஸ்ட் மாட்ச் வர்ணனை; இடையில் ஒரு தொலை பேசி அழைப்பு. வீட்டுக்கு மூத்த பிள்ளை தொலை பேசியில் பேசிவிட்டு வேகமாய் வந்து அமர்ந்தார்: ''இங்கே பாருங்கோ சாஸ்திரிகளே, ஃபாக்டரியிலேருந்து பேசினா... உடனடியா நான் ஒரு போர்ட் மீட்டிங்கிலே கலந்துக்க வேண்டிருக்கு.... நீட்டி முழக்கி ராகம் போட்டு மந்திரங்களைச் சொல்லாம சட்புட்னு காரியத்தை முடியுங்கோ.''

சிவராம சாஸ்திரிகளுக்குப் பிடரியில் தட்டியதைப் போன்ற உணர்வு ஏற்பட்டது. அருவி நீராகக் கொட்டிய மந்திர வெள்ளம் தடைப்பட்டு விட்டது. அவர் தம்மைச் சுதாரித்துக் கொள்வதற்குள் பிள்ளைகளின் தாயார், மறைந்தவரின் மனைவி பேசினாள்:

''ஆமாம்... சாஸ்திரிகளே, இவா அப்பா உசிரோடு இருந்தப்போ எதையுமே சுருக்கமாச் சொன்னாத்தான் பிடிக்கும்... நீங்க இத்தனை விஸ்தாரமா மந்திரம் சொல்றதை அவர் பார்த்திருந்தா அவருக்குக் கோபம் வந்திருக்கும்.''



ராமாபுரம் சந்துரு

அந்த நேரத்திலும் அந்த மாமி பேசிய வார்த்தைகள் ஸேதுவுக்குள் கொஞ்சம் சிரிப்பை வரவழைத்தது.

''மாமா உசிரோடிருந்தா எங்கப்பா இங்க ஏன் சிராத்தம் பண்ண வர்று?'' என்று கேட்டுவிட நினைத்தான்.

மாமியைத் தொடர்ந்து கடைசிப் பிள்ளை பேசினுன்:

''அம்மா! என் பிள்ளைகளோட காலத்தில இந்த மாதிரிப் புரோகிதர்களைக் கட்டிண்டு அழ வேண்டியிருக்காது. கம்ப்யூட்டர் புரோக்ராம் போட்டுட்டேன்னு நிமிஷக் கணக்கிலே அது எல்லாத்தையும் முடிச்சுடும்.'' இவன் இப்படிச் சொல்லி முடித்ததும் எல்லாரும் 'கொல்'லென்று சிரித்தார்கள்.

சிவராம சாஸ்திரிகளுக்கு உள்ளுக்குள் கோபம் பொங்கிக் கிடப்பதை ஸேதுவால் உணர முடிந்தது. வருடாந்தர காரியத்தைச் சட்டென்று முடித்தார்.

அவர் தட்சிணை பெறும் கட்டத்தில் பேசியிருக்கிற தட்சிணைக்குக் குறைவாகக் கொடுக்கப்பட்டிருப்பதைக் கண்டு 'இன்னும் அஞ்சு ரூவா சேர்த்துக் கொடுத்தாத் தேவலை' என்று பவ்யமாகத் தெரிவித்தார்.

பாண்ட் சட்டையை மாட்டிக் கொண்டிருந்த பெரிய பிள்ளை கூறினர்:

''உங்களுக்கெல்லாம் எவ்வளவு கொடுத்தாலும் திருப்தி இருக்காதுங்காணும்!''

அதற்கு மேலும் பேரம் பேசாமல் சாஸ்திரிகள் புறப்பட்டு விட்டார். ஸேது அவரைத் தொடர்ந்தான்.

''ஸேது, அவாள்ளாம் அப்படிப் பேசினதை நெனைச்சா உனக்கு வருத்தமா இருக்கா?.. ஆனாலும் நான் மந்திரங்களை வியாபாரம் செய்யறவன்தானே. அவா என்னோட கஸ்டமர்.. அவா திருப்திதானே நமக்குமுக்கியம்.. கஸ்டமரைப் பகைச்சுண்டு என் குழந்தைங்க வயத்திலே ஈரத் துணி போடறது மிகப் பெரிய பாவம் இல்லையா?''

''எவ்வளவுதான் விஞ்ஞானமும் நாகரிகமும் முன்னேறியிருந்தாலும், சில அடிப்படை நியதிகளிலேந்து மனிதன் தன்னை விடுவிச்சுக்க முடியாது இல்லையா... விஞ்ஞானம் வளர்ந்துட்டுதேன்னு எந்த மனுஷனுவது சாப்பிடாமலோ தூங்காமலோ இருக்கானு... கேவலம் தூக்கத்தையும் சாப்பாட்டையும் தியாகம் செய்ய முடியாத மனிதன், வளர்ச்சிங்கிற பேரால காலம் மாறிச்சேங்கிற காரணத்தால, பகவான் சம்பந்தப்பட்ட விஷயங்களையும், அத்தியாவசியமான ஆத்மீக கடமைகளையும் நிராகரிக்கத் துணிஞ்சுடறுனே!''

ஸேது பேசப் பேச அவனையே பார்த்துக் கொண்டிருந்தார் சிவராம சாஸ்திரிகள். வெறும் பி.காம் மூன்றும் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் மாணவனின் பேச்சாக அவருக்கு அது படவில்லை. அவர் மனத்திற்குப் பட்டது ஸேது ஒரு ஜீனியஸ்.


சாஸ்திரிகள் ஓலை வேயப்பட்ட, காரைகள் பெயர்ந்து வந்துவிட்ட குடிசைக்குள் நுழைந்தார். அந்தக் குடிசைக்குள் இருக்கும் எலிகள், கரப்பான்கள், பல்லிகள், மூட்டைப் பூச்சிகள் இந்த ஐஸ்வரியங்களை நீக்கிவிட்டுப் பார்த்தோமானுல் மீதி இருப்பவர்கள் இவர்கள்: சாஸ்திரிகளின் மனைவி பங்கஜம், மூத்தவன் ஸேது, தொடர்ந்து தாவணி போட்டுவிட்ட சௌபாக்கியம்; அதற்கு அடுத்து வரிசையாக பூர்ணம், மங்களம், சம்பூர்ணம், அன்னபூர்ணம் என்றெல்லாம் அவர் பெண்களுக்குப் பெயர் சூட்டியதற்குக் காரணம் உண்டு; இப்படிப்பட்ட முழுமையான நிறைவுப் பெயர்களை வைத்தால் அடுத்து குழந்தைகள் பிறக்க மாட்டார்கள் என்பது ஐதிகம்; அந்த ஐதிகத்தின் நம்பிக்கையையும் மீறித்தொடர்ந்து பிறந்து விட்ட பெண்கள்.

'தொண்டை கிழிந்தது' என்ற சொற்களை நிஜப்படுத்துவது போல மந்திரங்களை முழங்கி முழங்கியே சிவராம சாஸ்திரிகளின் தொண்டைக்கு ஆபத்து வந்து விட்டது. பேசக்கூட முடியாத அளவில் தொடர்ந்து ஏற்பட்ட உபாதைகளால் அரசாங்க ஆஸ்பத்திரிக்கு தொடர்ந்து சென்றுவந்ததில் ஆஸ்பத்திரியைச் சார்ந்த டாக்டர்கள் அலட்டிக் கொள்ளாமல், தொண்டையில் ஏற்பட்டிருப்பது மிகப் பெரிய ரணம் என்றும், முதிர்ந்த நிலையில் புற்று நோய் என்பதாகவும் தெரிவித்து விட்டார்கள். சிவராம சாஸ்திரிகளுக்கு நோயால் ஏற்பட்ட அந்தக் கணத்தின் வலியை விட குழந்தைகள், மனைவி எதிர்காலத்திற்காகத் தான் விட்டுச்செல்லப் போகும் 'சூன்ய சேமிப்பு' நினைவில் நிதர்சனமானதால் ஏற்பட்ட வேதனை பெரிது. அவர் கண்கள் கண்ணீரைப் பொல பொலவென்று கொட்டியது. ஸேதுவைப்பக்கத்தில் அழைத்தார். அவன் தலையைத் தடவி உடலை வருடி, 'நான் உன்னைத்தான் நம்பியிருக்கேன்.' என்று சொல்லாமல் சொல்லிப் புலப்படுத்தினர்.

ஒருநாள் கொஞ்சம் அவசரமான அவசியமானமருந்துக்காக நிறையப் பணம் தேவைப்பட்டது. ஆங்காங்கே நிறைய இடங்களில் பணம் பெற்றுத்தான் அன்றுட வண்டி ஓடிக் கொண்டிருந்தது. ஆகவே மருந்துக்கான பணத்துக்குபங்கஜம் எங்கேபோவாள்? ஸேதுவைக் கூப்பிட்டு அனுப்பி ஒரு வீட்டு

அவன்: ''என்ன நிருபர் ஸார்! என்னத்துக்கு வாசல் படியில் உட்கார்ந்து அழுதுக்கிட்டிருக்கீங்க?''

நிருபர்: ''பூலன்தேவியைப் போய்ப் பேட்டி கண்டு எழுதிக்கிட்டு வரணுமாம் நான்... எடிட்டர் கண்டிப்பாச் சொல்லிட்டாரு!'' உ. ராஜாஜி



விலாசத்தைக் கொடுத்து, நிலைமையை எடுத்துச் சொல்லிப்பணம் வாங்கி வர அனுப்பினுள். ஸேது அந்தவீட்டுக்குத் தந்தை நன்ருக இருந்த நாட்களில் அவருடன் சென்றிருக்கிருன்.

ஸேது வீட்டுக்குள் சென்ருன். எல்லாரும் எங்கோ வெளியில் புறப்படுவதற்குஆயத்தம் செய்து கொண்டிருந்தார்கள். ஸேதுவை யாரும் கவனிக்கவில்லை.

''அத்தே சீக்கிரமா புறப்படுங்கோ; பெரியவாளை இப்பவே பார்க்கப் போனுத்தான் சரியா இருக்கும்.''

''ஏண்டிநாச்சி புடவை புதுசா... பட்டுத்தானே?''தொட்டுப்பார்த்து உறுதிப்படுத்தி அத்தை கேட்டாள்.

அதற்குள் உள்ளேயிருந்து ஒரு பெரியவர் வந்தார்.

''காலங் காத்தாலே என்ன அரட்டை... எல்லாம் ரெடியாயிட்டேளா...பெரியவாளை இப்பப் பார்க்கப் போனுத்தான் சரியா இருக்கும். நாச்சி எனக்கு ஃப்ளாஸ்கில் காப்பி எடுத்துண்டிட்டியா?... அரை மணி நேரத்துக்கு ஒரு வாய் காப்பி குடிச்சாத்தான் எனக்குச் சரிப்படும்.''

அவர்கள் புறப்பட்டு விட்டார்கள். போகிற போக்கில் அந்தப் பெரியவர் ஸேதுவைப் பார்த்தார்:

''ஏண்டா, நீ சாஸ்திரிகள் பிள்ளையில்லையோ... அப்பாவுக்கு இப்ப எப்படி இருக்கு?''

ஸேது நிதானமாக அப்பாவின் உடல் நிலையை எடுத்துக் கூறி உதவிக்காகத்தயங்கி நின்ருன்.


''அப்படியா?'' முகவாயைத் தடவினுர். ''இப்போ நாங்க பெரியவாளைப் பார்க்கப் போயிண்டிருக்கோம்..., நாளைக்கு வாயேன். ஏதாவது ஏற்பாடு பண்ணலாம்.''

வீடு இருக்கும் தெருமுனைக்குள் நுழைந்தான் அவன். வீட்டினின்று பெரிய கூக்குரல்கள் அவனுக்குக் கட்டியம் கூறின. அவன்தான், 'தன்தந்தை நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிருர்' என்று எவ்வளவு தப்புக் கணக்குப் போட்டுவிட்டான்? சிவராம சாஸ்திரிகள் நிமிஷங்களை எட்டிப் பிடிக்க அல்லவா போராடிக் கொண்டிருந்திருக்கிருர்!

ஸேதுவுக்கு இன்னும் வேலை கிடைத்த பாடில்லை. சிவராம சாஸ்திரிகளின் மறைவுக்குப் பின்னர், வீட்டின் அன்றாடக் கச்சேரியை மேடை ஏற்றுவதற்காக, வேருெரு புரோகிதர் ஒருவருக்கு உதவியாக ஸேது சென்று 'ஒன்று ரெண்டு' என்று ஏதோ கொண்டு வந்தான்.

அந்த சாஸ்திரி சொன்னுர்:

''ஸேது, இந்த லோகத்து மனுஷாளுக்கு சினிமா க்யூவில் நிக்கறதுக்கு நேரமிருக்கும்; பாமாயிலுக்காக மணிக் கணக்கா காத்துக் கிடக்க நேரமிருக்கும்; பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காக நிக்க நேரமிருக்கும். ஆனு சாஸ்திரிகள் சொல்ற ரெண்டு மந்திரங்களை நிதானமாக் கேக்கவோ திருப்பிச் சொல்லவோ நேரமிருக்காது... மனுஷனுப் பிறந்திட்டதுக்காக மனுஷன் செய்ய வேண்டிய



அவர்: ''அடா! கட வித்வான் நேத்து வரைக்கும் பானையை அட்டகாசமா மேலே தூக்கிப் போட்டுப் பிடிச்சிகிட்டிருந்தார்.... இன்னைக்கு ரொம்ப அடக்க ஒடுக்கமா வாசிக்கிறாரே!''

இவர்: ''அதுக்கு கடைக்காரர் கொடுத்த 'கியாரண்டி பீரியட்' நேத்தோட முடிஞ்சிடுச்சாம்... அதான்!''

-கி. பூபாலசிங்

சம்பிரதாயங்களை, தார்மீகச்செயல்களை நினைவூட்டவேண்டியது ஒரு வேதியனுடைய கடமை. அவனுடைய தர்மம். அந்த வகையில அவன் இந்த சமூகத்துக்கு தார்மீககாவலன். ஆனு வேதியன்களை இன்னைக்கு எங்கே மதிக்கறு... 'ஏற்பது இகழ்ச்சி','ஐயமிட்டு உண்' என்று ரெண்டு முரண்பாடான கருத்தை அடுத்த அடுத்த வரியில ஔவை சொன்னுளே... அதனுடைய அர்த்தம்தான் என்ன? யாசிக்காமயும், அதே நேரத்திலே தானமும் கெடைச்ச நிலையில அன்னிக்கு புரோகிதர்களோட வாழ்க்கை நடந்தது. இன்னைக்கு மாறிப்போன நெலையிலெ ஒவ்வொரு புரோகிதனும் தன்னுடைய பிள்ளையைத் தன்னுடைய தொழிலுக்குக் கனவிலேயும் கொண்டு வர ஆசைப் படறதில்லே.''

அவர் ஸேதுவிடம் விடை பெற்றுக் கொண்டு விட்டார். ஆனல் அவரின் நீண்ட சம்பாஷணை ஸேதுவின் மனத்தில் ஆழமான பாதிப்பை உண்டாக்கியது. தீர்க்கமாக யோசித்தான். கௌரவமும் வருமானமும் சரியாகக் கிடைக்கவில்லை என்ற காரணத்தினலேயே சமுதாயத்துக்கு இயன்ற அளவுக்கு 'தர்மப் பிரக்ஞை'யை நினைவூட்ட வேண்டியவர்கள் அதனின்றும் ஒதுங்கி விடுவார்களேயானல் இது எந்த தர்ம வரம்புக்குள் அடங்கும்?

ஸேது எதிரே தென்பட்ட ஸலூனுக்குள் நுழைந்தான். கடைக்காரர் கேட்டார்: 'தம்பிக்கு 'ஸ்டெப்பா, சம்மரா, லாங்கா, ஷார்ட்டா?'

''நான் குடுமி வைச்சிக்கப் போறேன்.''

கடைக்காரர் சிரித்தார்.

''அம்மா, அம்மா, ஸேது அண்ணு வந்தாச்சு'' மங்களம் குதித்து ஓடினுள். தாய் ஒரு நீண்ட கவருடன் எதிர்ப்பட்டாள். ஸேதுவின் புதிய கோலத்தைக் கண்டதும் அவள் மிரண்டு விட்டாள்.

''என்னடா இது?''

ஸேது தாயிடமிருந்து நீண்ட கவரைப் பெற்றுக் கொண்டான். பாங்கிலிருந்து அவனுக்கு வேலைக்கான உத்தரவு வந்திருந்தது.

''என்னடா இது கோலம்!'' என்று தாய் மீண்டும் கேட்டாள்.

குறித்த இடைக்காலங்களில் ரொக்கப்பணம் பெறுங்கள். அத்துடன் ஆயுள் பாதுகாப்பையும் அடையுங்கள்.




பணமீட்சி 5 ஆண்டுகளுக்குப் பின்



பணமீட்சி மீண்டும்
10 ஆண்டுகளுக்குப் பின்



பணமீட்சி மீண்டும்
15 ஆண்டுகளுக்குப் பின்



பணமீட்சி மீண்டும்
20 ஆண்டுகளுக்குப் பின்

பண மீட்சிப் பாலிசி

தற்கால வாழ்க்கை முறையில் ஏற்படும் தேவைகளை சமாளிக்க ஒரு லட்சியத் திட்டம்.

இதோ ஒரு இன்ஷ்யூரன்ஸ் திட்டம்—உங்களுக்கு சமகால அளவுகளில் பணத்தைத் திரும்ப அளிக்கிறது மன்றி பாலிசியின் காலத்தில் உங்கள் குடும்பத்திற்கு முழு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பையும் கொடுக்கிறது.

பணமீட்சிப் பாலிசி 12 ஆண்டுகள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் அல்லது 25 ஆண்டுகள் போன்ற கால அளவிற்கு கிடைக்கின்றன. பாலிசிதாரர் தேர்ந்தெடுக்கப்படும் கால அளவைப் பொறுத்து மூன்று அல்லது நான்கு தவணைகளில் முழுப்பணத்தையும் திரும்பப் பெறுகிறார். குறிப்பிட்ட காலங்களில் கிடைக்கும் இப் பண வரவுகள் மக்களின் படிப்பு, திருமணம், வாழ்க்கையைத் துவக்குதல் போன்ற தேவைகளுக்கும், தனக்கென்று ஒரு வீட்டை உரிமையாக்கிக் கொள்ளவும் அல்லது இதர அவசரமான தேவைகளுக்கும் கைகொடுத்துதவுகிறது.

பாலிசியின் காலத்தில் எப்போதாகிலும் இறக்க நேர்ந்தால் முழுக் காப்புத் தொகையும், எத்தனை வருடங்களுக்குப் பிரீமியங்கள் செலுத்தப்பட்டிருக்கின்றனவோ அத்தனை காலத்திற்கான போனசுடன் அளிக்கப்படும். இத்தொகை பாலிசிதாரர் ஏற்கனவே பல தவணைகளில் தொகைகளைத் திரும்பப் பெற்றிருந்த போதிலும் அளிக்கப்படும்.

பொன்னான எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு விவேகத்துடன் செயல்படும் மக்களுக்கு இது ஒரு லட்சியப் பாலிசி.

முழு விவரங்களுக்கு உங்கள் எல்ஐசி முகவரையோ அல்லது அருகாமையிலுள்ள எங்கள் கிளை அலுவலகத்தையோ அணுகுங்கள்.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா.

RADEUS/LIC/AS-39

''அம்மா, நான் இந்த பாங்க் வேலைக்குப் போகப் போறதில்லே'' என்று கூறியவன், கவரை ஜன்னலின் விளிம்பில் வைத்தான்.

''என்னடா சொல்றே?''

''ஆமாம்மா. அப்பா மாதிரி நானும் புரோகிதம் செய்ய முடிவு பண்ணிட்டேன்.''

''உனக்குப் பைத்தியம் கியித்தியம் பிடிச்சிருக்கா என்ன?'' அலறினாள் பங்கஜம்.

''டேய் ஸேது, இந்தக் காலத்துல என் பிள்ளை ஒரு மானேஜர், ஒரு ஆபீசர்னு சொல்லிக்கிறதிலேதாண்டா ஒரு அம்மாவுக்குப் பெருமை இருக்கு... அந்தப் பெருமையில மண்ணைப் போட்டுடாதேடா...'' குரல் கம்மக் கேவினாள், கெஞ்சினாள், வேண்டினாள் பங்கஜம்.

''அம்மா திசை புரியாமப் போற மனுஷாளோட வாழ்வைத் தர்மப் பிரக்ஞை என்கிற கடிவாளத்தாலே கட்டுப்படுத்தறவன்தான் ஒரு வேதியன். நம்ம வேத சாஸ்திரங்கள் மட்டுமில்லேம்மா. பிளாட்டோவும் சாக்ரடீசும் தீட்டின லட்சிய சமுதாயத்திலேயும் தர்மத்தை நிலைநாட்ட வேண்டிய வேதியர்களைப் பத்திச் சொல்லியிருக்கு. அம்மா ஒரு கடமையைச் செய்ய முடிவு பண்ணியிருக்கிற என்னை ஆசீர்வதிம்மா.''

கைகளைக் கூப்பினான். தாயை எதிர்நோக்கினான். ஆனால் பங்கஜமோ சடாரென்று உள்ளே போனாள்.

''நீ பெரியவண்டா... ரொம்பப் பெரியவண்டா... உன்னை நான் எப்படி ஆசீர்வதிக்க முடியும்?'' சலித்துப் பேசினாள்; கணவரின் படத்துக்கு அருகே சென்று தலையில் அடித்துக் கொண்டாள். அழுதாள்.

''பார்த்தேளா உங்க பிள்ளை சொல்றதை! உங்களை மாதிரியே சாஸ்திரிகள் வேலை பார்க்கப் போறானாம். இதுக்காகவா வாயையும் வயித்தையும் கட்டி பி.காம் படிக்க வச்சோம்.. நீங்கதான் அஞ்சு பத்துக்கு எல்லாரண்டையும் கையேந்தி நின்னேள்... உங்க பிள்ளையாவது கைநிறையச் சம்பாதிப்பான்னு நெனைச்சேன்.... நீங்க போற இடத்துக்கெல்லாம் அவனைக் கூட அழைச்சிண்டு போய்க் கெடுத்துட்டேள்....''

தொடர்ந்து ஏதேதோ சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஸேது கைகளைக் கும்பிட்டவாறு அசையாது தாயின் ஆசீர்வாதத்துக்காகக் காத்துக் கொண்டிருக்கிறான்.

''ஸேது... சாப்பிட வாடா!'' தாயின் வாஞ்சையுடன் பங்கஜம் அழைக்கிறாள்.

''அம்மா எனக்கு உன் ஆசீர்வாதம் வேணும்.''

''முதல்ல சாப்பிட வாடா.''

''முதல்ல ஆசீர்வாதம்.''

''எத்தனை நேரம்டா இப்படி நிப்பே?''

''நீ ஆசீர்வாதம் பண்ற வரைக்கும்.''

பங்கஜத்தின் நெற்றிப் பொட்டைச் சென்று அவன் குரல் தாக்கிற்று. அழகும் அறிவும், ஒளியும் பொருந்திய பதினாறு வயதுப் பாலகனை - ஆதி சங்கரரை - இந்த உலகத்துக்குக்கொடுத்துவிட்ட தாயின் மனச் சுமையைவிடவா தன்னுடைய நிலை?

இந்த எண்ணம் ஏற்பட்ட மாத்திரத்தில் பங்கஜம் கூறினாள்: ''ஸேது! உன்னை இப்பவே ஆசீர்வாதம் பண்ணிட்டேண்டா.''

ஸேது நமஸ்கரித்தான்.

சஷ்மே பத்தூர் (இந்தி)

● அப்படியென்றால் திருஷ்டிப் பரிகாரம் என்று அர்த்தமாம். படத்தில் திருஷ்டி பரிகாரம் என்று சொல்லும்படி... ஏதுமில்லை!

பொழுது போக்குக்காகச் சோப்புத் தூள் விற்கவரும் பணக்காரப்பெண்ணின் காதலைப் பெறுகிறான் கதாநாயகன். காதல் கனிகிறது. அவன் நண்பர்கள் இருவர், அவன் வீட்டுக்குப் போய் அவமானப்பட்டுத் திரும்பிய கதையை மறைத்து, 'அவளுக்கு நம்மைப் போல் காதலர்கள் எத்தனை பேரோ? எதற்கும் ஜாக்கிரதையாக இரு!' என்று சொல்லப் போக, வருகிறதுடாப்பா கோபம் கதாநாயகனுக்கு! காதல் முறிகிற மாதிரி முற்றுகிறபோது நண்பர்கள் உண்மையை உடைக்க, காதலர்கள் ஒன்றுசேரும்



ரொம்ப சிக்கல் இல்லாத சிம்பிள் கதை! ஆனால் வசன – நகைச்சுவை, சம்பவ– நகைச்சுவையால் உயிர்ப்புப் பெறும் இப்படத்தின் டைரக்டர் – ஒரு பெண்மணி. (பெண்களுக்கு நகைச்சுவை உணர்ச்சிகுறைவு என்று யார் சொன்னது?)

ஃபரூக் ஷேய்க் கதாநாயகன். தீப்தி நாவல் கதாநாயகி. வெற்றிலை பாக்கு–சிகரெட் கடைக்காரர் ஸயீத் ஜெஃப்ரி சில ஆங்கிலப் படங்களிலும் நடித்தவராம். கதாநாயகனின் ரூம்-மேட்களாக வந்து அட்டகாசம் செய்யும் இருவரும் சுஜாதாவின் 'வஸந்தை' நினைவுபடுத்துகிறார்கள். ஆமாம், பெண்கள் என்றால் போதும் இவர்களுக்கு!

படம் முழுக்க இழையோடும் நயமான நகைச்சுவை. புத்தம் புதிய இசை. ரம்மியமான வண்ண ஃப்ரேம்களில் காமிரா கவிதை பாடுகிறது. வழக்கமான மசாலா படங்களைக் கேலி செய்கிற வகையில் 'பார்க்கில்' ஒரு டூயட். கடைசியில் அதே கிண்டல் பாணியில் ஒரு கார் சேஸ், சண்டை, மோதல் – போலீஸ் ஊதல்!

தமிழில் யாராவது இது மாதிரி சுகமான நகைச்சுவைப் படம் எடுக்க மாட்டார்களா என்று மனசு ஏங்கிற்று. படம் முடிந்தபோது, பார்வையாளர்களில், இந்தி மெலோ ட்ராமா படங்களையே தமிழில் எடுத்து வரும் ஒரு தயாரிப்பாளரைப் பார்த்ததும் பக்கென்றது. இவர் தமிழில் இதை எடுக்கப் போகிறாரா, கெடுக்கப் போகிறாரா?

—சாருகேசி

(ஊ) இந்த விளம்பரத் தேதிக்கு முற்பட்ட 3 நிதி ஆண்டுகளில் கம்பெனியின் லாபங்களும் (வரி ஒதுக்கீட்டுக்கு முன்னும் பின்னும்), அந்த ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட டிவிடெண்டுகளும்:

முடிவுற்ற ஆண்டு	லாபம் (வரி விதிப்புக்கு முன்)	லாபம் (வரி விதிப்புக்குப் பின்)	வழங்கப்பட்ட டிவிடெண்ட்
30.9.80	ரூ. 18,188	ரூ. 5,188	—
30.9.81	ரூ. 92,810	ரூ. 49,175	9%

(எ) தணிக்கை செய்யப்பட்ட கடைசி இரு பாலன்ஸ் ஷீட்டுகளில் கண்டுள்ளபடி கம்பெனியின் சுருக்கமான நிதி நிலைமை:

30.9.80 தேதியில் ரூ. லட்சத்தில்	பொறுப்புகள்	30.9.81 தேதியில் ரூ. லட்சத்தில்	30.9.80 தேதியில் ரூ. லட்சத்தில்	ஆஸ்திகள்	30.9.81 தேதியில் ரூ. லட்சத்தில்
5.00	பங்கு மூலதனம்	5.00	0.25	நிலையான ஆஸ்திகள்	0.29
0.05	ரிசர்வுகளும், உபரியும்.	0.09	—	முதலீடுகள்	—
1.58	ஈடுபெற்ற கடன்கள்	2.76	16.13	நடப்பு ஆஸ்திகள், கடன்கள் மற்றும் அட்வான்சுகள்	36.88
6.08	ஈடுபெறாத கடன்கள்	20.69	0.10	இதர செலவினங்கள்	0.09
3.77	நடப்பு பொறுப்புகளும், ஒதுக்கீடுகளும்.	8.72			
16.48		37.26	16.48		37.26

குறிப்புகள்:

(1) ஆணைகளுக்குட்பட்டு டெபாசிட்டுகள் மூலம் கம்பெனி திரட்டக்கூடிய தொகை— ரூ. 50 லட்சம்.

(2) 28-10-81 அன்று இருப்பில் இருந்த டெபாசிட்டுகளின் கூட்டுத் தொகை— ரூ. 21,16,000-00.

(3) கம்பெனியில் தவணை கடந்த டெபாசிட் எதுவும் இல்லை.

(4) இதன் மூலம் உறுதியளிப்பது யாதெனில்,

(i) ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் ஆணைகளில் கடைப்பிடிக்க வேண்டிய பொருத்தமான ஷரத்துகளை கம்பெனி நிறைவேற்றியுள்ளது.

(ii) மேற்படி ஆணைகளை கம்பெனி நிறைவேற்றியிருப்பதால், டெபாசிட்டுகளைத் திருப்பித்தருவதற்கு ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா உத்தரவாதம் அளிப்பதாகக் கொள்ளலாகாது.

(iii) கம்பெனி ஏற்றுக்கொண்ட டெபாசிட்டுகள் ஈடு பெறாதவை. அவை ஏனைய ஈடு பெறாத கடன்களுக்குச் சமமாகக் கருதப்படும்.

இவ்விளம்பர வாசகம் டைரக்டர்கள் குழுவினால் 28.10.81 அன்று தீர்மானமாக அங்கீகரிக்கப்பட்டு அவர்களது அனுமதியின் பேரில் அவர்கள் பெயரால் வெளியிடப் படுகிறது. இவ்விளம்பரத்தின் நகல் பெரும்பான்மையான டைரக்டர்களால் கையொப்பமிடப் பட்டு பெங்களூரில் உள்ள ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியாவின் பாங்குகள் அல்லாத கம்பெனிகள் துறைக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

டெபாசிட் விண்ணப்ப படிவங்களை கீழ்க்கண்ட முகவரிகளிலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

(1) மெஸர்ஸ் பாடர்ஸன் & கோ.
"வான்கார்ட் ஹவுஸ்"
48, செகண்ட் லைன் பீச், சென்னை 600 001.

(2) வி. எஸ். கிருஷ்ணசாமி & கோ.
45, அரண்மனைக்கார தெரு, சென்னை 600 001.

(3) மெஸர்ஸ் சுப்ரமணியம் பைனான்ஸ் & கோ.
49, செகண்ட் லைன் பீச், சென்னை 600 001.

(4) மெஸர்ஸ் பாலாஜி பைனான்ஸ்
இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கன்ஸல்டன்ஸி,
நிதி ஆலோசகர்கள் மற்றும் ஷேர் புரோக்கர்கள்,
31, கணபதி நகர், மாயூரம் 609 002

(5) மெஸர்ஸ் இண்டெக்ரேட்டட் எண்டர்பிரைஸஸ்
36, பச்சையப்ப முதலி தெரு, கும்பகோணம் 612 001.
ரூம் நெ. 27, "பம்பாய் மியூச்சுவல் அனெக்ஸ்"
165, லிங்கி செட்டி தெரு, சென்னை 600 001.

சென்னை
28.10.81

போர்டின் உத்தரவுப்படி,
ஸ்ரீராம் டிரான்ஸ்போர்ட் பைனான்ஸ்
கம்பெனி லிமிடெட்டுக்காக,
ஜி. ராஜரெத்தினம்
நிர்வாக டைரக்டர்

நீட்டோமாலை தாமரைப்பூ...

லைஸ்டன் ஜி. கிருபாகரன்

கேட்டில் ''கோன் ஹை?'' என்றான் கூர்க்கா.

திரும்பிப் பார்த்து விட்டு ''ஒருத்தரு மில்லே'' என்று சொன்ன கைலாசம் கத வருகே சென்று நின்று, ''திற'' என்றான்.

''தும் கோன் ஹை?'' – கூர்க்கா விடுவதா யில்லை.

கைலாசம் கையை ஓங்கினான். ''பல்லே உடைப்பேன். மரியாதை தெரிஞ்சுக்கோ. ''ஆப் கோன் ஹை'ன்னு கேட்கணும்... திறடா!''

'ஙண ஙொண'வென்று ஏதோ உளறிய காவலன் கத்தி இருந்த உறையைத் தட்டிக் காட்ட, 'ஈசசசய்யா' என்று இவன் கராத்தே பாணியில் கையைக் காலே உதற, கார் வந்து நிற்கவில்லை யென்றால் கைகலப்பே நேர்ந்திருக்கும்.

''என்ன நடக்குது இங்கே?'' – காருக் குள்ளிருந்து அந்தப் பெண்மணி கேட்டாள். முகத்தில் மூன்று பத்து தெரிந்தது! மேக்-அப்பைக் கலைத்தால் இன்னும் ஒரு பத்துக் கூடலாம்.

கைலாசம் ஸ்டீயரிங் பக்கமாக வந்தான். குனிந்தான். 'டி' கொடுப்பான் போலிருந் தது. தற்காப்புக்காகத் தலையை உள்ளே இழுத்தவளை எடை போட்டான். ஒரே செயற்கை வாசனை. எல்லா இடத்திலும். ''நீங்களும் அலையன்ஸ் தேடித்தான் வந் திங்களா ஐ ஆம் எ பாச்சலர்'' என்றான்.

''வாட் ஆர் யூ டாக்கிங் அபௌட்?''

''அபௌட் மாரேஜ்... திருமணம்... கல் யாணம். ஐ ஆம் கைலாசம்'' – படபடபட.

''வெய்ட்...வெய்ட்... கூர்க்கா கிட்டச் சண்டைபோட்டா கல்யாணம்நடந்திடுமா?''

''மரியாதை தெரியலே அவனுக்கு 'தும்' ங்கறான். 'நீயாம்.''

''மேனர் தெரியுதா உங்களுக்கு என் முகத்திலேயே மூச்சு விட்டுக்கிட்டு...''

''சாரி'' என்றவன் தலையைப் பின்னுக் கிழுக்க.... மண்டையில் 'ணங்'.

''அதான் பனிஷ்மெண்ட்!..நீங்க யாரைப் பார்க்கணும்?''

''இங்கே ஜோடி சேர்த்து விடறீங்க ளாமே?''

''அசிங்கமாப் பேசாதீங்க. லீகலா, சட் டப் பிரகாரம், அவங்க அவங்க விருப்பப் படி ஜோடியைத் தேர்ந்தெடுத்துத் தர்றோம். டு ப்ரொஃபிட் ஆர் நாட் டு ப்ரொஃபிட் இஸ் தேர் ப்ராப்ளம்.''

''தர்றேமின்னு... நீங்க....''என்று இழுத் தான் கைலாசம்.

''என்னைத்தான் பார்க்க வந்திருக்கீங் கன்னு நினைக்கிறேன். நான்தான் அந்த சர்வீஸ் சென்டரை நடத்தறேன்.''

''அப்போ உள்ளே போகலாமா?'' அவள் பதிலை எதிர்பார்க்காமல் ''மிஸ்டர் கூர்க்கா வார்! கதவைத் திறங்க சார்...'' என்று மரி யாதையாகக் கூறிவிட்டு, மேனர்ஸ் கொப் பளிக்கக் காரின் பின் கதவைத் திறந்து. அமர்ந்து ஓசைப்படாமல் கதவைச் சாத்தினான்.

'என்ன மாதிரி ஆசாமியாக இருப்பான் இவன் என்று யோசித்துக் கொண்டே காரை நகர்த்தினாள் அவள். திறந்திருந்த கேட் டைக் கடக்கும்போது 'ரியர் வியூ மிர்ரரில்', 'வந்து பல்லே உடைக்கிறேன்' என்று கைலாசம் கூர்க்காவைப் பார்த்துச் சைகை காட்டியது தெரிந்தது.

டவுன் ப்ளாட் நடுவில் பங்களா டைப் வீடு. நாகரிக வட்டம். தூர தூர கட்டிடங் களை அமைத்திருந்தார்கள்.

போர்ட்டிகோவைக் கடந்து மாடிப் படி ஏறி, அந்த அறைக்குள் நுழைந்து, 'மெத்-மெத்'தென்ற குஷனில் கொஞ்சமாக அமிழ்ந்தவரை வழியில் ஒருவருமே எதிர்ப் படவில்லை. ''ஸ்டாஃப்புக்கு லீவு விட்டுட்டீங் களா?'' என்று கேட்டான் கைலாசம்.

''இந்த சர்வீஸ் சென்டரிலே நான் ஒருத்தி தான் ஆல்-இன்-ஆல். சும்மா பொழுது போக்காக நடத்தறேன். சார்ஜும் அதிகமா வாங்கறதில்லே.நாம சேர்த்துவைச்ச ஜோடி காலம் பூராச் சந்தோஷமா வாழ்ந்திருக் காங்கன்னு கேள்விப்படறபோது ஏற்படற மகிழ்ச்சியேஅலாதிதான். அதுதான் ஃபீஸ்!''

''அப்போ எனக்கு நீங்க உதவி செய்ய முடியாதா?''

'என்ன பேசுகிறான் இவன்' என்று அவ ளுக்குப்புரியவில்லை என்பதை சற்றே உயர்ந்த புருவங்கள் காட்டிக் கொடுக்க, ''மேடம்... நான் கல்யாணம் பண்ணிக்கணும். ஒரு டெம்பரரி அரேன்ஜ்மெண்ட்... தற்காலிக ஏற்பாடு... அவ்வளவுதான். சார்ஜைப் பத்திக் கவலே வேண்டாம். முடியுமா?'' என்று தொடர்ந்தபோது அவளது வியப்பு அதிகரித்தது.

''அட்வான்ஸாக இருக்கட்டுமேன்னு வீட் டிலிருந்து கிளப்பிக்கிட்டு வந்தேன்.'' கைலா



சம் தூக்கிக் காட்டினான். மஞ்சள் நிறத்தில் சொக்கத் தங்க நெக்லேஸ். ''விக்கிறதுக்குப் போனா ஆயிரம் கேள்வி கேட்கிறான். அதனாலேயே அடிக்கடி எடுக்கிறதில்லே''... என்று சொல்லிவிட்டு அடுத்த கையில் நாலு அங்குல கனத்துக்கு ஒரு கட்டு நோட்டுக் கட்டைப் பிடித்து உயர்த்தினான். ''ரெண்டு நா செலவுக்கு அளவா எடுத்தது'' – அத்தனையும் நூறுகள்.

கைலாசம் சொல்லச் சொல்ல அவளுக்குச் சுற்ற ஆரம்பித்த தலை கொஞ்சம் கொஞ்சமாக ஒரிஜினல் பொஸிஷனுக்கு வந்தது. அவன் சொல்லிக் கொண்டே போனான். அவளுடைய பார்வை அட்வான்ஸ் மேலேயே இருந்தது. படிப்படியாக அவளுள் ஒரு திட்டம் உருவாகிக் கொண்டு வந்தது.

''என் தகப்பனார் ரொம்ப மோசம். நான் அரை புட்டி பிராந்திதான் சாப்பிடுவேன், ஒரு வேளைக்கு. அவருக்கு முழு புட்டி சாராயம்வேணும். எனக்குப் பெண்கள்னாலே அலர்ஜி. அவர் அம்மாவை அடிச்சே கொன்னுட்டார். அவருக்கும் அல்சர் வந்து காலமாயிட்டார்.....

''போகும்போது புள்ளையைப் பத்தி நினைச்சானா அந்த மனுஷன்? நினைச்சிருந்தா அப்பவே பெரியப்பா கிட்டருந்து – அதான் அவரோட அண்ணன் எங்க தாத்தா சொத்தைப் பாகம் போட்டுப் பிரிச்சிருக்க மாட்டார்? இப்போ, நான் அம்போ...

''என் பெரியப்பா இருக்காரே: அது ஒரு டைப். நான் கெட்டவனாம். அப்பாவோட அச்சாம். திருந்திச் சுயமா வேலை செஞ்சு சம்பாதிச்சு, ஒரு கல்யாணத்தைப் பண்ணிக்கிட்டு அவர் கூடவே இருந்து ரெண்டு மூணு மாசம் ஒழுங்கா வாழ்ந்து காட்டினாத்தான் எங்கப்பா சொத்தை எனக்கு டிரான்ஸ்ஃபர் பண்ணுவாராம். அதுவரைக்கும் மாத அலவன்ஸ் ஐநூறுதானாம்.... இது நியாயமா... நீங்களே சொல்லுங்கோ...

''இல்லேன்னா அது மண்டையைப் போடணும். அப்படித்தான் உயில்லே இருக்குதாம். வக்கீல் சொன்னார்....



''இயற்கையான மரணமுன்னா காத்திருக்க என்னாலாகாது மேடம். பண முடை. கல்யாணம் பண்ணிக்கிட்டு அந்தக் கிழவன் முன்னாலே ஒரு நாடகம் ஆடணும். அதான் டெம்பரரி பேஸிஸ்லே அலையன்ஸ் அரேஞ்ஜ் பண்ண முடியுமான்னு கேட்டேன்.

''அப்பா சொத்து அஞ்சு பத்து லட்சத்துக்கு மேலே தேறும்.'' என்று கைலாசம் சொன்னபோது அவளுக்குப் புரை ஏறியது.

அவள் எழுந்து வந்து அவனருகில் உரசிக் கொண்டு நின்றாள். ''உங்க சொந்த ஊர் எதுன்னு சொல்லலியே...'' என்றாள்.

''ஓ....சந்தேகம் வந்திடுச்சா?... நியாயம்தான்... நாங்க மதுரை.... பம்பாயிலே செட்டில் ஆகி ரெண்டு தலைமுறை ஆகுது படிச்சதெல்லாம் மெட்ராஸ்... ஹியர்.... இந்தக் கார்டிலே அட்ரஸூம் ஃபோன் நம்பரும் இருக்கு... டைரக்ட் கால்... ரிங் தெம் அப்...''

சுழற்றினான். 'கொ,' என்றது – சொன்னான். ''ட்ரை அகெய்ன்''–மீண்டும் 'கொ.'' ''கொஞ்ச நேரம் விட்டுப் போடுங்கோ.''

ஃபோனை அவள் கீழே வைத்ததும் கைலாசம் கிசுகிசுத்தான். ''அவரோட கூட இருக்கிற மூணு மாசத்திலே அவர் கதையையும் சந்தேகத்துக்கு இடமில்லாம முடிச்சுட்டா அவர் பங்கும் எனக்குத்தான் வரும். சந்ததி வேறே கிடையாது. தர்மசத்திரத்துக்கு எழுதி வைக்கப் போறாராம் கிழவர். அதுக்கு முன்னாலே முடியறதா இருந்தா... வர்றவளுக்கு ரெண்டு மூணு லட்சம் தரத் தயார். முடியுமா உங்களாலே?''

மெல்லப் புன்னகைத்தாள் அவள். சொக்கத் தங்கமும் கட்டு நோட்டும் சுர்த்தன.

''முடியும்னுதான் நினைக்கிறேன்'' என்றாள்.

''ரெண்டுமா?''

''நான் பார்மஸி படிச்சிருக்கேன்.''

''அப்படீன்னா?''

''விஷம் குடிச்சதினாலே ஏற்பட்ட மரணமுன்னு தெரிய வராம, கொஞ்சம்கொஞ்சமா ரெண்டு மூணு மாசத்திலே கொல்லக் கூடிய மருந்து வகைகள் எனக்குத் தெரியும்.''

''அத்தெரிப் பாச்சா!'' என்று துள்ளிக் குதித்தான் கைலாசம். ''நீங்கதான் – சட், இனிமே மரியாதை என்ன வேண்டிக் கிடக்குது? நீதான் இன்னிலேருந்து என் பொண்டாட்டி! தாலி கட்டட்டுமா?''

சொல்லாமல் விட்டாள்: ''கட்டு தம்பி! அப்புறம் சட்டரீதியா நான்தான் உன்வாரிசு. உன் பெரியப்பாவுக்குத் தர்ற மருந்தை உனக்கும் ஒரு பத்து நாள் கழிச்சுத் தர்றேன். ஒண்ணுக்குப் பின்னாலே ஒண்ணு. அப்புறம் ரெண்டு பேருதும் என்னோடது.''

அவள் மோகனப் புன்னகை உதிர்த்தாள்.

''பெரியப்பா முடிவுப்படி நான் கல்யாணம் பண்ணிக்கிட்டா மாத்திரம் போதாது மேடம். வேலை செய்யணும். சுயமாச் சம்பாதிக்கணும்.''

''பிரச்னை இல்லை'' – சட்டென்று பதில் சொன்னாள்.

''எப்படி?''

''இந்த சர்வீஸ் சென்ட்டரிலே இனிமே நீங்கதான் மானேஜர்!''

''ஜலவங்கடி இரிஇரி!''

—மகிழ்ந்தவன் மீண்டும் துள்ளிக் குதிக்காமல், நிதானித்து, ''என்ன வேலேன்னு பெரியப்பா கேட்டா 'சைதாப்பேட்டை வடகறி' மாதிரி முழிக்கணுமா?'' என்றான்.

சற்று நேரம் அவனையேகூர்ந்துநோக்கிஞள் அவள். சிந்தனை ரேகைகள் படர ஆரம்பித்தன முகத்தில். லட்சக் கணக்காய் வருவதால் ரிஸ்க் எடுப்பதில் தவறில்லே. டிராயரைத் திறந்து அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த ஃபைல்களை எடுத்து மேஜை மீது வைத்தாள்.

கோப்புகளைப் புரட்டியவுடன் ''ஹை! எல்லாம் பொம்பளைங்க ஃபைல். ஃபோட்டோவோடே... அளவு இளவு எல்லாம் எடுத்து வச்சிருக்கீங்களே... நீங்களே எடுத்ததா? கட்மஸ்தா, கிராமத்துப் பெண்களா இருக்காங்களே!... ஆமா... இதெல்லாம் முடிஞ்சு போன அலையன்ஸ் ஃபைலா? எதிலேயும் கட்டிக்கிட்டுப் போன ஆம்பளைங்க விவரமே இல்லேயே ஏன்?'' என்று கேட்டுத் தலை நிமிர்ந்த கைலாசம் தன்னையே கவனித்துக் கொண்டிருந்தவளின் கண்களை நேராகச் சந்தித்து. ''ஓ... எஸ்... ஆமாமாம். புருஷன் பம்பாய் வரைக்கும்தானே... பொண்டாட்டி மட்டும்தானே அரேபியா!'' என்றான்.

இடிவிழுந்தாற்போல் அதிர்ந்து போனவள் எழுந்து நின்றாள். எதிர்பாராத அதிர்ச்சியால் நிலைகுலைந்து போனவள், ''வாட்...வாட் ஆர் யூ டாக்கிங் அபௌட்?'' என்றாள்.

''அபௌட் மேரேஜ்... திருமணம்... கல்யாணம்... ஃப்ராட்... ஐக்ய அரபு எமிரேட்ஸ் ஷேக்ஸ்... திருட்டுத்தனம்!''

'யாரிவன்? தெரிந்துதான் பேசுகிறான்... இருந்தாலும் கவலைப்பட என்ன இருக்கிறது?' சுதாரித்துக் கொண்டவள் சிரித்தாள். ''எஸ் ஆமாம்... என்ன செய்வதா உத்தேசம்? ஹௌ ஆர் யூ கோயிங் டு ப்ரூவ் இட் எனக்குச் சம்பந்தம் இருக்கிறதா எப்படி நிரூபிக்கப் போறே?''

கைலாசம் பதிலுக்குச் சிரித்த வண்ணம், இடுப்பு பெல்ட்டைத் தளர்த்தி அந்தக் கருவியை எடுத்துக் ஒளிக்கிறான். சத்தமே இல்லாமல் டேப் நின்றது. இன்றொன்று ஒளிக்கில் பின்வாங்கியது. மற்றொன்றில் பேசியது.

அவள் முகம் வெளுத்தது.

அவன் தொடர்ந்தான்: ''உன் கேரக்டரைப் பற்றிய நீளிஸ் இதிலே அடக்கம். பெண்ணே! கொலைக்கும் அஞ்சாதவள் நீ. அழகான ஏழைப் பெண்களைத் தேடிப்பிடிச்சு பெத்தவங்களுக்குக் கல்யாணப் போர்வையிலே ஆசை காட்டி, நாம்கேவாஸ்தே கல்யாணத்தைச் செய்து வச்சிட்டு, கொஞ்ச நாளைக்கப்புறம் பம்பாய் பார்ட்டிகிட்டே சவரன்லே கமிஷன் வாங்கிக்கிட்டு, ஏற்றுமதி வியாபாரம் செய்யறே: இல்லே அக்கா? ஒத்துக்கிட்டிருக்கே... நட.''

பற்களைக் கடித்தாள். ''யூ....யூ.....'' என்றாள். ''டாமிட்! ''கெட் அவுட்'' என்றாள். அட்வான்ஸை வீசி எறிந்தாள்.

பணத்தைப் பிடித்துக்கொண்ட கைலாசம் சிரித்துக்கொண்டே ''தேங்க்யூ'' என்று சிரம் தாழ்த்தினான். ''யூர் கமிங் அவுட் வித் மி!'' என்றான்.

''போடா வெளியே!''



இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது இந்து மகா சமுத்திரத்தில் நேச நாடுகளின் பல கப்பல்கள் ஜெர்மனியரால் தாக்கி அழிக்கப்பட்டு வந்தன. இவ்விதம் தாக்கி அழிக்கும் கப்பல்களைக் கடல் ஓநாய்கள் என்று செல்லப் பெயரிட்டுக் குறிப்பிட்டு வந்தனர் ஜெர்மானியர்.

நேச நாடுகளைச் சேர்ந்த கப்பல்களின்நடமாட்டம் பற்றிய தகவல்கள் ஜெர்மனிக்கு எப்படிக் கிடைக்கின்றன என்று ஆராய்ந்த போது நடுநிலை நாடான போர்ச்சுகலின் இந்தியக் காலனி கோவாவில் ஒரு ஜெர்மானியக் கப்பல் தங்கி இருந்து நேச நாட்டுக் கப்பல்களின் நடமாட்டங்களை வேவு பார்த்துக் கண்டறிந்து ரேடியோ தொடர்பு மூலம் ஜெர்மானியக் கப்பல்களுக்கு அறிவித்து வருவதாகத் தெரிய வருகிறது. கோவாவில் இருந்தபடி வேவு பார்க்கும் இந்த ஜெர்மானியக் கப்பலையும் அதன் துணைக் கப்பல்களையும் ஒழிக்கப் புறப்படுகிறது 18 பேர் அடங்கிய ஒரு சிறு படை. இந்தப் படையினரின் சாகஸமும் இறுதி வெற்றியும் தான் SEA WOLVES என்ற பெயரில் திரைப் படமாகியுள்ளது.

இந்தியச் சூழ்நிலையில் எடுக்கப்பட்ட அபாரமான சாகசங்கள் நிரம்பிய படம். —த.மு.ரா.

''பார்த்தீங்களா... எனக்கு மரியாதை தான் முக்கியம். அப்புறம் கூர்க்காவை என்ன செய்யப் போறேங்கிறதை ஒத்திகை மாதிரி இங்கேயே காட்ட வேண்டி வரும்!'' பாக்கெட்டிலிருந்து அடையாள அட்டையை எடுத்து வீசினான்: ''லுக் அட் இட்.''

அதில் அவன் முகம் இருந்தது. பாதிக்குக் கீழே ஒரு மூன்று தலைச்சிங்கம் பின்புறமிருந்து குத்தப்பட்டுத் துருத்திக் கொண்டிருந்தது. பச்சையும் சிவப்புமாக யார் யாரோ கையெழுத்திட்டிருந்தார்கள். பார்த்தவன் கைலாசத்தை ஏறிட்டு நோக்கினான். முகத்தில் அச்சம் தெரிந்தது.

பிரிட்டனில் 'லேடிசாட்டர்லியின் காதலன்' என்ற புத்தகத்திற்குப் பிறகு அதிகம் விற்பனையாகும் புத்தகம் 'க்யூப்' என்னும் புதிர்விளையாட்டைப் பற்றியது. 2,50,000 பிரதிகள் விற்ற இப்புத்தகத்தை எழுதியவர் யார் தெரியுமா? பதின்மூன்றே வயதான ஒரு லண்டன் பள்ளி மாணவன்தான்!

–எல். ரவிசங்கர்



''ஆர். ஏ. டபிள்யூ... சென்ட்ரல் கவர்ன்மென்ட் விசேஷ ரகசியப் புலனாய்வுப் போலீஸ் துறை. எமர்ஜன்ஸி பீரியட்லை எங்களைப் பத்தி என்னென்னமோ எழுதினாங்களே படிச்சதில்லே? ஒப்புதல் கடிதம் எழுதிக் கையெழுத்துப் போட வைக்கிறது ரொம்ப சுலபம்.... சைனீஸ் மெதட் சொல்லவா?...''

வெளிறிப் போனவன் அரை மயக்கத்தில் சாய்ந்தான்.

கைலாசம் கைத்தாங்கலாக நாற்காலியில் அமர வைத்தான்.

தொடர்ந்தான்: ''டேக் இட் ஈஸி! நான் அப்படிச் செய்ய நினைக்கலே... எனக்கு இரக்க குணம் ஜாஸ்தி. ஆர் ஏ. டபிள்யூ பிடிக்கலே. அட்வான்ஸ் சமாசாரம் போலி.. அமைதியா செட்டில் ஆக விரும்பறேன், அக்கா!... உன்னை விட்டுடறேன்... நீ தொடர்ந்து சம்பாதிக்கலாம்.... தங்கத்தை எங்கே வச்சிருக்கே?.... இருநூறு சவரன் தேறுது?...''

பம்பாய் பார்ட்டிக்குச் சந்தேகம். 'ராம் சிங்கின் அறையில் க்ரேடிலில் உறங்காமல் டெலிபோன் ஏன் தொங்கிக் கொண்டிருக்கிறது?'... வெளியே பூட்டு... இருட்டுச் சாவி திறக்க உதவியது... அலசினார்கள். தமிழ்நாடு காண்டாக்ட் விலாசம் சங்கேத மொழியில் கிடைத்தது. இவனுக்கு அது எப்படித் தெரிந்தது? ராம்சிங்கின் ஜூரிஸ்டிக்ஷன் உத்திரப் பிரதேசம்தானே... எங்கே போய்த் தொலைந்தான் அவன்...

விஷ்வநாத் alias ஜேக்கப் alias கரீம்கான் alias ராம் சிங் alias கைலாசம்!... சபல புத்திக்காரனுச்சே ஐயா!... Something is wrong somewhere... தமிழ்நாடு செட்-அப்பை முழுமையாக அழித்துவிட வேண்டும்.... இல்லையென்றால் ஆபத்து...

கேட்டருகே கறுப்பு அம்பாஸிடர் நின்றது. வடக்கத்தி ஆள் ஒருத்தன் இறங்கி வந்தான். போர்ட்டிகோவைத் திரும்பிப் பார்த்தான் கூர்க்கா. இன்னும் அவர்கள் வெளியில் வரவில்லை. 'அந்த ஆள்' நினைவுக்கு வந்தான். பற்களைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு ''ஆப் கோன் ஹை ஜீ?'' என்றான்.

கையில் மூன்று பிணங்கள், கூர்க்கா உட்பட... சைலன்ஸர் வேலை. பொய்யான நம்பர் பிளேட்டில் ஒரு இருட்டு அம்பாஸிடர். போலீஸ் சுற்றிச் சுற்றி வந்தார்கள்....

கல்லில் மலர்ந்த காவியம்: 8

சிதம்பரம்

கலைக்காகவே அமைந்தது தில்லைச் சிற்றம்பலம்! அங்குள்ள நடராஜ மூர்த்தி மட்டுமல்ல, எல்லாப் படைப்புகளுமே அற்புதமான கலைச் செல்வங்கள்! நாட்டியச் சிற்பங்கள் மட்டுமா? தெய்வப் படிமங்களும் நம் கண்ணையும் கருத்தையும் கவர்வன. சந்திர சேகரின் சாந்தம்; கஜசம்ஹார மூர்த்தியின் வனிதம்; கங்கா விசர்ஜன மூர்த்தியின் நளினம்; பிக்ஷாடன மூர்த்தியின் காம்பீர்யம் எல்லாம் நம்மை வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்துபவை. கலையின் பண்பே அதுதானே!

கலையில் பலவித நுணுக்கங்கள் உண்டு. கூர்ந்து நோக்கினால்தான் அவை நமக்கு புலப்படும். இந்த மூர்த்திகளின் வலக் காலில் காணப் படுகிறதே அதைத்தான் வீரக்கழல் என்போம். சிறு மணிபோன்ற அது ஆண்மைக்கு அறிகுறியாக வலக்காலில் அணியப் படுவதாகும்.





[அந்தக் காலத்தில் படங்களில் வந்த நடனக் காட்சிகளையும், இந்தக் காலத்துக் காட்சிகளையும் பற்றிக் கூறுகிறார், பலபடங்களுக்கு நடன ஆசிரியராகப் பணியாற்றியவரும், பத்மஸ்ரீ வழுவூர் ராமையா பிள்ளையின் மகனுமான, 'கலைமாமணி' வழுவூர் ஆர். சாம்ராஜ்]

"கீதம்—வாத்யம் — நிருத்யம்" ஆகிய மூன்றும் சம அளவில் சேர்ந்ததுதான் ஆடற்கலை. இப்பொழுது வரும் படங்களில் கீதத்தைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவ்வளவு விரசமாக இருக்கிறது. வாத்யம் என்கிற இசை சில படங்களில் பரவாயில்லை. ஆனால், இந்த நிருத்யம் என்ற நாட்டியம் மட்டும், இப்பொழுது வரும் எந்தப் படங்களிலும் முறையாக இல்லை.

அந்தக் காலத்தில் எல்லாம், நடனங்களுக்காகவே பல படங்கள் ஓடியிருக்கின்றன. ஒரு படம் ஓடாது என்று தயாரிப்பாளர் நினைப்பாரேயானால், சில நடனக் காட்சிகளை எடுத்து அதில் சேர்த்து விடுவார் என்று என் தந்தை வழுவூர் ராமையா பிள்ளை அவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அந்தக் காலத்தில் விஷயம் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், எல்லோருமே படங்களில் வரும் காட்சிகளை ரசித்துப் பார்ப்பார்கள். நாம் இருவர், வேதாளஉலகம், கொஞ்சும் சலங்கை இரும்புத் திரை, மலைக்கள்ளன் போன்ற படங்களில் வரும் நடனக் காட்சிகள் இன்றும் நினைத்துப் பேசும்படி இருக்கின்றன. அந்தக் காலத்தில் ஒரு நடனக் காட்சியைப் படமாக்குவதற்கு முன்னால், நடன ஆசிரியர், பாடலாசிரியர் இசையமைப்பாளர் ஆகிய மூவரும் ஒன்றாய் அமர்ந்து, கலந்தாலோசித்து முடிவு செய்வார்கள். இப்பொழுது யாரும் நடன டைரக்டரை லட்சியம் செய்வதில்லை. தயாரிப்பாளர்கள் பாடல்களைப் பதிவுசெய்துவிட்டு, "நாளை மறுநாள் ஷூட்டிங்" என்று கூறிவிட்டுச் சென்று விடுகிறார்கள். நடன டைரக்டருக்கு அவர்கள் கொடுக்கும் நேரம் மிகக் குறைவு. அதனால்தான் இப்பொழுது வரும் பெரும்பாலான படங்களில் நடனக் காட்சிகள் சரியாக அமைவதில்லை.

அந்தக் காலத்திலும், சில பாடல்களில் விரசம் இருந்தது. ஆனால் அதை நடனமாகப் படமாக்கியபோது பார்க்கும் மக்கள் மனத்தில் விரசமான எண்ணங்களைத் தோற்றுவிக்கவில்லை. ஆனால் இப்பொழுதோ விரசமாக இருக்க வேண்டும் என்பதற்காகவே பாடல்களும், நடனக் காட்சிகளும் திட்டமிட்டு அமைக்கப்படுகின்றன. அதனால்தான் தற்போது படம் பார்க்கும் மக்களும், படத்தைப் பார்த்துவிட்டு, வந்த பின்னர், 'காமிரா நல்லாயிருக்கு,' 'டைரக்ஷன் நல்லா இருக்கு' என்று சொல்கிறார்களே ஒழிய நடனங்கள் நன்றாக இருக்கிறது என்று சொல்வதில்லை.

பரத நாட்டியத்துக்கு அந்த நாளையப் படங்களில் முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள் என்றால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. பரத நாட்டிய சாஸ்திரத்தில் எல்லாவிதமான அங்க அசைவுகளும் இருக்கின்றன. அந்தக் காலத்தில் அதை ஆடும் நடிகர்களும் நடிகைகளும் பர்வத்தோடு அதை ஆடினார்கள். ஆனால் இப்பொழுது பெரும்பாலான நடிகைகளுக்குப் பரதநாட்டியமே தெரிவதில்லை. அதனால்தானோ என்னவோ அவர்கள் ஆடும் நடனங்களும் நினைவில் நிற்கும்படியாக இல்லை.

இப்பொழுது ஒரு படத்துக்கு இரண்டு மூன்று நடன ஆசிரியர்கள் கூடப் பணியாற்றுகிறார்கள். ஆனால், பார்க்கும் மக்களின் நினைவில் தங்கும்படி ஒரு நடனக் காட்சிகூட படத்தில் வருவதில்லை.

ஆடற்கலை என்பது ஒரு தெய்வீகக் கலை. இப்பொழுது வரும் படங்களில் அதைக் கொச்சைப்படுத்திக் கொண்டு வருகிறார்கள்.

தமிழ்த் திரைப்படங்களில் பரதநாட்டியத்தை ஒதுக்கி முதலில் ஓரியண்டல் நடனங்கள் புகுத்தப்பட்டன. அந்த ஓரியண்டல் நடனம் பலவிதமான மாறுதல்களைப் பெற்று இப்பொழுது 'க்ரபரே' நடனங்களில் வந்து நிற்கிறது!

ஆனால் காலம் நிச்சயம் மாறும். அந்தக் காலத்தில் நடனத்துக்காகப் படம் பார்த்தது போல் வருங்காலத்திலும் பார்க்கத்தான் போகிறார்கள். இப்பொழுது படங்களில் வரும் நடனக் காட்சிகள் எல்லாம் காட்டாற்று வெள்ளம்தான். பரதக் கலை ஒன்றுதான் வற்றாத ஜீவநதி. அதை அடிப்படையாக வைத்துப் பாடல் காட்சிகளை அமைத்தால்தான் படங்கள் ஓடும் என்ற ஒரு நிலை மறுபடியும் வரத்தான் போகிறது.

பேட்டி: ப்ரியன்



⌘ சாம்ராஜ் - ஜெயதேவி ஜெயமாலினி

காத்திருப்போம், காலம் மாறும்!





"The British came when the Indians failed
- an unknown British Captain

41

"என்னைத் தொடாதீர்கள்!" என்று சுவர்ணமுகி சொன்னதும் அர்ச்சுனனுக்கு அதிர்ச்சி உண்டாகியது. மெய்மறந்து ஒழுக்கமில்லா காரியத்தைச் செய்து விட்டானோ?

சுவர்ணமுகியைக் கலக்கத்தோடு பார்த்து "இளவரசி! என்னைப் பொறுத்தருளுங்கள்! நினைவில்லாமல் உங்களைத் தொட முயன்றேன்" என்றான்.

இளுக்கென்று சுவர்ணமுகி கண்களிலிருந்து இரு துளிகள் ததும்பின. நெஞ்சங்கள் துயரப் பொருமலில் சிறிது சஞ்சரித்தன. "சுவாமி! தொடாதீர்கள் என்ற என் நாவு தீய்ந்து விடவேண்டும். நா தான் அப்படிச்சொன்னதே தவிர, இதயம் சொல்லவில்லை. எனக்கு நேர்ந்தது தெரியுமா, சுவாமி?" என்றாள்.

தளர்ந்து வரும் வார்த்தைகள் அவன் மனத்தில் என்னமோ பண்ண, ஏதோ கேட்கத்தகாதது அவள் வாயிலிருந்து வரப் போகிறது என்று உணர்ந்து "என்ன நேர்ந்தது, தங்களுக்கு?" என்று கேட்டான், நடுக்கத்துடன்.

அவள் வார்த்தை சொரியுமுன் கண்கள் சொரிந்தன. வார்த்தைகள் அதனால் தடைப்பட, தன் வலக் கையில் இருந்த கொத்து வளையல்களை மேலே இழுத்துக் காட்டினாள். அவளது மணிக்கட்டைக்கு அருகில் ஒரு மங்கல நாண் கட்டப்பட்டிருந்தது.

திடுக்கிட்ட அவன், "என்ன கங்கணமா?" என்றான்.

"ஆமாம்!"

"பரிசக் கங்கணமா?"

"ஆமாம்:"

அவன் இதயத்தில் ஓர் உலை உதயமாகியது.


"தங்களுக்குப் பரிசம் நடந்து விட்டதா?"

"ஆம் சுவாமி!"

"எங்கே, எப்போது, யார் அவர்?"

சுவர்ணமுகி திகைத்தாள். நெஞ்சில் வார்த்தைகள் நிரம்பி யிருந்தன. இதயத்தில் உணர்ச்சிகள் நிரம்பி யிருந்தன. இரண்டும் வெளிவர முயன்றதில் இரண்டும் தடைப்பட்டுத் திக்குமுக்காடின. எனினும் நேரம் அதிகமில்லை என்று உணர்ந்து அவள் தனது துயரத்தை மெள்ள ஒத்தி எடுத்து, அன்று கோட்டை முற்றுகையில் கடைசி நாளில் வேலூர் நாயகர் அவளைப் பலவந்தமாக அழைத்துப் போனதையும், அவனுக்கும் வேங்கட மகாராஜாவுக்கும் பரிசம் போட்டதையும் கூறினாள்.

"சுவாமி! சுவாமி! விஜயநகர சாம்ராஜ்யத்தின் பேரில் என்னைக் கேட்டார்கள், கட்டளையிட்டார்கள். பரிசம் போடா விட்டால் விபரீதம்; இருக்கும் சின்ன ராஜ்யமும்சின்னா



சுவர்ணமுகி

ஸ்ரீ வேணுகோபாலன்

பின்னமாகும் என்றார்கள். என் தந்தை எனக்கு விட்டுச் சென்ற ஓலை உபதேசத்தை நினைவு கூர்ந்தேன். 'ராஜ்யத்திற்காக என்ன தியாகமும் செய்யவேண்டும். என் சந்ததியிடமே ராஜ்யம் வந்துவிட வேண்டும்' என்று அவர் அந்த ஓலையில் உருகி வேண்டுகோள் விடுத்திருந்தார். அவரது துயர வாழ்க்கையின் கடைசி வேண்டுகோளை நிறைவேற்றி என் நன்றிக் கடனைச் செலுத்துவது என் தலையாய கடமை என்று நினைத்தேன். நானும் சம்மதித்தேன், சுவாமி! தயக்கத்தோடு, விரக்தியோடு, உள்ளத்தில் துறவோடு சம்மதித்தேன்'' என்றாள் அவள்.

முகம் குமுறியது. கண்கள் மங்கலாக விழித்தன. அவள் தோற்றத்தில் ஒருசோகக் களை ஊடுருவியது.

அர்ச்சுனன் அந்தப் பாறையோடு இணைந்திருந்தான். முதலில் பாதங்கள் பாறையோடு கலந்து பாறையாகின. பிறகு கால்கள் பிறகு உடல்! கடைசியில் இதயம்!

அவன் ஒரு கற்சிலையாக மாறிக் கனத்துக் கிடந்தான்.

திடீரென சலசலப்புக்கள் கூடின. திவர்த்திக் காரர்கள் நெருங்கி இருந்தார்கள்.

பலர் மேலே ஏறிவந்தார்கள். பாறைமீது அர்ச்சுனனையும் சுவர்ணமுகியையும் கண்டு



மகிழ்ச்சி அடைந்தார்கள். அர்ச்சுனனை அவர்கள் எழுப்பியதும் பிரமை பிடித்தவன் போல எழுந்தான். ''ஐயா! நல்லவேளை தப்பித்தீர்கள். தோதாவின் ஆட்கள் மறுபடியும் இருட்டில் வந்து தொல்லை கொடுத்தார்கள். எல்லோரையும் கொன்று விட்டோம்!'' என்றார் ஒரு அதிகாரி.

எல்லோரும் இறங்கிக் கூடாரங்களை நோக்கி நடந்தார்கள்.

அர்ச்சுனன் யாரிடமும் பேசவில்லை.

கூடாரத்தின் சவுரி மெத்தையில் புதைந்தான். ஏதோ ஒரு சாம்ராஜ்யத்தை இழந்த உணர்ச்சி அவனுக்கு! ஆமாம், மனத்தில் அவன் சிறுகச் சிறுக ஒரு மாபெரும் சாம்ராஜ்யத்தை உண்டு பண்ணி யிருந்தான். அது இன்று சுவர்ணமுகியின் ஒரே வார்த்தையில் தான் தூளாகி விட்டது. விஜயநகர ராஜ்யத்தை விட இப்போது அவனது மனோராஜ்யத்தின் இழப்பு பெரிதாகத் தோன்றியது.

அன்று மட்டுமல்ல, அதைத் தொடர்ந்து மூன்று நாள் பிரயாணத்திலும் அவன் பேசவில்லை.

நான்காம் நாள் அவர்கள் தியாக துர்க்கத்தை அடைந்தார்கள்.

அங்கே மலைச்சாரல் ஓரமாய்த் தண்டு இறங்கிய பின்னர் மேலே நடக்க வேண்டிய காரியங்கள் சுறுசுறு வென்று நடந்தன.

விஜய நகரப் பொக்கிஷம் இருக்கும் இடத்தை சுவர்ணமுகி காண்பித்துக்கொடுத்தால், அவற்றை எடுத்து வெளியேற்றும் பணியை மேற்கொள்ள எல்லோரும் சித்தமாக இருந்தார்கள்.

அதிகாரிகளின் தலைவராக சோமப்பர் வெகு துரிதமாக இயங்கிக் கொண்டிருந்தார்.

சுவர்ணமுகிக்குச் சங்கடமான நிலை வந்திருந்தது. அவள் செய்யப் போகும் காரியம் சரிதானா, அது தனது இறந்த தந்தைக்கு உகந்ததாக இருக்குமா என்று யோசித்தாள்.

பொக்கிஷம் இருந்த இடம் ஒரு ஓலையில் குறிக்கப்பட்டு ஒரு தாயத்துக்குள் அடைக்கப்பட்டிருந்தது. அந்தத் தாயத்து அவளது அரைநாணில் நிரந்தரமாகச் சேர்க்கப்பட்டிருந்தது.

ஒரு மாபெரும் ரகசியத்தை வெளியிடும் சந்தர்ப்பம் அவள் கையில் இருந்தது. அதைச் செய்யலாமா, கூடாதா என்ற பல பிரச்னைகள் அவளுக்குத் தோன்ற வெகு நேரம் குழம்பி யிருந்தாள்.

கூடாரத் தண்டில் அதிகாரிகள் பொறுமை இழந்து காணப்பட்டார்கள்.

நேரம் ஏற ஏற எல்லோரும் ஒரு முனை முனைப்பில் ஆழும் சமயம்,

சோமப்பர், தனது இதர அதிகாரிகளான சின்னத்தம்பி நாயகர், மன்னரு தாசர், சேவப்ப ரெட்டி ஆகியோருடன் சுவர்ணமுகியின் கூடாரத்துள் நுழைந்தார்.

''மகாராணி!'' என்று சுவர்ணமுகியை அழைத்து. ''சீக்கிரம் தங்களது ஆலோச

லையை வெளியிட்டால் நல்லது. தாங்கள் ராஜப் பிரதிக்ஞையையும் விசுவாசப் பிரதிக்ஞையையும் எடுத்திருக்கிறீர்கள். இந்த மா சாம்ராஜ்யம் தங்கள் செய்கைக்கே காத்திருக்கிறது. எனவே இனியும் தயக்கம் காட்டவேண்டாம். சீக்கிரம் மேலே போகும் வழியைச் சொல்லுங்கள்!'' என்றார்.

சுவர்ணமுகியின் கண்கள் கலங்கின. ஏன் இந்த இக்கட்டில் மாட்டினேனும் என்று எண்ணினாள்.

பழைய சம்பவங்களை நினைத்தாள்.

வேங்கட மகாராஜாவிடம் ஸ்ரீரங்கன் அவளை அழைத்துப் போன சம்பவம் முன்னால் நின்றது.

மகாராஜாவிடம் ஏன் போனேனும்? உடனே மருடம் கொடுத்து விடுவார் என்று எண்ணினேனு? இல்லை! என்னை ஒரு ராஜ குமாரியாக மதித்து என் கஷ்டங்களை நிவர்த்திப்பார் என்று நினைத்தேன். எனக்கு விருப்பமானவரை நான் திருமணம் செய்து கொள்ள அனுமதித்து, என்னைத் தம் வாரிசாகப் பிரகடனப்படுத்துவார் என்று நினைத்தேன். மகாராஜாவுக்குச் சந்ததி கிடையாது. எனவே நான் நினைத்ததில் எந்தத் தவறும் இல்லை.

ஆனால் நடந்தது என்ன?

பரிச்சயம் பண்ணிக் கொள்ளப் போன இடத்தில் பரிசம் நடந்து விட்டது.

வேங்கட மகாராஜாவே அவளைத் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானம் செய்து விட்டார். இது அடுக்குமா? நியாயமா?

அரசாங்க விஷயத்தில் எல்லாம் நியாயம் தான்!

அதை எந்தவிதமாக அழகாக நியாயப் படுத்திப் பேசினார் வேலூர் நாயகர்! அவர்தான் மகாராஜாவின் திருமணத் தீர்மானத்துக்கே காரணமாக இருந்திருக்க வேண்டும்.

அவள் ஒன்று நினைக்க, வேறு ஒன்று நடந்து விட்டதுவே!

இப்போது மனம் அர்ச்சுனன் மீது வியாபித்து,' அவள் செய்தது எல்லாம் தப்பு என்கிறதே!

ஒரு அரச கடமை என்று நினைத்து, ஒரு ஆத்மக் கடமையைப் புறக்கணிக்க வேண்டி வந்து விட்டதே!

அவள் இன்னும் தயக்கமாக இருப்பதைப் பார்த்து ''அல்லது மகாராணி!'' என்று ஆரம்பித்தார். ''தாங்கள் தயங்குகிறீர்கள்! ஒருவேளை தாங்கள் பொக்கிஷத்தைப் பற்றிக் கூறியதெல்லாம் பொய். தாங்கள் உண்மையில் ராஜ பரம்பரையே அல்ல என்று தெரிந்தால், தங்களைச் சிரச்சேதம் செய்யும்படி எங்களுக்கு உத்தரவு.

''அல்லது, தாங்கள் உண்மையில் பொக்கிஷம் இருக்கும் இடத்தை அறிந்து, அதை எம்மிடம் சொல்ல விருப்பமில்லாது இருக்கும்பட்சத்திலும் தங்களைச் சிரச்சேதம்செய்யும்படி எங்களுக்கு உத்தரவு.

''எனவே, இப்போது ராஜ்யம் அடைந்திருக்கும் மோசமான நிலையை மனத்துள் எண்ணிப் பார்த்து, நமது மகாராஜாவுக்கு இந் நிலையில் எப்படி ஒரு பொக்கிஷம் அவசியம் தேவை என்பதையும் யோசித்துப் பார்த்து, தாங்கள் சிறிதும் தயங்காமல் மேலே காரியத்தில் ஈடுபடுவீர்கள் என்று நம்புகிறோம்'' என்றார் சோமப்பர்.

சுவர்ணமுகி கோபமுடன் அவர் வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தாள். சில வார்த்தைகள் அவள் மீது சாட்டைகளாக விழுந்தன. சிலவற்றைக் கேட்கும்போது ஆத்திரம் கொதித்து எழுந்தது. சமயத்தில் அவரை 'வாயை மூடு' என்று சொல்லக்கூட நினைத்தாள்.

ஆனால் நிலைமையை ஒருவாறு புரிந்து கொண்டு சும்மா இருந்தாள். சற்று நேரம் யோசித்தாள்.

பிறகு பார்வையைத் தாழ்த்தியவாறு எழுந்தாள்.

''நல்லது சோமப்பரே! என்னோடு இருவர் மட்டும் மேலே வாருங்கள்! எனக்கு அவர்கள் நம்பகமாக இருக்க வேண்டும். நான் என் ஓலைச் சுவடியில் உள்ளது போல் வழி காட்டுகிறேன்'' என்றாள்.

அப்போது வாசலில்சலசலப்பு ஏற்பட்டது. என்னவென்று பார்க்க, ட்ரேக் ராஜுவும், கிருஷ்ணசந்திரன் என்ற இளைஞரும் தோதாவின் ஆட்கள் இருவரைப் பிடித்துக் கொணர்ந்திருந்தார்கள்.. இந்தப் பரிவாரத்தின் பின்புறப்பாதுகாவலராக அவர்கள்வந்ததாகவும், அர்ச்சுனன் கேட்டுக் கொண்டது பேரில் அப்படிச் செய்ததாகவும், பின்புறத்தில் தப்பியோடிய தோதாவின் ஆட்களுடன் சண்டை போட்டுப் பலரைக்கொன்று விட்டு இருவரை மட்டும் விலங்கிட்டுக் கொண்டு வந்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

''ஐயா, இங்கே உள்ள பரிவாரங்களில் இன்னும் இருவர் நமது ஆட்கள் போல வேடம் தரித்து நம்முடன் இருக்கிறார்களாம். அவர்களை அடையாளம் காட்டுவதாகக் கூறியதன் பேரில் இவர்களை இங்கே இழுத்து வந்திருக்கிறோம்'' என்று கூறினான் கிருஷ்ண சந்திரன்.

''அவர்கள் அபகரித்த அந்தப்புரப் பெண்களை எல்லாம் மீட்டுவிட்டோம். அவர்கள் பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள்'' என்று தெரிவித்தான் டிரேக் ராஜர்.

நன்றி தெரிவித்த சோமப்பர், அந்த எதிரிகளைத் தமது தளபதி வசம் கொடுத்துமேலே நடவடிக்கைகளை எடுக்குமாறு கூறிவிட்டு, கூடாரத்துக்குள் போய், சுவர்ணமுகியிடம், விஷயத்தைத் தெரிவித்தார். பளிச்சென்று சுவர்ணமுகியின் கண்ணில் வெளிச்சம் அடிக்க, ''நம் கூட்டத்தில் ட்ரேக் ராஜரையும், அர்ச்சனனையும் சேர்த்துக் கொள்ளுங்கள்!'' என்றாள்.

சோமப்பர் யோசித்து, ''அர்ச்சனன் இங்கே இருக்க வேண்டி இருக்கிறது. ட்ரேக் ராஜர் ஒரு வெள்ளைக்காரன். அவன் வேண்டாம்!'' என்றார்.

''ராஜரின் நியாயமான தர்மங்கள் எனக்குப் பிடிக்கின்றன. அவரை அழைத்துக் கொள்ளுங்கள். அர்ச்சனர் என்ன?'' என்றாள் கவலையுடன்.

''இங்கே வேறு வேலை கொடுத்திருக்கிறோம்.''

''என்ன வேலை?''

''நாம் மேலே போனால் கீழே பாதுகாப்புக்கு வேண்டாமா?''

ராஜர் மலை ஏறும் கூட்டத்தோடு சேர்க்கப்பட்டான்.

கிருஷ்ணசந்திரன் அர்ச்சனனைத் தேடிக் கூடாரங்களை நோக்கிப் போனான்.

மறு நாள் காலை ஒரு சின்னக் குழு மலை மேல் ஏறத் தொடங்கியது.

கூடார வாசல்களில் பரிவாரங்கள் நின்று அவர்களைக் கவனித்தார்கள்.

சுவர்ணமுகியின் முகத்தில் சஞ்சலம் ஆடியது. கண்கள் பூஜ்யமாய் வெறித்தன.

கூடாரங்கள் முடிந்த பிறகு இரண்டு மஞ்சள் குடிசைகள் தென்பட்டன. வாசலில் வேப்பிலை செருகியிருந்தது. அவற்றில் பொக்கிஷப்பலிக்காகப்பெண்ணும், ஆணும் இருப்பதாகக் கூறினார்கள்.

மலைமேலே ஏறத் தொடங்கினார்கள்.

சுவர்ணமுகி தன்னோடு வரும் ஐவர் குழுவைச் சற்றுப் பின்னால் வரச் சொல்லிவிட்டு அவன் முன்னால் போனாள்.

சுவர்ணமுகிக்குப் பாதுகாவலாக ஒரு பக்கம் ஒரு பெண் வீரரும் மறு பக்கத்தில் ட்ரேக் ராஜரும் சென்றார்கள்.

....மூன்றடுக்குப் பாறை சரிரண்டு போன பின்னே...

என்று ஓலையில் எழுதியிருந்ததை சுவர்ணமுகி பயபக்தியுடன் வாசித்தாள். பேசும் தமிழில் அதை ராஜருக்கு விவரணம் செய்தாள். ராஜர் தனது தோலை தர்சினிக் குழாயைக் கொண்டு வந்திருந்தான். தூரப் பகுதிகளை இலக்குக் காட்டிக்கொண்டே அவர்கள் மேலே நகர்ந்து போனார்கள்.

புதரும் செடிகளும் கப்பிக் கிடக்க, கீழே சரளும் கற்களும் அவர்கள் பாதரட்சைகளை உருட்டின. முட் கொடிகள் அவர்கள் உடம்பைக் கீறிவிட்டன.

சுவர்ணமுகி தனது விருத்தாந்தங்களைச் சொல்லிக் கொண்டே அவனுடன் நடந்து போனாள். ராஜர் அவள் கூறுவதை உன்னிப்பாகக் கேட்டு வந்தான்.

....செவ்விளநீர் சிற்றோடை கரையோடே நடம்பிடித்து பல்லிச் சுனை வரையில் பாங்காகப் போன பின்பு...

சிற்றோடையைக் காணவில்லை. என்றைக்கோ தூர்ந்து போயிருக்கும்! மழை ஏது?

எனினும் ராஜரிடம் விளக்கியதும், ராஜர் தீவிரமாக யோசனை செய்து, பல திசைகளில் சென்று தழை கொடி புதர்களை விலக்கித் தரையைச் சோதனைசெய்து பார்த்தான்.

பிறகு கற்கள் வரிசையாக இருக்கும் தடம் கண்டு அதுதான் முன்னாள் ஓடிய சிற்றோடையின் தடம் என்று உணர்ந்து அதோடு நடந்து போனான். சுவர்ணமுகி அவன் பின்னே வர, ''ராஜர்! உங்கள் நாடுகளில் இது போல் நடக்குமோ? மனம் ஒரு பக்கம் இருக்க, பரிசம் இன்னொரு பக்கம் போடுவார்களா?'' என்றுகேட்டாள். இளைப்பாறுவதற்காக ஒரு கல்லின் மேல் அவள் அமர்ந்து கொண்டாள்.

''பொதுவாக நடக்காது. துர்லபமாக நடப்பது உண்டு'' என்றான் ராஜர் சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்டே.

''ராஜகுமாரிகள் இப்படிச் செய்வார்களா?'' என்றான் அவள் ஆச்சரியமுடன்.

''அப்படிச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் வராது'' என்றான் அவன்.

''ஏன் வராது?''

''எங்கள் நாடுகளில் இத்தனை குழப்பங்கள் இருப்பது இல்லை. இங்கே எத்தனை ராஜாக்கள், எத்தனை தளபதிகள், எத்தனை வகை ஜனங்கள்! ஒருவருக்கொருவர் சுயநலத்தோடு அடிக்கடி சண்டை போட்டுக்கொள்கிறார்கள்!''

''உங்கள் நாட்டில் எப்படி அரசாள்கிறார்கள்?''

''எங்கள் நாட்டில் மக்களின் எண்ணங்களுக்கு மதிப்பு உண்டு. அரசர்கள் எங்கள் எண்ணங்களைப் போற்றி மதிப்பார்கள்.''

''கொள்ளை, களவு, பூசல் இத்தனை உண்டா?''

''நிச்சயம் இல்லை. அவற்றை அடக்க எம்மிடம் போதுமான படை உண்டு.''

''உங்களைப் போன்ற அரசாங்க முறையை இங்கே அமைக்க முடியுமா?''

''ஏன் முடியாது? நாங்கள் எங்கள் கோட்டைக்குள் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்று நினைக்கிறீர்கள்? வந்து பாருங்கள். எங்கள் அரசாங்க முறைதான் நடத்தப்படுகிறது. அதில் தப்புப் பண்ணினவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவார்கள். பெரிய பதவியில் இருந்தால்கூட ஆட்கள் தான்தோன்றித்தனமாக இருந்துவிட முடியாது'' என்று கூறிய ராஜர் இங்கிலாந்தில் சமூக வாழ்க்கை அமைதியாக நிலவுவதை விவரித்தான்.

சுவர்ணமுகியின் கண்கள் அதிசயமாக விரிந்தன. ''ராஜர்! அந்தஅரசாங்கமுறையை இங்கே கொண்டுவர முடியுமா?''

''ஏன் முடியாமல்? அரசாங்கத்தை மட்டுமல்ல. அரசு பரம்பரைகளைக் கூட ஒரு நியதியில் இயங்க வைத்து விடலாம். அதற்கு மக்களின் ஒத்துழைப்பு வேண்டும்'' என்றான் ராஜர்.

மனைவி: ''அதையும் இதையுமா இழுத்துப்போட்டு என்னத்தைத் தேடிக்கிட்டிருக்கீங்க அப்படி?''

கணவன்: ''எதிர் வீட்டு ராமசாமி கொடுத்த அனுமதிக் கார்டைத்தான்! அது இல்லேன்னு ஒலியும் ஒளியும் பார்க்க அவன் வீட்டுக்குள் கண்டிப்பா அனுமதிக்க மாட்டான் என்னே!'' —உ. ராஜாஜி



''ஏய் குழந்தே, அம்மாவை 'வாடி, போடி'ன்னு 'டி' போட்டுக் கூப்பிடக் கூடாது தெரிஞ்சுதா?''

''பின்னே அப்பாவை மட்டும் 'டாடி'ன்னு கூப்பிடலாமா?''

-ஜி. நடராஜன்



''உங்களிடம் ராஜ்யத்தைக் கொடுத்தால் அப்படிச் செய்வீர்களா?''

''எங்கள் கோட்டைக்குள் அப்படித்தான் செய்கிறோம். வந்து பார்த்தால் தெரியும்.''

''எங்கள் நாட்டிலும் அந்தப் புதுமையை நிகழ்த்துங்களேன்.''

''நிகழ்த்தலாம். ஆனால் அது இப்போது எங்கள் குறிக்கோள் அல்லவே! வியாபாரம் செய்வதுதான் எங்கள் குறிக்கோள்.''

''தங்கள் குறிக்கோளை மாற்ற முடியாதா?''

''மாற்றலாம். இன்னும் அதற்கான சந்தர்ப்பம் வரவில்லை.''

''ஏன் இங்கே உள்ள விஜயநகர சாம்ராஜ்யம் முழுவதையும் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் முறைப்படி நடத்துங்கள்.''

ராஜர் முறுவலித்தான். ''மக்கள் எங்களை விரும்ப வேண்டுமே!''

''எங்கள் மக்கள் இங்கே நடக்கும் அநியாயங்களையும் அக்கிரமங்களையும் கண்டு நொந்து விட்டார்கள். வெறும் பஞ்சைகளாக அவர்கள் நாட்டில் உலாவுகிறார்கள். ஒரு சின்ன அளவு நியாயத்தைக் கொடுத்தால் கூட அவர்கள் நன்றியறிதலோடு உங்களைப் பார்ப்பார்கள். இப்போது இங்கே ஏற்பட்டுள்ள அராஜகமும் அதர்மமும் இருபது வருடங்களாக நடப்பவை. இன்னமும் நடக்கும். இதற்கு ஒரு விடிவு காணும் வகையில் நீங்கள் எங்களுக்கு உதவி செய்யக்கூடாதா?'' என்றாள் அவள்.

ராஜர் சிரித்தான். ''அதெல்லாம் நீங்கள் நினைக்கிறபடி அவ்வளவு எளிதல்ல!'' என்றான்.

''இளவரசி!'' என்றான் அவன் யோசித்த பிறகு. ''நீங்கள் இந்தப் பொக்கிஷத்தைக் காட்டிக் கொடுப்பதே தவறு!'' என்றான்.

சுவர்ணமுகி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

(அடுத்த இதழில் முடியும்)

கண்காட்சியில் எதை முதலில் பார்ப்பது என்று முழித்துக் கொண்டிருந்த என்னை 'வாங்க, நான் உங்களை வரிசையாக அழைத்துப் போகிறேன்' என்று ஒருவர் வந்தார். ''ஐயாம் ஜெயராமன், டைரக்டர் ஆஃப் போஸ்டல் சர்வீஸ்'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

''இதோ பார்த்தீங்களா, இது ராஜாஜி கவர்னர் ஜெனரலாக இருந்தபோது அச்சிடப்பட்ட மகாத்மா காந்தி தபால் தலை. முதலில் அரசு அலுவலகங்கள் உபயோகப்படுத்துவதற்குத்தான் மகாத்மாவின் தபால் தலையை அச்சிட்டார்கள். ஆனால் இதைக் கேள்விப்பட்ட ராஜாஜி, பொதுமக்கள் எல்லோரும் பயன்படுத்தும் விதத்தில் 'Service' என்ற வார்த்தையை நீக்கிவிட்டு அச்சிடச் சொன்னார். ஆக 'Service' என்ற வார்த்தை உள்ள மகாத்மாவின் தபால் தலை அரிதாகக் கிடைக்கும் தபால் தலை. அதைத்தான் இங்கு வைத்திருக்கிறார்கள்'' என்றார்.

என் மகனுக்குப் பொறுமை போறாது. ''ஸார், உலகிலேயே அரிதான தபால் தலை எது?'' என்றான் ஜெயராமனைப் பார்த்து.

''பிரிட்டிஷ் கயானாவின் தபால் தலை ஒன்று மிகவும் அரிதானது. ஒரே ஒரு தபால் தலைதான் இப்போது அமெரிக்காவில் உள்ள ஒருவரிடம் இருக்கிறது. அதை அவர் 1,32,000 ரூபாய் கொடுத்து வாங்கினார்'' என்றார் ஜெயராமன்.

''ஒரு தபால் தலைக்கு இவ்வளவு ரூபாயா?'' என்று பெருமூச்சு விட்டேன் நான்.

என் பெருமூச்சு அடங்குவதற்குள் என் மகன் இன்னொரு கேள்விக் கணையைத் தொடுத்தான்.

''Philatelic என்றால் என்ன?'' என்றான் என்னைப் பார்த்து!

இந்தச் சமயம் பார்த்துத்தானா ஜெயராமன் ஏதோ காரியமாக என்னை விட்டுப் போக வேண்டும்? நல்ல வேளையாக அங்கே வந்த தபால் துறையைச் சேர்ந்த அதிகாரி பார்த்தசாரதி பதில் சொன்னார்:

''Philatelic என்பது இரண்டு வார்த்தைகள். லத்தீன் மொழியிலிருந்து வந்தது. இதன் பொருள் தபால் தலை சேகரித்தல் என்பதுதான்.''

ஒரு இடத்தில் பாரதியாரின் பாப்பாபாட்டில் உள்ள எல்லா வரிகளுக்கும் ஏற்பத் தபால் தலைகளைத் தேர்ந்தெடுத்து ஒட்டியிருந்தார்கள்.

சில தபால் தலைகள் பாதியாக வெட்டப்பட்டு வைக்கப்பட்டிருந்தன. பிடித்துக் கொண்டான் என் மகன். ''இது ஏன் இப்படி?'' என்றான். என் அதிர்ஷ்டம் மீண்டும் ஜெயராமன் வந்தார்.

''ஒரு காலத்தில் குறைந்த மதிப்புள்ள தபால் தலைகள் கிடைக்காத காரணத்தால் அதிக மதிப்புள்ள தபால் தலையைப் பெற்று அதைச் சரியாகப் பாதியாக வெட்டி குறைந்த மதிப்புள்ள தபால் தலைகளுக்குப் பதிலாகப் பயன்படுத்தினார்கள்'' என்றார்.

''தபால் தலை சேகரிக்கும் பழக்கத்தை முதலில் ஆரம்பித்தவர் யார்?'' என்றான் என் மகன்,



தலையாய கண்காட்சி

''லண்டனில் உள்ள ஒரு அம்மையார், 1841ம் ஆண்டு 'டைம்ஸ்' நாளிதழில் விளம்பரம் கொடுத்துத் தபால் தலைகளைச் சேகரிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினார்'' என்ற ஜெயராமன் தொடர்ந்து ''உலகிலேயே அதிகத் தபால் தலையைச் சேர்த்த தனி நபர் இரண்டாம் எலிஸபெத் தான்'' என்றார். தொடர்ந்து,

''ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தபால் தலைகள் இங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இதனுடைய மதிப்புப் பல லட்சம் இருந்தாலும், நாங்கள் இந்தக் கண்காட்சியைப் பத்து லட்சத்துக்குத்தான் இன்ஷூர் செய்திருக்கிறோம்'' என்றார் ஜெயராமன்.

தலைவர்கள், ஞானிகள், பறவைகள், இயற்கைக் காட்சிகள் என்று வித விதமான தலைப்புக்களின் கீழ் தபால் தலைகள்.

பாரதியாரின் வரிகள் பொறித்த விசேஷ உறைகள் கண்காட்சி தபால் அலுவலகத்தில் விலைக்கு வாங்கித் தருமாறு கேட்டான் மகன்.

மகிழ்ச்சியோடு போஸ்ட் ஆபீஸ் உள்ள இடத்தை நோக்கி நடந்தேன்.

– திலப்பா

ரசிகமணி ரசித்த மணிகள்

மீ.ப. சோமு



முடிவுரை

அடுத்தவாரம் தைப் பொங்கல் திருநாளைக் கொண்டாடப் போகிறோம்.

டி.கே.சி. மிகவும் அனுபவித்துக் கொண்டாடிய ஒரு திருநாள் இந்த உழவர் திருநாளாகும். பொதுவாக அவர் பண்டிகைகள் அவற்றை யொட்டிய வழிபாடுகள் ஆகியவற்றில் நம்மை யெல்லாம் போல் சடங்கு முறையாகப் பங்கு கொள்வதில்லை. கோவில்களுக்குப் போனாலும் கூட அவர் ஈடுபடுகிற செயல்கள் தனியாக இருக்கும். எல்லாவற்றையும் ஒரு ரசிகமணியின் நோக்கிலேயே பார்ப்பார், அனுபவிப்பார். வழிபாடு நடக்கும்போதும் அந்தச் சடங்குகளிலேயுள்ள கலையழகுகளையே அவர் விரும்பித் துய்ப்பார்.

மந்திரங்கள், பூஜைகள், இறைவனுடைய பல வடிவங்கள் அவற்றை ஆராதிக்கும் முறைகள் ஆகியவை பற்றி அவருடைய கொள்கைகள் அனைத்தும் கலைக் கொள்கைகளே! இறைவன் என்ற எல்லையற்ற ஆற்றலிலும், பரம்பொருளின் இயக்கங்களிலும் அவருடைய பார்வை விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் இணைந்த ஓர் ஒருமை நோக்காகவே இருக்கும். இந்த விஷயத்தில் எல்லாம் ராஜாஜியின் பார்வை வேறு. டி.கே.சி.யின் பார்வை முற்றிலும் வேறு.

இலக்கண இலக்கியங்களில் எப்படி ரசிகமணிக்கு ஒரு தனித்த பார்வை இருந்ததோ, அப்படியே தான் மற்ற எல்லாப் பொருள்களிலும் அவருடைய போக்கும் நடையும் செயல்களும் தனித் தன்மையோடு இருக்கும். ஆனால் நாம் வேறு விதமாகச் சடங்குகளிலும் வழிபாடுகளிலும் ஈடுபடும்போது, அதை அவர் ஏளனம் செய்ய மாட்டார். அதிலுள்ள கலையழகைப் பாராட்டுவார். இது அவருடைய பண்பாடு!

பொங்கல் வருகிறது என்றதும் அவருடைய சில வாக்கியங்கள் நினைவு வருகின்றன. அவர் சொல்கிறார்:

''பொங்கலன்று சூரியன் உதிப்பது ஒரு தனி அழகு. எல்லாவற்றையும் தங்க மூலாம் பூசிவிடுகிறது.

குத்துவிளக்கு, ஆரம், அதற்கான விபூதி, குங்குமம், கரும்பு, மஞ்சள் தோகை, குழந்தை, பெண்டுகள், அவர்களுடைய அழகான உடைகள், அடுப்புகள், கலயங்கள் எல்லாவற்றுக்குமே ஒரு தங்க மூலாம்! மக்கள் உள்ளத்தில் ஒரு தனியான புத்துணர்ச்சி. வருஷத்தில் ஒரு நாளாவது இந்தச் சந்தோஷத்தை அனுபவிப்பதற்காக வந்து போகிறதே என்று வியக்க வேண்டி யிருக்கிறது. தங்கம் (டி.கே.சி.யின் பேத்தி) கொஞ்சம் கூட மிச்சம் மிச்சம் வைக்காமல் பொங்கலை நடத்தி விட்டாள். எப்படி? வீடெல்லாம் மாக்கோலம். அழகான கோலங்கள். மூன்று பானை வைத்துப் பொங்கல் பொங்கச் செய்து விட்டாள். ஒரே சந்தோஷம். அந்தச் சந்தோஷம் கதையோ, பாட்டோ, கவியோ ஒன்றிலும் வராது! இதைத் தெரிந்து கொண்டால் வாழ்க்கைக்கு ஒரு விளக்குக் கிடைத்தது என்று சொல்லலாம்.''

தைப் பொங்கலை இப்படி மதிப்புரை செய்கிறார் ரசிகமணி. இப்படியேதான் தமிழ் நாட்டு மக்களின் பண்டிகைகள் அனைத்திலும்

உள்ள கலைப் பாங்கையும் இதயப் பாங்கையும் ரசிகமணி போற்றுவார்.

ரசிகமணியின் நூற்றாண்டை யொட்டிக் கல்கி நேயர்களுடன் கடந்த எட்டு மாதங்களுக்கு மேலாக அந்தப் பண்பாளர் பெருந்தகையின் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இது எனக்கு ஒப்பற்ற மகிழ்ச்சியைத் தந்தது.

டி.கே.சி. அவர்களோடு நான் தொடர்பு கொண்டபோது இலக்கியத்திலும் இலக்கணத்திலும் முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளுடைய ஒரு புலவரின் அன்புக் குரிய மாணவனாக இருந்தேன். அவர் வடமொழி, தமிழ் இரண்டிலும் நிகரற்ற புலமை வாய்ந்தவரும், சுப்பிரமணிய பாரதியார், சோமசுந்தர பாரதியார், பண்டிதமணி கதிரேசச் செட்டியார், மகா மகோபாத்யாய சுவாமிநாதய்யர் போன்ற பெரியோர்களால் பயபக்தியோடு பண்டித சிரோமணி என்றும் மகாவித்துவான்என்றும் மதிக்கப்பெற்றவரும் நெல்லை இந்துக் கல்லூரியில் ஆசிரியராக இருந்து பின்னர் திருவாவடுதுறை ஆதீன வித்துவானாகத் திகழ்ந்தவருமாகிய சிதம்பர ராமலிங்கம் பிள்ளையவர்கள். இவரிடம் பெற்ற பயிற்சியோடு ரசிகமணியை அடைந்தேன். தொடக்கத்தில் ரசிகமணி ஒரு பண்டித மாணவனைப் பார்க்கிற பார்வையோடு தான் என்னையும் பார்த்தார். ஆனால் ஓர் ஆண்டுக்குள்எங்கள் பாசம் வளர்ந்தவிதத்தை இன்று நினைத்துப் பார்க்கிறேன். மகனை இழந்த தந்தை அவர். தந்தையை இழந்த மகன் நான். எங்கள் உறவு இந்தக் குறையை நிறைவு செய்வதாக இருந்தது என்றே இப்போது இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு அதைக் காண்கிறேன்.

டி.கே.சி.க்கும் ராஜாஜிக்கும் பல விஷயங்களில் தனித் தனியான பார்வை என்பதோடு கூட இருவருமே பெரும்பாலும் தங்கள் தங்கள் பார்வையிலிருந்து விலகாதவர்கள்! ரசிகமணியின் மறைவுக்குப் பிறகு என் வாழ்க்கையில் ரசிகமணியின் இடத்தை அப்படியே நூற்றுக்கு நூறு நிறைவு செய்தவர் ராஜாஜி! இந்த இருவருடைய உறவும் எனக்கு இறைவன் தந்த வரங்கள். என்று வணக்கத்தோடும் நன்றியோடும் நினைவு கூர்கிறேன். இந்த இருவருடைய உறவுதான் எனக்குக் கல்கியின் உறவைத் தந்தது. எனவே இந்த நினைவுகளைக் கல்கி அன்பர்களோடு பகிர்ந்து கொண்டதிலே ஒரு பிணைப்பும் இணைப்பும் இருப்பதாகவே உணர்கிறேன். டி.கே.சி.யிடம் இந்தப் பத்திரிகையின் ஈடுபாடு எத்தகையது என்பதை, இந்தக் கட்டுரைத் தொடரை வெளியிடுவதில் கல்கி நிறுவனம் காட்டிய ஆர்வத்தில் மிகத் தெளிவாகக் கண்டேன். இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து படித்து ஊக்கம் தந்த நேயர்களுக்கும் என் மனமுவந்த நன்றி உரியது. டி.கே.சி.யையும் ராஜாஜியையும் பற்றி எத்தனையோ நிகழ்ச்சிகளைச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். என்றாலும் இந்தத் தொடரானது ரசிகமணியின் மணி நாதத்தில் ஒரு சுவரத்தையாவது சரியாக ஒலித்துக் காட்டியிருக்குமானால் அதுவே ரசிகமணி நூற்றாண்டுக்கு எனது பணிவான காணிக்கை என்று கருதுகிறேன்.

நன்றி. வணக்கம்.

தில்லி டெஸ்ட் போட்டி முடிவு

இங்கிலாந்து அணியில் ஐந்து பந்து வீச்சாளரும் ஆளுக்கு இரண்டு விக்கெட் வீதம் சமமாக எடுத்திருந்ததால் ஐந்தாவது கேள்வி பரிசீலனையிலிருந்து ஒதுக்கப்பட்டது. மீதமுள்ள ஆறு கேள்விகளுக்கு நான்கு விடைகளைச் சரியாக எழுதிச் சமமாக ரூ. 100 பரிசினைப் பகிர்ந்து கொள்பவர்கள்:

1. எஸ். ஜனு
   1-17, இனியநல்லூர் அக்கிரகாரம்,
   போஸ்டு (வழி) சிறுகாம்பூர்
   திருச்சி-621213

2. டி. முத்துராமலிங்கம்,
   கே.-பா. எஸ். ஜி. ஜுவல்லரி மார்ட்,
   மெயின் ரோடு, கோவில்பட்டி-627701

3. கே. எஸ். ராஜு,
   3, ஆறாவது கிராஸ்
   இவாரி ரோடு, பெங்களூர்-560053

4. ஆர். மீனாட்சி சுந்தரம்
   29, பாரதியார் சாலை,
   சோமசுந்தரபுரம் காலனி
   மதுரை-625016

5. எஸ். ராம்குமார்,
   இந்தியன் பாங்க்,
   64, தெற்கு ரத வீதி,
   சிதம்பரம்-608001



சபரிமலைக்குப் போவது பாஷனாகிவிட்டது

'குருசாமி' என மரியாதையுடன் அழைக்கப்படும் ஐயப்ப பக்தர் ஸ்ரீ மணி அய்யர் பாலக்காட்டுக்காரர். ஐம்பது வருடங்களுக்கும் அதிகமாக சபரிமலைக்குப் போய் வரும் அவரைச் சந்தித்தபோது சொல்கிறார்:

''நான் பதினைந்து வயதில் முதல்முறையாக மாலைபோட்டுக் கொண்டேன். அந்த வருடம், மகர விளக்குக் காண மலைக்கு வந்தவர்கள் சுமார் ஆயிரத்து ஐநூறு பேர் இருப்பார்கள். ஆனால் போன வருடம் பாருங்கள்! மலைக்கு வந்த பக்தர்களின் எண்ணிக்கை 67 லட்சம். இப்படிப் பல மடங்கு பக்தர்கள் எண்ணிக்கை உயர்ந்துள்ளதே என்ன பிரயோஜனம்? மாலை போட்டுக் கொண்டவர்கள் அத்தனை பேரும் கடைப்பிடிக்கவேண்டிய விதிமுறைகளைச் சரியாகக் கடைப்பிடித்துவருகிறார்களா என்றால் இல்லையே!



ஐயப்ப மணி அய்யர்

''கார்த்திகை மாதம் முதல் தேதி மாலை போட்டுக் கொண்டு, தினமும் காலையும்மாலையும் ஸ்நானம் செய்து பக்தியுடன் ஐயப்பன் நாமத்தைச் சொல்ல வேண்டும். கருப்பு உடைதான் உசிதம். நீலம், காவி உடைகள் பரவாயில்லை. பிரமச்சரியம் காக்கப்பட வேண்டும். போலீஸ் ஸ்டேஷன், கோர்ட், இங்கெல்லாம் போகக் கூடாது. இன்றைய சூழ்நிலையில் கடைப்பிடிக்க வேண்டிய 36 விதிகளையும் கடைப்பிடிப்பது சாத்தியமில்லைதான். ஆனாலும் எத்தனை மாலை போட்டுக் கொண்டவர்கள் பீடி, சிகரெட்டும், கையுமாய் இருக்கிறார்கள். சினிமா, நாடகம் பார்க்கக்கூடாது. மதுவைத்தொடக்கூடாது: ஹோட்டலுக்கும் போகக்கூடாது. சைவ உணவுதான் சாப்பிட வேண்டும். படுக்கை தலையணை உபயோகிக்கக்கூடாது போன்ற விதிகளையும்கூடப் பலர் கடைப்பிடிப்பதில்லையே! விரத காலத்தில்கூடத் தம்மைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாதவர்கள், மாலை போட்டுக் கொண்டு சபரிமலை யாத்திரை போவது அர்த்தமில்லாதது. இப்போது 'நானும் மலைக்குப் போகிறேன்' என்று ஃபாஷனுக்காகச் சொல்லிக் கொண்டு விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் மாலைபோட்டுக்கொள்பவர்கள் கொஞ்சம் அதிகரித்துத்தான் போய்விட்டார்கள், என எனக்குப் படுகிறது.

''போதாக்குறைக்கு இந்தச் சபரிமலைசீஸனின்போது மூலைக்கு மூலை ஒலிபெருக்கி வைத்து ஐயப்பபூஜை என்று நடத்துகிறார்கள். இது பப்ளிக் நியூஸன்ஸ் மட்டுமல்ல; ஐயப்பனுக்கும் பிடிக்காத வேண்டாத 'ஷோ' என்று கூடச் சொல்லலாம்.

''ஐயப்ப பக்தர்களிடையே ஜாதி,மத,மொழி, ஏழை, பணக்காரன் என்ற பேதங்கள் கிடையாது. எல்லாரும் ஒரே இனம். அவர்களுடைய ஒரே ஆண்டவன் ஐயப்பன். அவ்வளவுதான். நான் இதுவரை பல கிறித்துவ முஸ்லிம் அன்பர்களுக்கு மாலை போட்டு இருக்கிறேன்.

''விதிகளைத் தம் சக்திக்குட்பட்டவரை ஒழுங்காகக் கடைப்பிடித்து, மலைக்குப்போகும் ஐயப்ப பக்தர்களும் பலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களுடைய தவப்பயன்தான் மற்ற ஃபாஷன் பக்தர்களையும் காக்கிறதோ என்னமோ!

''சாமியே சரணம் ஐயப்பா!''

பேட்டி: எஸ். சந்திரமௌலி

படம்: உத்ரா.


'சிகாகோ' நகரில் போலீசாருக்கு வைத்த ஒரு பரீட்சையில் இந்தக் கேள்வியும் இருந்தது:

''ஒரு பெரிய கூட்டத்தை உடனே கலைத்து ஓடவைக்க என்ன செய்வாய்?''

ஒரு போலீஸ்காரர் எழுதிய விடை:

''என் தலையில் போட்டிருக்கும் தொப்பியைக் கழற்றி எல்லோரிடமும் யாசகம் கோரி நீட்டுவேன்!''

-நா. பாலசுப்ரமணியம்


ஒப்பிட்டுப்பார்க்க, உடனொத்த பானங்களின்
விலைகள் (ரூ.). வளையாக் கலத்துப் பேக்கிங்.
நியூட்ராமுல். அமுல் படைப்பு. உச்சத்
தரத்திற்கு இதுவே உத்தரவாத நற்சாட்சி.
கோக்கோ ஆட்சி. ஆரோக்கியமிகு
அமுல் பால். அருமையான மால்ட்.
அத்தியாவசிய வைட்டமின்கள், உலோக
தாதுக்கள். ஒருங்கே பலம்பெருக்கும்
பண்புகளின் சிகரம்.
இவ்வளவுக்கும் விலை, வேறெதனையும் விட
சுமார் 4 ரூபா குறைவு.
மிடுக்குடன் நடப்பீர் நியூட்ராமுல் வீரராய்...
மிஞ்சும் பணத்தோடு.
வேறெதனையும் விட சுமார் 4 ரூபா விலை குறைவு.
நியூட்ராமுல் விலையோடு ஒப்பிட,
உடனொத்த பானங்களின் விலைகள் (ரூ.)*
500 கிராம் | 800 கிராம் | 1000 கிராம்
நியூட்ராமுல் டின் | 13.83 | – | 26.67
மால்டோவா புட்டி | 17.58 | – | –
போர்ன்விடா டின் | 17.68 | 26.97 | –
பூஸ்ட் புட்டி | 18.87 | – | –
* '81 மார்ச் நிலவரப்படி, அனுபோகியருக்கான
உச்சவிலைகள். தல வரிகள் தனி.
IS 1806
Nutramul
AMUL'S NOURISHING
இப்போது 1000 கிராம்
daCunha/81/GCM/53/TM

கடுகு பதில்கள்

✖ மா. மோகன், கோவை-38

கே. பாரதி நூற்றாண்டில் பாரதிக்கென நீங்கள் செய்யப்போகும் காரியம் என்ன?

ப: அவருக்கு யாரும் எதுவும் செய்யவேண்டியது இல்லை. அற்புதமான ஜீவனுள்ள கவிதைகளைத் தந்துவிட்டுப் போனவர். அவரது கவிதைகளை உரக்கப் படியுங்கள். இசை ஞானம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை. பாடுங்கள். புத்துணர்ச்சி ஏற்படும். மனத்தில் ஊக்கம், தெம்பு, நம்பிக்கை உண்டாகும். நான் செய்து பார்த்து அனுபவித்திருக்கிறேன்.

✖ ஒ. ராஜேந்தர், நாகப்பட்டினம்

கே. நீதி சில நேரங்களில் தர்மத்திலிருந்து தடம் புரள்கிறதே, ஏன்?

ப: சட்டங்கள் போடும் முட்டுக்கட்டைகள் தான் காரணம்.

✖ ஆர். மார்க்கண்டன், குரோம்பேட்டை

கே. பொன்மொழி என்கிறோம், சற்று தரம் குறைவானதை ஏன் 'வெள்ளி மொழி' என்று சொல்வதில்லை.?

ப: கிணற்றைத் தாண்டினான் என்கிறோம் முழுதுமாகத் தாண்டியவனை. எண்பது சதம் தாண்டியவனை அப்படிக் கூற முடியுமா? பொன்மொழி விஷயத்திலும் அப்படித்தான்.



✖ சி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்

கே. ராஜாஜி கதைகளில் காணப்படும் டிடாடிஸம் அண்மைக்கால எழுத்தாளர்களில் யாரிடமாவது உண்டா?

ப: டிடாடிஸம் என்றால் போதனைகள் என்று பொருள்படும். ராஜாஜி நல்ல போதனைகளைக் கதைகளில் புகுத்தினார். ஆனால் இன்று பல எழுத்தாளர்கள் வக்ரமான போதனைகளை கதைகளில்புகுத்துகிறார்கள். இதில் துரதிர்ஷ்டம் என்னவென்றால், புதிதாக எழுத வரும் எழுத்தாளர்களும் இப்படியெல்லாம் எழுதினால்தான் பிரசுரம் ஆகும் என்றும், பாபுலர் ஆகலாம் என்றும் கருதிப் பச்சையாகவும் கொச்சையாகவும் எழுதுகிறார்கள்.

✖ ச. முத்து, செல்கரிச்சல்

கே. கணவன், மனைவி ஒற்றுமைக்குக் காக இல்லாத குறையா, காதல் இல்லாத குறையா?

ப: என்னைக் கேட்டால் காசுதான் என்பேன். பணம் இருந்து விட்டால் விரிசல்களுக்கு அதிக வாய்ப்பில்லை. சில சமயம் பணத்தின் காரணமாகவே அந்நியோந்நியம் அதிகரிக்கிறது. பணக்காரர்கள் தான் கூட்டுக் குடும்பமாக வாழ்கிறார்கள் என்பதைக் கவனித்திருக்கிறீர்களா?

✖ எம். எஸ். ராமசந்திரன், திருவாரூர்

கே. சில நாடி ஜோஸ்யங்களில் நமது முற்பிறப்பு முதலியவை சொல்கிறார்களே, கேட்டிருக்கிறீர்களா?

ப: கேட்டிருக்கிறேன். கையகல ஓலைச் சுவடியை வைத்துக் கொண்டு அரை மணி நேரம் விடாமல் படிப்பதுதான் சந்தேகத்தை எழுப்புகிறது. சுவடியில் உள்ள எழுத்துக்கள் புரியாத லிபியில் உள்ளன.

✖ ராஜூ ராமநாதன், பெங்களூர்

கே. உங்கள் பதில்கள் இலக்கியத்தரமாக இல்லையே ஏன்?

ப: காரணம், தலைப்பில் கடுகுவின் இலக்கிய பதில்கள் என்று போடாததுதான். இன்று 90 சதவிகித இலக்கியங்களைத் தலைப்பினால் இலக்கியமாக்கி விடுகிறார்கள். இலக்கியப் பத்திரிகைகள் என்று அச்சிட்டு விட்டுப் பல அபத்தங்களைப் பிரசுரிப்பதுடன் அவைகளைப் பாராட்டும் கடிதங்களையும் கருத்துரையாடல்களையும் போட்டு இலக்கியம் படைத்து விட்டதாகப் பெருமிதம் அடைகிறார்கள். சௌகரியப்பட்டபோது வீட்டுக்கு வாருங்கள். மணிக் கணக்கில் இது பற்றிப் பேசுகிறேன்.

✖ சரோஜா சக்ரவர்த்தி, வில்லிவாக்கம்

கே. மனிதனின் சிறப்பான பலம் என்ன?

ப: சிந்திக்கும் திறன்தான். அவனுக்கு எத்தனையோ குறைபாடுகள் பலமின்மை, இயலாமை உள்ளன. சிந்திக்கும் திறனைக் கொண்டு அவன் தீர்வு கண்ட பிரச்னைகள் ஏராளம்; வெற்றி கண்ட விஷயங்கள் ஆயிரமாயிரம்.


✖ திருமதி கடுகு, புதுதில்லி

கே. இந்தக் கடுகு பதிலை எப்போது நிறுத்திக்கொள்ளப் போகிறீர்கள்? உன் வீட்டுக்காரர் ஏன் இப்படி அறுக்கிறார் என்று எல்லாரும் கேட்கிறார்கள். கடுகு பதிலை நிறுத்தாவிட்டால் நான் என் பிறந்தகமே போகப் போவதில்லை!

ப: அய்யய்யோ! இந்த வாரத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்!

பரிசு பெறுபவர் :

சி. சௌரிராஜன்,
156, கீழச்சித்திரை வீதி,
ஸ்ரீரங்கம்-620 006



இந்தப் பொங்கல் நன்னாளை ஆப்கோ ஆடைகளுடன் மகிழ்ச்சிகரமாகக் கொண்டாடுங்கள்!



பொங்கல் திருநாள் கொண்டாட்டங்கள் — வானத்தில் உயரே உயரே பறக்கும் காற்றாடிகள், நாடோடிப் பாடல்கள், நடனங்கள் — எங்கும் எவ்விடத்திலும் ஒரே ஆனந்த மயம்!

இந்த சீசனில் புதுமைப் பச்சை, வானத்து நீலம், செங்கல் வண்ணச் சிவப்பு, தங்க மஞ்சள், இன்னும் பலப்பல வண்ணங்களில் கண்ணைக் கவரும் ஆப்கோ டிசைன்கள், கிட்டுகின்றன. ஆப்கோ ஷர்ட்டிங், புடவைகள் ஆடை அணிமணிகள், ஆயத்த அணிகலன்கள்; பிரிண்டட் பாலியஸ்டர், கட்டம் போட்ட கைத்தறி ஆடைகள், பளபளக்கும் பட்டாடைகள், வண்ணத் துணிகள்,

மற்றும் ஆப்கோ ஆடைகளை அணிந்து திருவிழாக் கொண்டாட்ட இன்பத்தில் மூழ்குங்கள்!

20%
Rebate
upto
13·1·82

apco fabrics

KIRON/APCO/8112

அரசவையில் பாஞ்சாலி!



அரசவையை அடைந்ததும்அங்குபாண்டவர்கள் வீற்றிருக்கக் கண்டாள் பாஞ்சாலி. அவர்களைப் பார்த்து, ''விதியோ! கணவரே!'' என்று விம்மியழுதாள்.

தருமன் வெட்கத்தால் தலை குனிந்தான். எஞ்சிய நால்வரும் தங்கள் குன்று மணித் தோள்களைக் குறிப்புடனே நோக்கினார்கள். கொண்டவர்கள் மௌனிகளாகி விட்டதால், அவையில் உள்ள சான்றோர்களைப் பார்த்து, பாஞ்சாலி பேசுகிறாள்:

கேள்வி பலவுடையோர்
   கேடிலா நல்லிசையோர்,
வேள்வி தவங்கள்
   மிகப்புரிந்த வேதியர்கள்,
மேலோர் இருக்கின்றார்
   வெஞ்சினமேன் கொள்கிலரோ?''

சான்றோர்களும் மௌனிகளாகளாகிவிட்டனர். துச்சாதனன், ''தாதியடி தாதி'' என்று நீதுரைகள் கூறினான். பாஞ்சாலியை அவமதித்துவிட்டோம் என்னும் ஆணவத்தால் கர்ணன் சிரித்திட்டான். திரௌபதிக்குத் தொல்லை தந்த துச்சாதனனைச் சகுனி புகழ்ந்தான்.

வீட்டுமன், நீண்ட சொற்பொழிவுக்குப் பின்,

''செல்லும் நெறியறியார்
   செய்கையிங்கு பார்த்திடிலோ
கல்லும் நடுங்கும்,
   விலங்குகளும் கண்புதைக்கும்
செய்கை அநீதி யென்று
   தேர்ந்தாலும் சாத்திரந்தான்
வைகு நெறியும்
   வழக்கும் நீ கேட்பதனால்
ஆங்கவையும் நின்சார்பில்
   ஆகா வகையுரைத்தேன்
தீங்கு தடுக்கும்
   திறமிலேன்.''

என்று சொல்லிவிட்டு வெட்கத்தால் தலை கவிழ்ந்தான்.

துரியோதனன் அவையிலே, சகுனி இருந்தது போல் சான்றோனை வீட்டுமனும் இருந்தான். துர்க்குணம் படைத்த துச்சாதனன் இருந்தது போல, நற்குணம் கொண்ட துரோணரும் இருந்தார். விதுரன் இருந்தான். விகர்ணனும் இருந்தான். இவ்வளவு பேரும் இருந்தும் சகுனியின் கைதான் துரியோதனன் அரசவையிலே ஓங்கியிருந்தது. அதனால் நீதி கிடைக்கவில்லை பாஞ்சாலிக்கு! அவள் தொடுத்த வழக்குத் தோற்றுப் போய் விட்டது. ஆயினும் பாஞ்சாலி விடவில்லை.

'பேயரசு செய்யின்
   பிணம் தின்னும் சாத்திரங்கள்'

என்று சொல்லி, வீட்டுமன் எந்தச் சாத்திரத்தைச் சான்று காட்டித் தீர்ப்பு வழங்கினானோ, அந்தச் சாத்திரத்தையே சாடுகிறாள்.

இறுதியாகத் தனக்கு நீதி வழங்கத் தவறிய அவையினரைப் பார்த்துக் கைகூப்பித்தொழுகிறாள்.

''பெண்டிர் தமையுடையீர்!
   பெண்களுடன் பிறந்தீர்
பெண் பாவமன்றோ?
   பெரிய வசை கொள்வீரோ?
கண் பார்க்க வேண்டுமென்று
   கையெடுத்துக் கும்பிட்டாள்
அம்பு பட்ட மான்போல்
   அழுது துடிதுடித்தாள்!

கூந்தலைப் பிடித்த பிடியை விட்டுவிட்டுப் பாஞ்சாலியின் ஆடையினுடைய முந்தானையைப் பிடித்திழுத்து அவளை நிர்வாணமாக்க முயலுகிறான் துச்சாதனன்.

ஆடை குலைவுற்று
   நிற்கிறாள் — அவள்
ஆவென் றழுது
   துடிக்கிறாள் — வெறும்
மாடு நிகர்த்த
   துச்சாதனன் — அவள்
மைக்குழல் பற்றி
   இழுக்கிறான் — இந்தப்
பீடையை நோக்கினன்
   பீமனும் — கரை
மீறி யெழுந்தது
   வெஞ்சினம் — துயர்
கூடித் தருமனை
   நோக்கியே — அவன்
கூறிய வார்த்தைகள்
   கேட்பீரோ?''

வீமன் வெகுண்டான். அதுவரை அண்ணன் தருமனுக்காகத் தான் காட்டிய அடக்கத்தைத் துறந்தான். 'உன்னும் அல்லவா

பாஞ்சாலிக்கு இந்த அவமதிப்பு!' என்று எண்ணியவனாகித் தருமனைப் பார்த்துப் பேசுகின்றான். இல்லை. ஏசுகின்றான்.

....பாஞ்சாலன்
அவன் சுடர் மகளை அண்ணே
ஆடி இழந்து விட்டாய்
தவறு செய்து விட்டாய் — அண்ணே
தருமம் கொன்று விட்டாய்

என்று கூறிக்கொண்டே 'வந்த வீமன் சினத்தின் சிகரத்துக்கே சென்று விடுகிறான்! தருமத்தின் நாயகனான யுதிட்டிரனை பாஞ்சாலியைச் சூதில் தோற்ற குற்றத்துக்காகப் பழி வாங்கவும் துடிக்கிறான்.

''இது பொறுப்பதில்லை — தம்பி!
எரிதழல் கொண்டுவா
கதிரை வைத்திழந்தான் அண்ணன்
கையை எரித்திடுவோம்.''

வீமனின் ஆவேசச் சொற்பொழிவைக் கேட்டு அர்ச்சுனன் திடுக்கிட்டுப் போனான். 'மாற்றார் முன்னிலையிலா மூத்தோனைப் பழிவாங்க நினைப்பது?' என்று கருதியவனாகி, வீமனுடைய சினத்தைத் தணிக்கும் வகையில் பார்த்தன் பேசுகிறான்:

''மனமாரச் சொன்னாயோ? —
வீமா! என்ன
வார்த்தை சொன்னாய்?
எங்கு சொன்னாய்? யாவர் முன்னே?

இப்படிக் கூறிய வில் வீரனான விஜயன், நடந்துவிட்ட தவறுக்குச் சமாதானம் சொல்லவும் முயன்றான்:

''தருமத்தின் வாழ்வதனைச்
சூது கவ்வும்:
தருமம் மறுபடி வெல்லும்
எனும் இயற்கை
மருமத்தை நம்மாலே
உலகம் கற்கும்....
...கட்டுண்டோம் பொறுத்திருப்போம்
காலம் மாறும்...

அர்ச்சுனனின் அறிவுரையைக் கேட்ட பின் வீமன் சினம் தணிந்தான். கண்களில் நீர் மல்க அண்ணன் தருமனிடம் மன்னிப்புக் கேட்பான் போல், இருக்கையிலிருந்து எழுந்து இரு கைகளையும் கூப்பி வணங்கி நின்றான்.

காந்தாரி பெற்ற நூற்றுவரிலே இளையவனான விகர்ணன் என்பான் நீதிமான்! விதுரனுக்கு அடுத்தபடியாக விகர்ணன் ஒருவன் தான் பாஞ்சாலிக்கு இழைக்கப்படும் அவமானத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தான்.

அதைக் கேட்டதும், அதுவரை அரசவையில் சொரணையற்றுக் கிடந்த சிற்றரசர்களுக்கும் சிறிது சொரணைபிறந்து விட்டது. அதனால் அவர்களிலே சிலர் பொதுப்படப் பேசினார்கள். சிற்றரசர்களின் பேச்சை வருணிக்குமிடத்து,

''எழுந்திட்டார் சில வேந்தர்:
இரைச்சலிட்டார்''

மாபெரும் வீரரான நெப்போலியனுக்கு, விசித்திரமான, ''ஆயிலோரோபோபியா'' என்னும் அலர்ஜி நோய் இருந்தது. இதன் காரணமாகப் பூனைகளைக் கண்டால் நெப்போலியன் பயந்து அலறுவாராம்! இதனால் பாரீஸ் அரண்மனையைச் சுற்றிப் பூனை நடமாட்டம் இல்லாமல் அதிகாரிகள் கண்காணித்து வந்தனர்!

- எல். ரவிசங்கர்

என்கிறார் பாரதியார். இந்நிலையிலே, துரியோதனன் கண்டெடுத்து வளர்த்தவனை— தேர்ப் பாகன் மகன் என்றே தீர்ப்பாகிவிட்டவனை — கர்ணன், ''யாரடா பணியாள் வாராய்!'' என்று குரல் கொடுத்துப் பணியாளை அழைத்து,

''மார்பிலே துணியைத் தாங்கும்
வழக்கங்கி முடியார்க்கில்லை
சீரிய மகனுமல்லன்:
இவரைக் கலந்த தேவி''

என்று பாஞ்சாலியைப் பழித்துப் பேசிவிட்டு,

''பாண்டவர் மார்பிலேந்தும்
சீரையும் களைவாய்; தையல்
சேலையும் களைவாய்!''

என்று சொன்னான்.

கர்ணனால் ஏவப்பட்ட பணியாள் பாண்டவர்களை நெருங்கு முன்னர், அவர்களே தங்கள் மேலாடையை எடுத்து அவையில் எறிந்தனர். இதனை,

''தெவ்வர் கண்டஞ்சும் மார்பைத்
திறந்தனர் துணியைப் போட்டார்!''

என்ற வாசகத்தால் பாரதியார் வருணிக்கிறார். ''பகைவர் கண்டஞ்சும் மார்பு''— என்ன சுவையான வாசகம்!

அடுத்து, எவரும் தனக்கு ஆணையிடாத நிலையிலே கர்ணன் ஏவிய பணியாளுக்கு மாற்று ஆளாகத் துச்சாதனன் பாஞ்சாலியை அணுகுகிறான். அவளுடைய துகிலை உரிய!

துச்சாதனன் எழுந்தோடிப் போய் திரௌபதியை நெருங்கினானோ இல்லையோ, 'அச்சோ தேவர்களே!' என்று அலறியவனாக நீதிமான் விதுரன் தரையில் சாய்ந்து விழுந்து விட்டான்.

துச்சாதனனோ வெறி தலைக் கேறியவனைப் போலப் பேய் மகனான அவன் திரௌபதியின் துகிலை உரியத் தொடங்கினான். அப்போது பாஞ்சாலியின் நிலையை,

''உட்சோதியிற் கலந்தாள்; - அன்னை
உலகத்தை மறந்தாள், ஒருமையுற்றாள்''

என்று வருணிக்கிறார் வரகவி பாரதியார். இதற்கு மேல் துரியோதனனின் அவையில் உள்ளோரெல்லாம் தன்னைக் கைவிட்டு விட்ட நிலையிலே கண்ணனிடம் பாஞ்சாலி அடைக்கலம்புகுகிறாள். தன்னை மறந்தவளாகி, துச்சாதனனிடமிருந்து தன் மானத்தைக் காத்துக் கொள்ளத் தன் ஆடையைப் பிடித்துக் கொண்டிருந்த பிடியைக் கைவிட்டு, தன் இரு கரங்களையும் சிரமேற் கூப்பிய வண்ணம் பாஞ்சாலி பரந்தாமனை வழிபடுகிறாள்!

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani, Layout Artist: Kalpana, Editor: K. Rajendran


The fragrance of choice coconuts in every drop.
Yendelux
coconut oil
என்டிலக்ஸ்
தேங்காய் எண்ணெ
15, 4 கிலோ டின்களிலும் 1 கிலோ 500, 200 கிராம் பாலிதின் பாட்டில்களிலும் கிடைக்கிறது.
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
உரிமையாளர்கள் :
ஸ்ரீ நாகலிங்க விலாஸ் ஆயில் மில்ஸ்
கொல்லம்—கோளா
போன் : ஆபீஸ் : 2244, 4484. மில்ஸ் : 2266, 4611
Trade Enquiries Solicited from wholesale dealers only

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka